# நந்தாவிளக்கு

ஆர். ஷண்முகசுந்தரம்

...றுமலர்ச்சியின்

...லக்கிய முன்...ணி

# "...ழியன்"

ஆசிரியர்

...ஜகோபாலன், B.A.

ஆறுமாத சந்தா ரூபாய் 3-4-0

வருட சந்தா ரூபாய் 6.

★

விபரங்க...

## கி... லிமிடெட்

து... சி ஜில்லா

அறிவு அபிவிருத்தி சங்கம்
மதுரை.
பால ஷண்முகானந்த சபா.

Complimentary Copy

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.

## ஐந்து புதுமலர் வெளியீடுகள்.

| | | |
|---|---|---|
| 1. | அற்புத ரசம் | 0- 6-0 |
| 2. | ஜமீந்தாரிணி | 0-12-0 |
| 3. | கர்வ பங்கம் | 0-12-0 |
| 4. | நந்தா விளக்கு | 2- 0-0 |
| 5. | பூவும் பிஞ்சும் | 2- 8-0 |


மேலே கண்ட ஐந்து புதுமலர்
நிலையப் புதுப் புத்தகங்களுக்கும்
விற்பனை உரிமையாளர்:
கிராம ஊழியன் பிரஸ் லிமிடெட்
துறையூர்-திருச்சி ஜில்லா

புது மலர் 11

# நந்தா விளக்கு

(சிறுகதைகள்)

ஸ்ரீ பால ஷண்முகானந்த சபா.

ஆசிரியர் :

ஆர். ஷண்முகசுந்தரம்

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.
தமிழியல் துறை

புதுமலர் நிலையம்
கோயமுத்தூர்

பதிப்புரிமை]

[விலை ரூ. 2

முதற்பதிப்பு : பிப்ரவரி 1944

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 496
நன்கொடை எண்: 496



'முத்தமிழ்க் கலா வித்துவரத்தினம்'
அமரர் அவ்வை சண்முகம் அவர்கள் நினைவாக
மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்துக்கு
அன்புடன் அளிக்கப்பட்டது.

**27-1-1979**

அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்

கமர்ஷியல் பிரிண்டிங் அன் பப்ளிஷிங் ஹவுஸ், ஜி.டி., சென்னை.

மதுரை காமராசர்
அ...
தி.க.சண்மு...

# வெற்றி

'இந்த நிலவுக்கு இன்று இத்தனை வேகம் எங்கிருந்து வந்தது? பொங்கிப் பொங்கி என் அமுதவெள்ளத்தைக் கொட்டிக்கொண் டிருக்கிறது? 'இள ... லை கண்டே நிலவு பிளந்தெறியும் காலம்' என்று ... வு ரொம்பவும் சரியாக இருக்கிறதே! பெண்ணுடன் இந் நிலாப் பிறந்ததில்லைப்போ லிருக்கிறது? அப்படிப் பிற... திருந்தால் என்னைக் கண்டு சற்று இரக்கம் காட்டாமல் இருக்குமா?"

இவ்விதம் ரஞ்சிதத்தின் உள்ளத்தில் எண்ணங்க... எழுந்தன. அவள் மனக்கடலில் எத்தனை எத்தனையோ உணர்ச்சி அலைகள் பெருக்கெடுத்தது. "அடடா சொன்ன சொல் தவறுகிறவர்களும் நம் நந்திவர் நாட்டி... உண்டா?" என்று வாய்விட்டுச் சொன்னாள். அவள் வார்த்தை முடியுமுன்பே, "என்ன சொன்னாய்?" ...ன்று சிரித்தபடி கேட்டுக்கொண்டு இளநந்தி அங்கு வந்து சேர்ந்தான்.

...ரல்...பான்ற நிலவில் மேன் மாடியில் விரித்த ...ன்மேல் ரஞ்சிதம் உட்கார்ந்திருந்தாள். ...ச பொழியும் வீணை அவளருகே சாய்ந்... தது. என்றும்போல் அவள் அன்று அல... ...ள்ளவில்லை. என்னவோ கனவுலகி... லயித்திருப்பவள் மாதிரி தன்னை மறந்திருந்தாள்.

இந்தக் கோலத்தில் ரஞ்சிதத்தை காண்போம் என்று இளநந்தி நினைக்கவேயில்லை. பதட்டத்துடன் "என்ன சங்கதி?" என்று கேட்டான்.

அவனுடைய குரலில் உள்ள இயற்கையான விளையாட்டும் வேடிக்கையும் மாயமாய் மறைந்துவிட்டது. தலைகவிழ்ந்தபடியே "சங்கதியா?" என்று மட்டும் சொல்லி மௌனமாகி விட்டாள். அவள் கண்களில் நீர் நிறைந்தது.

இளநந்திக்கு என்ன செய்வதென்றே தோன்றவில்லை. திடீரென்று அவள் மனம் துயரக்கடலில் மூழ்கக் காரணம் என்ன? எதை உத்தேசித்து அவள் அவ்விதம் இருக்கிறாள் என்பதை அவனால் ஊகித்து உணர முடியவில்லை. இனிய இரவிலே இளம் விரல்களிலிருந்து எழுந்து நெஞ்சைக் கொள்ளை கொள்ளும் கானத்தில் ஐக்கியமாகிவிட அவன் வந்தான். ஆனால் அந்த இசைக் குயிலோ சோகச்சித்திரமாகக் காட்சி யளிக்கிறாள். இளநந்தி மௌனமாக வெளியே பார்த்தான். இயற்கை அன்று தெய்விக அழகுடன் விளங்கியது. 'வாழ்க்கை வாழ்வதற்கே, அழகு அனுபவிப்பதற்குத் தான்; வனப்பு எல்லோரையும் 'வா' வென்று அழைக்கிறது. இந்த நுட்பமான எழிலோசைக்கு செவி சாய்ப்பவனே பாக்கிய சாலி' என்று யாரோ சொல்வது போலிருந்தது.

நிலவு சொரியும் மாவிளந்தளிர்களிடையே குயில்கள் 'குக்கூ' வென அங்கு மிங்கும் கூவிக் கொண்டிருந்தன. அந்தக் குரலிலே என்னவோ சோகம் கலந்திருப்பது போல் அவனுக்குப்பட்டது. குயிலின் குரலில் மட்டுமா? எங்குமே ஒரு தனிச்சோர்வு நிறைந்திருப்பதாகவே அவனுக்குத் தோன்றியது.

ரஞ்சிதமும் அதே நிலையில்தான் இருந்தாளா? மலர விழித்தப்படி அவள் கரியகண்கள் திசைக்கோட்டுக் கப்புறம் எதைத் தேடுகின்றன?

"ரஞ்சிதம், நீ இப்படியே சிலைபோல் உட்கார்ந்து கொண்டிருந்தால் நான் எழுந்து போய்விடுவேன்" என்று இளநந்தி சொன்னான். பிறகு என்னவோ

யோசித்துக்கொண்டு, "இன்று ஒரு புதுக்கவி இயற்றி யிருக்கிறேன். உனக்குக் கவிதை என்ருல் உயிர் ஆச்சே. பாடிக் காட்டுவோம் என்று வந்தேன். எத்தனையோ கஷ்டப்பட்டு ஒற்றர் கண்களில் மண்ணைத் தூவி விட்டு வந்தேன். இவைகள் உனக்குத் தெரியாதா? குறிப்பிட்ட நேரத்திலேயே வரமுடிகிறதா? நீ தான் பேசமாட்டே னென்கிருயே. சரி, போகட்டுமா?" என்று சொல்லிக் கொண்டே இளநந்தி அங்கிருந்து எழுந்தான்.

"இல்லை இல்லை, உட்காருங்கள்" என்ருள் ரஞ்சிதம். இளநந்தியின் முகத்தில் புன்னகை அரும்பியது. "எனக்கு உங்கள் மேல் வேறு என்ன கோபம்? பாட்டு பாட்டு என்று நித்தம் பாடிக் கொண்டிருந்தால் சாப்பாட்டிற்கு வந்துவிடுமா? உங்கள் கவிதையும், காவியமும் யாருக்கு வேண்டும்? ஆனல் நாம் தான் எதற்காக வாழ்கிறேம்? நாம் விரும்புவது என்ன—அது? கவிதை அழகுடன் சொல்லுங்கள் பார்ப்போம்?" என்று சொல்லி நிறுத்தினுள் ரஞ்சிதம்.

இளநந்தி ஒரு கணம் யோசித்தான். பிறகு மெதுவாக, "உண்மைதான். வாழ்க்கை சும்மா உண்பதிலும் உறங்குவதிலும் கழிந்து போவதை விரும்புகிறவன் சாமான்ய மனிதன். ஆனல் நாமோ........"

"அதிருக்கட்டும்"

"சொல்வதற்குள் அவசரப் படுகிருயே? நான் முன் பின்யோசியாமல் பாட்டுக்கட்டிக் கொண்டு திரிவதாக நீ எண்ணுகிருய். நான் பாடுகிறேன். யாருக்காக? அவர் இன்னம் உணரவில்லையே? என்னேரமும் என் உள்ளம் பண் இசைத்துக் கொண்டே இருக்கிறது. எதற்காகத் தெரியுமா? அதை உன்னல் கற்பனை கூடப் பண்ண முடியாது. அந்தப் பாடல்கள்தான் உன்னை ராணியாக, இந்த தேசத்தின் அரசியாக ஆக்கப்போகிறது. அதைத் தவிர்த்து வேறு ஒரு சக்தியும் இக்காரியத்தைச் சாதிக்க

முடியாது. ஆனால் இதெல்லாம் உனக்குப் புரியவா போகிறது!"

"என்ன, என்ன? விளக்கமாகச் சொல்லுங்கள். விடுகதைபோல் இருக்கிறதே உங்கள் பேச்சு" என்றாள் ரஞ்சிதம்.

"இப்போதைக்கு அப்படித்தான் இருக்கும்" என்றான் இளநந்தி. கொஞ்சம் பொறுத்து, "ரஞ்சிதம், என் அண்ணாவின் மனப்பக்குவத்தை உன்னால் உணர முடியாது. நீ மட்டுமா? இந்த நாட்டிலுள்ள யாருமே நம் நந்திவர்மனின் மனதைத் தெரிந்துகொள்ள முடியாது. அவர் ஒரு கலைஞர், பரமரசிகர்."

"அப்படிச் சொல்லுங்கள்! கலைஞர்கள் மனதைத் தெரிந்துகொள்வது ரொம்பக் கஷ்டமான காரியம் என்பது எனக்கு வெகுநாளாகவே தெரியுமே. உங்களோடு இத்தனை நாள் பழகிய பின்பும் அதைத் தெரிந்து கொள்ளாதிருந்தால் என்னைப்போல் அப்பாவிப் பெண் இந்த உலகத்தில் யாருமே இருக்க முடியாதல்லவா?" என்றாள் ரஞ்சிதம்.

"விளையாட்டு இருக்கட்டும்" என்று சொல்லச் சொல்ல ரஞ்சிதம் இடையே தடுத்து, "ஏது ஏது? அருமையான சங்கதிகள் எல்லாம் இன்றைக்குத் தெரிந்துகொள்ளலாம்போ லிருக்கிறதே! உங்கள் அண்ணா பாவம் வருகிற புலவர்களுக்கு பொன்னும் மணியுமாக அள்ளி அள்ளிக் கொடுப்பதோடு சும்மா இருந்து விடுகிறார் என்றல்லவா நினைத்தேன். அவர்கூட ஒரு கலைஞரா? எங்கே அவர் பாடியது ஒன்றைப் பாடிக் காட்டுங்கள் பார்ப்போம்" என்றாள் ரஞ்சிதம்.

இளநந்தி உற்சாகமாக ஆரம்பித்தான். "ரஞ்சிதம், கவி இசைக்கிறவன் மட்டும் கலைஞன் அல்ல. அனுபவிக்கிறவனும் கலைஞன்தான். ஆம், எல்லோராலும் அனுபவித்துவிட முடிகிறதா? ஆனால் உனக்கு இவைகள் எல்-

லாம் விளங்காது. ஒன்று மட்டும் சொல்லி நிறுத்திக் கொள்கிறேன். என் தமையன் கலைஞர்களுக்கெல்லாம் பெரிய கலைஞன். மற்ற யாருக்குமே இதன் உண்மை தெரியாது. அவர் மனம் எனக்கு பளிங்குபோலத் தெரியும். நாட்டை அவர் ஆண்டுகொண்டிருந்தால் என்ன ? அவர் மனம் எனக்குத் தெரியாமலா போய்விடும் ?'' என்றான்.

அப்போது இளநந்தியின் முகத்தில் என்னென்னவோ உணர்ச்சிகள் பிரதிபலித்தன. ரஞ்சிதம் வேறு ஒன்றும் பேசாமல் வீணையை எடுத்து மீட்டத் தொடங்கினாள்.

அவ்வினிய இரவிலே கானலோகத்தில் எவ்வளவு நேரம் அவர்கள் மெய்மறந்து இருந்தார்கள் என்பதைச் சொல்ல முடியாது. நெடுநேரத்திற்குப் பிறகு, "நாளைக்கு அரண்மனைக்குப் போவதை மறந்து விடாதே ரஞ்சிதம்'' என்றான் இளநந்தி.

"ஆமாம் பார்த்தீர்களா? அதற்குள் பதினைந்துநாள் ஆகிவிட்டதே! ஆம், அரசர் சொன்ன கெடுப்படி நாளை போகவேண்டும்'' என்றாள்.

"எங்கே இன்னொரு தடவை என் அண்ணாவைச் சந்தித்த கதையைச் சொல்லு. சிரிக்காதே ரஞ்சிதம். எனக்கு அது ஒரு இனிய கதையைப் போலத்தான் இருக்கிறது. கும்மென்ற இருட்டு. அந்த இருட்டிலே நகர் சோதனைக்கு அவர் வந்தார். அப்புறம்! உம், வந்தார். பாடிக்கொண்டிருந்தாய். என்ன பாட்டு? ஞாபகம் வருகிறது. 'செந்தழலின் சாற்றைப் பிழிந்து செழுஞ்சீதச் சந்தனம் என்றாரோ தடவினார்' ஆகா! என் பாடலே எனக்கு எத்தனை ஆனந்தமாக இருக்கிறது. இதைக் கேட்டதும் என்ன சொன்னார்? 'அப்படித் தடவியது யார்?' என்றார். என்ன ரஞ்சிதம்!.........இனி நான் சொல்ல மாட்டேன். நீதான் மேலே நடந்த விவரத்தைச் சொல்ல வேண்டும்'' என்று களிவெறியோடு சொல்லி நிறுத்தினான் இளநந்தி.

இவ்வளவு நேரம் சிரித்தபடி கேட்டுக்கொண்டிருந்த ரஞ்சிதம். "நீங்கள்தான் மிச்சத்தைச் சொல்லி விடுங்களேன், இனிச் சொல்வதற்கு என்ன இருக்கிறது? எல்லாம்தான் சொல்லிவிட்டீர்களே! அப்புறம் அரண்மனைக்கு வந்து இந்த அருமையான பாடல்களைப் பாடிக் காட்டவேண்டும் என்று சொன்னார். அவ்வளவுதான்" என்றாள் அவள்.

"சரி சரி, போ! நானாகக் கேட்டால் இப்படித்தான் சொல்வாய். நீயாக ஆரம்பித்தால் விடிய விடியச் சொல்லிக்கொண்டே இருப்பாய். அதிருக்கட்டும் ரஞ்சிதம். இன்று பாடியதைப் போலவே நாளை அரச சபையிலும் அற்புதமாகப் பாடவேண்டும்" என்றான்.

"அப்படியே ஆகட்டும்" என்றாள். அவளால் சிரிக்காமலிருக்க முடியவில்லை.

* * *

அரண்மனை மண்டபத்தில் கம்பீரமாக நந்திவர்மன் வீற்றிருந்தான். என்றுமில்லாதபடி அழகுடன் அன்று சபை அலங்கரிக்கப்பட் டிருந்தது. எங்கே பார்த்தாலும் வித விதச் சித்திரங்களும், கைதேர்ந்த சிற்பிகளால் செய்த சிற்பங்களும் பார்ப்போர் மனசை அள்ளிக்கொண்டது.

மந்திரிகளும் புலவர்களும் ஒருபுறம் அமர்ந்திருந்தார்கள். அரசியும் மற்றப் பெண்களும் எதையோ ஆவலுடன் எதிர்நோக்கிக்கொண் டிருந்தார்கள். அவர்கள் பார்வை அடிக்கடி வாயிற்புறம் சுழன்றுகொண்டே இருப்பதிலிருந்து அது நன்கு தெரிந்தது. பொதுவாக அங்கு கூடியிருந்த எல்லோருடைய உள்ளங்களிலும் விவரிக்க முடியாத ஒரு பரபரப்பு நிறைந்திருந்தது என்பதை அவர்களுடைய ஒவ்வொரு செய்கையும் எடுத்துக் காட்டியது.

அரசன் அமர்ந்திருந்த இடத்துக்கு நேர் எதிராக உள்ள பெரிய வாயில் வழியாக மெட்டிகளின் மெல்லொலி கேட்டது. அவ்வினிய நாதம் வந்த திக்கிலே

எல்லோருடைய பார்வையும் சென்றது. அழகே உரு வெடுத்ததுபோல் வந்துகொண்டிருந்தாள் ரஞ்சிதம்.

அதற்கு முனபும் அந்தச் சபையிலுள்ளவர்கள் அவளைப் பார்த்திருக்கிருர்கள். ஆனல் இன்று அவளிடம் பிரகாசிக்கும் அழகைப்போல் இதற்குமுன் கண்டதே இல்லை. எங்கோ ஒரு கற்பனை உலகிலிருந்து தோன்றிய அலங்காரிபோல் அவ்வளவு எழிலுடன் அவள் காட்சி அளித்தாள்.

அரசன் புன்னகையுடன் பாடும்படி உத்திரவிட்டான். அவ்வளவுதான். அடடா; ஊற்றிலிருந்து தன்னிச்சையாகப் பெருகும் வெள்ளம்போல் அவள் குரலிலிருந்து இன்னிசை எழுந்தது. தன்னை மறந்து அவள் பாடிக்கொண்டே இருந்தாள். மந்திரத்தால் கட்டுண்ட நாகம்போல் அங்கிருந்த அத்தனை பேரும் தங்களை மறந்து விட்டார்கள். கை தட்டலும், "ஆகா, அற்புதம்" என்னும் முழக்கமுமே அந்த மண்டம் முழுதும் நிறைந்திருந்தது. ஆனல் இந்தக் கூட்டத்திலும் ஒரேஒரு சீவன் மட்டும் சோகத்தால் வெந்து தவித்துக்கொண்டிருந்த தென்ருல் அது ஆச்சரியந்தான். அந்த ஆச்சரியத்திற்குக் காரணம் இல்லாமலும் இல்லை. பிரதம மந்திரி நுட்பமான புத்தியுடையவர்தான். கவியை அனுபவிக்கும் உள்ளம் படைத்திருந்தும் அன்று அவருக்குக் கவிகள் வேப்பங்காயாக இருந்தது. அதுமட்டு மல்ல. எப்படியாவது உடனே இவள் பாடுவதை நிறுத்திவிட வேண்டுமென்று துடித்துக்கொண்டிருந்தார். எல்லாம் அரசன் நன்மையின் பொருட்டுத்தான்!

நந்திவர்மன் களி மிகுதியால் அப்படியே சாய்வதும், பிறகு சுயநிலை வந்து மகிழ்ச்சியுடன், "இன்னம் பாடு, பாடிக்கொண்டேயிரு பாடிக்கொண்டே இரு. ஆகா! தேவ வாக்குத்தான்" என்று உற்சாகப் படுத்துவதுமாயிருந்தான். தான் அநுபவிப்பதில் மட்டும் வேந்தனுக்கு எப்போதும் திருப்தி ஏற்படுவதில்லை. தன்னைச்சேர்ந்த

மற்றவர்களும் ஆனந்தப் படுவதில்தான் அவனுக்கு அள வற்ற திருப்தி.

ஆகையால் பாட்டைக் கேட்டபடியே சபையைக் கூர்ந்து கவனித்துக்கொண்டு வந்தவன் பிரதம மந்திரியின் முகத்தைப் பார்த்ததும் திடுக்கிட்டுப் போய்விட்டான். சொல்ல முடியாத வேதனை மந்திரி முகத்தில் பரவி இருந்தது.

"மந்திரி! என்ன இது?" என்று அரசன் திகைப்புடன் கேட்டான்.

அப்போது ரஞ்சிதம் மாறி மாறி வரும் காலத்தைப் பற்றிய கருத்தமைந்த பாடல் ஒன்றைப் பாடிக்கொண்டிருந்தாள். "எங்கே பார்த்தாலும், இயற்கை தன் வனப்பை அள்ளிச் சொரிந்துகொண்டே இருக்கிறது. மரஞ், செடி கொடிகளெல்லாம் புது வாழ்வில் மூழ்கி, மலர்ந்து இருக்கிறதே. ஆனல், நான் மட்டும் நாயகன் வரவை எண்ணி எண்ணியே ஏங்கிக்கொண்டிருக்கிறேனே! ஐயோ; இந்தத் துயர இரவு இப்படியே நீண்டு கொண்டுதான் இருக்குமோ! ஒருவேளை இது விடியாமலேயே போய்விடுமோ?" என்ற அர்த்தமுள்ள அந்தப் பாடலைக்கேட்ட சபையிலுள்ளவர்கள் அத்தனைபேரும் மயக்க மடைந்துவிட்டார்கள் என்றுதான் சொல்லவேண்டும். ஆனல் மந்திரி மட்டும் அசைவற்றிருந்தார். அரசன் கேள்வி அவர் செவியில் விழுந்ததோ என்னவோ?

திடீரென்று ஆவேசம் வந்தவர்போல் மந்திரி எழுந்தார். 'விறு விறு' என்று அரசன் அருகில் சென்ருர். கண் கொட்டாமல் அங்குள்ளவர்கள் மந்திரியின் செய்கையைப் பார்த்துக்கொண் டிருந்தார்கள். என்ன நடக்குமோ என்று ரஞ்சிதம்கூட மௌனமாகிவிட்டாள். "இவ்வளவோடு பாடுவதை நிறுத்திக்கொண்டு, இந்தப் பெண்ணை எழுந்து போகச் சொல்லுங்கள்" என்ருர் மந்திரி.

"என்ன சங்கதி?"

தையே பார்த்தார்கள். சபையில் உண்டான மாறுதலை யும், மந்திரியின் பரிவையும் கண்டு அரசன் கோபம் கொள்ளவில்லை. அறம் பாடுவது என்ருல் என்ன என்பது அரசனுக்குத் தெரியும். அந்தக்காலத்தில் வழங்கிவந்த கதைகளை அவன் பொருட்படுத்துவதில்லை. லோபிகளான பெரும் பணக்காரர்களை பயப்படுத்த புலவர்கள் கட்டி விட்ட கதை என்பதை அவன் அறிவான். ஆகையால் "மந்திரி, இந்த வேடிக்கைப் பேச்சைக்கேட்டு என்ன பண்ணுவது என்றே தெரியவில்லை. நீங்கள் இம்மாதிரி பேசுவது எனக்கு ஆச்சரியமா யிருக்கிறது. அறிவுக்குப் புறம்பான எந்த விஷயத்தையும் நான் ஒத்துக்கொள்ள மாட்டேன் என்பது உங்களுக்குத் தெரியுமல்லவா?" என்ருர்.

"தெரியும்."

"அறம் பாடினுல் என்ன கெடுதல் நேர்ந்து விடும்? எப்படி அது நேரிடும்?"

"கவிதைக் களி வெறியில் உங்கள் உள்ளத்தை விட்டு உயிர் பிரிந்துவிடும்."

அரசன் கலகலவெனச் சிரித்தான். "எங்கே நன்ருய் விளங்கும்படியாகச் சொல்லுங்கள்."

"மலரிலுள்ள தேனை அருந்த வண்டு பறந்து செல் கிறது. கொஞ்சம் கொஞ்சமாகப் பருகிக்கொண்டே இருக்கிறது. அளவுக்கு மீறி தேனைப் பருகிவிட்டு அந்தப் போதையில் புரளுகிறது. அப்புறம் முடிவைச் சொல்ல வேண்டுமா?"

"அடடா! அருமையான உதாரணம் அல்லவா சொல்கிறீர்கள்? ஆனுல் அது வண்டைப் பொறுத்த வரையில் சரியாக இருக்கலாம்."

"இல்லை, எல்லோருக்கும் அது பொருந்தும்; உயர்ந்த கவிரசத்தைப் பருகினுலும் அப்படித்தான் போதை கொள்ளச் செய்யும்."

இதைக்கேட்டு நந்திவர்மன் பலமாகச் சிரித்தான். "மந்திரி, பக்குவப்படாத மனத்தின் கோளாறு இது. ரஞ்சிதம் நீ பாடு" என்று சொல்லிவிட்டு நீர் நிறைந்த கண்களுடன் அவளையே பார்த்துக்கொண்டிருந்தான்.

மந்திரியால் இதைப் பொறுக்க முடியவில்லை. "அரசே, இன்னும் ஒரே ஒரு சங்கதி. அப்புறமும் உங்கள் மனம் மாருவிட்டால் அது விதியின் செயல் என்று சும்மா இருந்து விடுகிறேன்" என்ருர்.

"விதியின் மேல் பிறகு பழியைப்போடலாம். முதலில் சொல்வதைச் சொல்லுங்கள். அரசியல் காரியங்களில் ஈடுபட்டுக் கல்லாகி இருக்கும் உங்கள் இதயத்தில் சிறிது இனிமைக்கும் இடம் கொடுங்கள்"

மந்திரியின் முகத்தில் கோபமும் துக்கமும் மாறி மாறித் தோன்றியது. "அரசே" என்று கூறி நிறுத்தினர். அவர் குரல் அச்சபை முழுதும் எதிரொலித்தது. மீண்டும் அவர், "இந்தப் பாடலை இயற்றியது யார் தெரியுமா? அதை அந்தப் பெண்ணிடமே கேட்டுப் பாருங்கள். போரிட்டு அரசை அபகரிக்க முடியாமல் போகவே கடைசியாக இப்படியாவது செய்து பார்க்கலாமென்று தங்கள் சகோதரர் அல்லவா இந்தச் சூழ்ச்சி செய்திருக்கிருர்" என்று கூறிச் சபையை முறைத்துப் பார்த்தார். தன் சகோதரன் என்று கேட்டவுடன் அரசனுக்கு உண்டான ஆனந்தத்திற்கு அளவேயில்லை. ஆசனத்திலிருந்து எழுந்து, "என்ன? என் தம்பியா? அவனு இந்த அருமையான பாடல்களை இயற்றியிருக்கிருன்? ஆகா! இப்பொழுது என் உள்ளம் கர்வத்தால் விம்முகிறது. இதுவரையிலும் நான் எத்தனையோ புலவர்களுக்கு பொன்னும் வெள்ளியும் வாரி வாரிக் கொடுத்திருக்கிறேன். எவராவது ஒரு பாடலாவது இதுமாதிரி பாடியதுண்டா? அவன் செய்ததை எல்லாம் மறந்து விடுகிறேன். அவன் கவியா? என் தம்பி கவியா? இன்று அவனை ஒரு கவியாகப்

பாவித்து வணங்குகிறேன். அவன் கவிகளைப் போற்று கிறேன். புகழ்கிறேன். ஆனந்தப்படுகிறேன். அனுபவிக் கிறேன். அறம் பாடுகிறானாம்! ச்சீ! யார் சொன்னது? இருக்கட்டுமே! இந்தப் பாடல்களைக் கேட்டுக்கொண்டே ஆவி பிரிவதானால் அதைப்போல இன்பம் வேறெங்காகி லும் உண்டா? ரஞ்சிதம், நீ பாடு!" என்றார் அரசர்.

சபையிலுள்ளவர்கள் அத்தனை பேரும் என்னவோ கனவு காண்பவர்கள்போல ஒன்றும் தோன்றாதவர்களாய் அரசனையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

காணாத காட்சியைக் கண்டவன் போல் அரசன், "இந்தப் பாடல்களுக்கு என் ஒரு அரசை மட்டும் கொடுப் பதா? இப்படிப் பத்து ராஜ்யங்கள் இருந்தாலும் கொடுத்துவிடலாமே" என்றார்.

மந்திரி பிரமை பிடித்தவர் போல் நின்று கொண் டிருந்தார்.

அப்போது அம் மண்டபத்திலிருந்து எழுந்த இனிய கானம் அங்குள்ளவர்களை மட்டுமல்ல, இந்த உலகையே மோகன மயக்கத்தில் ஆழ்த்துவதுபோல் இருந்தது.

அதே சமயம் இதே இனிமைக் காட்சியைத்தான் இள நந்தியும் கற்பனை பண்ணிக்கொண்டிருந்தான்.

# பிழைத்த ஜோதி

வேதாசலம் மருந்தைக் கொடுத்து விட்டுக் கொஞ்ச நேரம் அங்கேயே நின்ருன். கட்டிலில் பதுமை போல ஜோதி படுத்திருந்தாள். அவளைப் பார்க்கப் பார்க்க அவனுக்குத் துக்கம் பொங்கிக் கொண்டு வந்தது. "பிரக்ஞை வந்தால் நம்பிக்கைக்கு இடமுண்டு; ஆனல் தலையில் எப்படி எழுதியிருக்கிறதோ!" என்று அவன் தனக்குள் முணுமுணுத்துக் கொண்டான்.

வைத்தியனே இப்படிச் சந்தேகப்படலாமா? அதுவும் வேதாசலத்தைப் போன்ற இளைஞன் சந்தேகத்திற்குத் துளியும் இடம் தரலாமா? இது அவனுக்கு நன்ருகத் தெரியும். இதைவிட வியாதியின் கடூரம் இன்னும் நன்ருக அவனுக்குத் தெரிந்திருந்தது.

"என்னவோ பார்க்கலாம்" என்று மெதுவாகச் சொல்லிக்கொண்டு தன் அறைக்கு வந்தான். இவ்வளவு நேரமாக ஆவலுடன் காத்துக்கொண்டிருந்த அவன் தங்கை கல்யாணி "ஜோதிக்கு எப்படி அண்ணு இருக்கிறது?" என்று கேட்டாள்.

"இருக்கு, பிரக்ஞை வந்தால்தான் எதுவும் திடமாய்ச் சொல்லலாம். இல்லையென்ருல்......" என்று மென்று விழுங்கினன்.

தங்கையின் நம்பிக்கையெல்லாம் பறந்து விட்டது. அவளும் சிறிது நேரம் பேசாமலிருந்துவிட்டு, "சரி சாப்பிடவாவது எழுந்து வாயேன். நீயே கையைக்கட்டி உட்கார்ந்து கொண்டால் எங்களுக்கு எப்படியிருக்கும்?" என்ருள்.

"எனக்குச் சாப்பாடு வேண்டாம்" என்று ஒரே

பேச்சில் சொல்லிவிட்டு ஜன்னல் பக்கம் திரும்பி உட்கார்ந்து கொண்டான்.

ஆயிரக்கணக்கான பேர்களுக்கு நோயைச் சொஸ்தம் செய்துவிடுகிறார் வைத்தியர். எல்லோரும், "என் அப்பன்! மகராசன் சிரஞ்சீவியாக இருக்கவேண்டும்" என்று வாயார வாழ்த்துகிறார்கள். ஆனால் அதே வைத்தியர் தம் குடும்பத்தில் கை வைக்கிறார்; பலன் விபரீதமாகிறது. அது போல எங்கு நிகழ்ந்துவிடுமோ என்றுதான் வேதாசலம் இப்போது மிகுந்த கவலை அடைந்து கொண்டிருந்தான்.

வேதாசலத்தைச் சுற்றுப்புற வட்டாரங்களிலுள்ள ஜனங்களெல்லாம் 'அபார வைத்தியர்,' 'தன்வந்திரி' என்றெல்லாம் நாமகரணம் சூட்டி வானளாவப் புகழ்வார்கள். அந்தப் புகழுக்கு உண்மையிலேயே அவன் பாத்திரமானவன்தான். இந்தக்கால வைத்தியர்கள், கை கடிகாரத்தின் அடிப்பைக்கண்டு நாடித் துடிப்பு கனவேகமாக அடிக்கிறது என்ற கணக்கில் வியாதியைக் கண்டு பிடித்து விடுகிறார்கள். ஆனால் வேதாசலம் அப்படியல்ல. அவன் வீட்டுப் பழைய மரப்பெட்டியில் அடங்கியிருக்கும் ஏட்டுச் சுவடிகளைக் கண்டாலே அவனை ஒரு 'அரை குறை' என்று சொல்லத் தோன்றாது. கோரக்கர், தேரையர், புலிப்பாணி முதலியவர்களுடைய கணக்கிலடங்காப் பெருமைகளை அவன் எடுத்துச் சொல்லும்போது, நமக்குக் கூட, "இரண்டு பேருக்கு நாமுந்தான் வைத்தியம் செய்தாலென்ன?" என்று எண்ணத் தோன்றும்.

இப்படி அவன் தொழிலில் ஊக்கமும் உற்சாகமும் காட்டியதால் வேதாசலத்தின் மதிப்பு உயர்ந்தது. பலரது நட்பும் வலிய வந்து கிடைக்கலாயிற்று. இப்படி வந்தவர்களுள் ராமு முக்கியமானவன். அது மட்டுமல்ல, ராமுவே கல்யாணியின் கணவனாகவும் பின்னால் வந்து வாய்த்தான்.

ராமுவை முதன் முதலில் அவன் சந்தித்ததே ஒரு

விசித்திர சம்பவம். அசப்பாட்டில் ஒருநாள் வேதாசலம் வீதி வழியே போய்க்கொண்டிருக்கையில், "என்ன உங்களைத்தானே! இந்தப் பக்கத்தில் நல்ல வைத்தியம் செய்கிறவர்கள் யாராவது இருக்கிறார்களா?" என்று ஒருவர் கேட்டார்.

வேதாசலம் சற்று யோசித்து, "வியாதி ரொம்பக் கடினமோ?" என்று அவரிடம் விசாரித்தான். இவனது தோற்றமும், பதிலும் அவர் மனதிற்குப் பிடித்துவிட்டது. அதோடு எப்படியோ இவனிடம் ஒருவிதக் கவர்ச்சி அவருக்கு உண்டாகியது. நமக்கும் இப்படி அனுபவம் உண்டாகிறதில்லையா? சிலரைக் கண்டவுடன் காரணமின்றி அன்பும், அபிமானமும் முதல் தடவையிலேயே ஏற்படுகின்றன. இன்னும் சிலரை முதல் சந்திப்பிலேயே என்னவோ மாதிரி எண்ணிக் கொள்கிறோம். இதற்கெல்லாம் யாரால் காரணம் கூறமுடியும்?

அந்தப் புது மனிதர் விவரமாகச் சொல்ல ஆரம்பித்தார். "வியாதி அப்படி ஒன்றும் பிரமாதமில்லை. சும்மா காய்ச்சல்தான், நேற்றுச் சாயங்காலம் சுமாராக இருந்தது. இன்று சற்று அதிகமாகவே அடிக்கிறது."

"யாருக்கு? எங்கே?" என்றான் வேதாசலம்.

"அடடா! அதைச் சொல்லவில்லையா நான்?" என்று ஆரம்பித்தார். "நான் இந்த ஊருக்கு புதிது. என் அண்ணா மகனும், மகளும் இங்கேதான் இருக்கிறார்கள். அவளுக்கு—அந்தக் குழந்தைக்கு—நாலு நாளாகக் காய்ச்சல்......"

"சரிதான். குழந்தைக்கு எத்தனை வயதிருக்கும்?"

"எந்தக் குழந்தைக்கு?" என்று ஆச்சரியத்தோடு கேள்வி போட்டவர், பிறகு, சிரித்துக்கொண்டே, "நான் குழந்தையென்று சொன்னவுடன் இரண்டு மூன்று வயதுப் பாப்பாவாக்கும் என்று நினைத்துவிட்டீர்களா? இல்லையில்லை. பெண்ணுக்குப் பத்துப் பதினைந்து வயதாகிறது.

வழக்கத்தின் மேல் அப்படிச் சொல்லிவிட்டேன்" என்ருர். அப்புறம் வேதாசலம் தானே வைத்தியனென்ற விஷயத்தைச் சொல்லவும் அவர், "கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தமாதிரி" என்று அவனைக் கூட்டிச் சென்ருர்.

இதற் கப்புறம் வேதாசலம் எவ்வளவோ தடவை அவர்கள் வீட்டிற்குப் போயிருக்கிருன். ஆனல் வைத்தியம் செய்வதற்கல்ல, நண்பன் என்ற முறையில் தான்.

அவன் அங்கு போய்விட்டால் வீடே அமர்க்களப் படும். ராமுவின் சித்தப்பா ஒரு குஷிப் பேர்வழி. இவனைக் கண்டதும், "வாருங்கள்! வாருங்கள்!!" என்று அமோகமாக வரவேற்பார்.

"தினம் வருகிறவன்தானே? எனக்கு எதற்கு இவ்வளவு உபசாரம்?" என்ருல், "அது அப்படியாகுமா? நீங்களெல்லாம் எமனை எதிர்த்து வேலை செய்கிறவர்களாச்சே" என்று பேசிக்கொண்டே "எங்கேயம்மா ஜோதி, ஒரு பாட்டுப் பாடு!" என்று பெண்ணுக்கு உத்திரவிட்டு விடுவார்.

ஜோதியிடம் வீண் குலுக்கும் பிலுக்கும் கிடையாது. அவள் போக்கே கங்கா நதியைப்போன்று பெருமிதம் கொண்டிருக்கும். சிவப்பு மேனி, நேர்த்தியாக நெற்றிக்கு இட்டுக்கொண்டு, பூச்சூடிய பின்னலுடன் தோன்றினல் அபூர்வ ஜோதி போலவே காட்சியளிப்பாள்.

நன்ருக அவளுக்குப் பாடவரும். குரலை நீட்டி முழக்கி ஆபாசப் படுத்தாமல் அழகாகப் பாடுவாள்.

வேதாசலத்திற்கு அவ்வினிய குரலைக்கேட்டுக்கொண்டிருப்பதில் அபார ஆனந்தம். நேரம் போவது தெரியாமல் கீதத்தில் லயித்து விடுவான். அப்புறம் ராமு, "என்னப்பா, சாப்பிட எழுந்திரு" என்று தட்டி எழுப்பும் போதுதான் அவன் கானலோகத்திலிருந்து நிஜ உலகிற்கு இறங்குவான்.

வேதாசலம் மனதில் கொஞ்ச நாளாகவே ஒரு எண்ணம் இருந்துவந்தது; ராமுவுக்குத் தன் தங்கையைக் கலியாணம் செய்துவைக்க வேண்டுமென்று. பின்னர் நடக்கப் போவதையும் அவன் உள்ளம் முன்கூட்டியே ஆலோசித்துத் தீர்மானித்தது.

"இந்த விவாகத்திற்குப் பிறகுதான் ஜோதியைக் கலியாணம் செய்துகொள்வது. இதில் தடை சொல்வதற்கோ தடுப்பதற்கோ யாருமில்லை. ராமு என்ன மாட்டேனென்று சொல்லப்போகிறான்? அப்புறம் அவன் சித்தப்பா—அவரைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. பின்னர், ஜோதி—அவள் தான்........."

இந்த இடத்திற்கு வந்ததும் அவனது அலை பாயும் மனது 'டக்' கென நின்றுவிடும். வாஸ்தவமாகவே அவள் தன்னை விரும்புகிறாளா? ஆம், சந்தேகமில்லை. அன்றொரு நாள் "உங்களைக் காணாது சாப்பிடவும் பிடிக்கவில்லை" என்று சொல்லவில்லையா? சரிதான்.........

வேதாசலம் தன் தங்கை கலியாணத்தைச் சிறப்பாக நிறைவேற்றி வைத்தான். இதற்காக அவன் அதிகச் சிரமப்படவில்லை. ராமுவே எல்லாம் மேற்போட்டுக் கொண்டான். ஜோதி அதிக சந்தோஷமடைந்தாள்.

'இந்தக் காரியத்திற்கு இனி ஒரு இடையூறும் ஏற்படாது' என்று நாம் நம்பிக்கொண்டிருக்கும்போது அகஸ்மாத்தாக ஏதோ ஒரு இடையூறு ஏற்பட்டு விடுவதில்லையா? அதேமாதிரி தான் வேதாசலத்தின் கலியாண விஷயத்திலும் ஏற்பட்டது. வேதாசலத்திற்கும் ஜோதிக்கும் உடனே விவாகம் செய்துவிடவேண்டுமென்று ராமு ஒரு கால்மேல் நின்றான். முகூர்த்தம்கூட வைத்தாகிவிட்டது. ஆனால் முகூர்த்த நாளும் வந்து போய்விட்டது, கலியாணம் மாத்திரம் நடைபெறவில்லை!

ஜோதி ஒரு மாதமாகப் படுத்த படுக்கையாக இருக்கும்போது கலியாணம் எப்படி நடக்கும்? 'பருப்பு இல்

லாமலா கலியாணம்' என்பது பழமொழி. ஆனால் அதைப் பற்றி நமக்குத் தெரியாது. பெண்ணில்லாமலும் கலியாணம் எங்காவது நடைபெறுமா ?

வேதாசலந்தான் வைத்தியம் பார்க்கிறான். அவனுக்கு இரவு பகலாக ஓய்வு கிடையாது. இன்று நிலைமை ரொம்ப மோசமாகிவிட்டது. அவன் கொடுத்த மருந்து சீக்கிரத்தில் உள்ளேசென்று வேலைசெய்யும்; அந்த மருந்தில் அவள் மயக்கம் தெளிந்ததானால் அப்புறம் பயமில்லை. இதைப் பற்றித்தான் வேதாசலம் இப்போது யோசித்துக் கொண்டிருந்தான்.

வெளியே ஒரே காரிருள். அந்த இருளின் நடுவேயும் ஜோதிதான் தோன்றித் தோன்றி மறைந்துகொண்டிருந்தாள். வேதாசலத்திற்கு எப்படியோ இருந்தது. நெஞ்சின்மேல் ஏதோ வந்து உட்கார்ந்துகொண்டு அழுத்துகிற மாதிரி உணர்ச்சி ஏற்பட்டது. அவன் தலையும் சுழன்றது.

"என்ன, என்ன ?"

"எல்லாம் முடிந்துவிட்டது, நீ தான் பார்க்கிறாயே, தெரியவில்லையா ?" என்று யாரோ சொல்வதுபோல் இருந்தது.

ஜோதி என் உயிர் ஜோதி,—அணைந்து விட்டதா? இனி வாழ்க்கையில் என்ன இருக்கிறது? முன்பு நடந்ததெல்லாம் எதற்காக? துன்பத்தில் ஆழ்த்தவா ஆண்டவன் இந்த லீலைகளை எல்லாம் செய்தான்? விதியின் விளையாட்டை என்னவென்று சொல்வது? அதுவும் என்னிடம் வந்தா அந்த விதி விளையாடித் தொலைக்கவேண்டும்?

"அண்ணா !" என்று ஆநந்தமும் உற்சாகமும் ததும்பும் குரல்கேட்டு, வேதாசலம் திடுக்கிட்டுக் கண்ணைத் திறந்தான். தலை சுழன்று திக்கு முக்காடச் செய்ததை எண்ணி ஒருதரம் தலையைத் தடவி விட்டுக் கொண்டான்.

"பயமில்லை, அண்ணா, ஜோதி எழுந்து உட்கார்ந்திருக்கிறாள். பேசக்கூடப் பேசினாள்."

"அப்பாடி!" என்று சொல்லிவிட்டுத் தன் தங்கையை அழைத்துக்கொண்டு வேதாசலம் ஜோதியின் அறைக்குப் போனான்.

# தறிகாரன்

செ‌ன்னியப்ப முதலியார் போன வாரம் நெய்த சேலை களை வழக்கமாகப் போடும் கடைக்காரனிடம் போட்டுவிட்டு, இந்த வாரத்துக்கு வேண்டிய 'பாவு' நூலுடனும் இரண்டொரு முடிச்சுகளுடனும் கீரனூரை நோக்கி வந்துகொண்டிருந்தார்.

அநேகமாக வந்து விட்டார் என்றே சொல்ல வேண்டும். அதோ, கோவிலும், கிணறும், புளிய மரமும், அருகில் உள்ள ஐயர் வீடும். அதற்கப்பாலுள்ள பாவடியும், இன்னம் இடிந்தும் இடியாமலும் இடிந்து போய்க் கொண்டு மிருக்கிற எல்லா வீடுகளுமே தெரிகின்றனவே!

முதலியார் இப்போது அடி யெடுத்து வைக்கும் பாறை ரொம்ப மேட்டிலுள்ளது. வண்டிச் சக்கரம் பாறையின் இரு பக்கங்களிலும் பதிந்து பதிந்து குடைந்திருந்தது. அதன் ஓரமாக, கல் இடுக்கில், கால் சலிக்காமல் நடப்பதற்கு, கொஞ்சம் பழக்கமும் வேண்டித்தானிருந்தது. அங்கே யிருந்து பார்த்தால், கூப்பிடு தூரத்தில் உள்ள கிராமக் காட்சிகளெல்லாம் தெரியும்; என்றாலும், இந்த உச்சி நேரத்தில் 'அன்ன நடை' போட்டுக் கொண்டு, தலையைத் தூக்கி, எந்தக் காட்சியையும் காண வேணுமென்று ஆவல் எழாது.

சூடேற்றிய இரும்புத் தகடுபோலுள்ள அந்தப் பாறையிலிருந்து, முதலியார் துரிதமாகக் கீழே மணலுக்கு வந்ததும், "அடடா! கால் வெந்துதான் போகும்; இப்படிப் பதிக்குதே!" என்று சொல்லிக்கொண்டே, மூட்டையைக் கை மாற்றிக்கொண்டார்.

காலையில் புறப்படும்போது, மத்தியானச் சாப்பாட்டுக்கு வந்து விடவேணும் என்று தான் முதலியார் நினைத்திருந்தார். ஆனாலும், வழக்கம்போல் கடைக்காரன் தாமதம் பண்ணிவிட்டான். ஒவ்வொரு புடவையாக எடுத்து "இதிலே ஏன் பட்டுக்குறி நன்றாயில்லே? அங்கே ஏன் 'பொறசல்' விழுந்தது? இங்கே இழை படர்ந்து வந்தது தெரியலேயா? இது அப்படி; அது இப்படி, இதிலே அது சொத்தை; அதிலே இது சோடை" என்று அவன் தன் புராணத்தைப் படிக்க ஆரம்பித்து விட்டால். நேரம் ஆகுமா, ஆகாதா?

"அடுத்த வாரத்துக்கு ஆகட்டும், விடிஞ்சதும் விடியாமே போயிடறேன். அப்படி அதிகாலையிலே போனால், இளமத்தியானத்துக்குள்ளே வந்திடலாம்" என்று முதலியார் நினைத்துக் கொண்டார். இப்படி நினைப்பது இன்றைக்குப் புதிதல்ல. கடந்த இருபது வருஷங்களாக, அவர் தறிக்குழியில் உற்கார்ந்து, 'நாடா'வை இந்தப் புறமும் அந்தப் புறமும் ஓட்ட ஆரம்பித்ததிலிருந்து, இப்படியே தான் நித்த நித்தம் நினைத்து வந்திருக்கிறார். ஆனால், அந்த நினைவெலாம் கருத்தளவிலேயே அணைந்து விடுகிறதே ஒழிய, கிரியாம்சையில் இன்று வரை பிரகாசிக்கவில்லை.

"என்ன கூப்பிட்டது காதில் விழலியா?" என்ற குரல் கேட்கவும், முதலியார் திரும்பிப் பார்த்தார்.

புளிய மரத்தடியில் புட்டுக் கூடையுடன் உட்கார்ந்திருந்த கிழவன் சிரித்துக்கொண்டே, "ஏனப்பா நிலா வெளிச்சமாட்ட நடக்கிறையே; செருப்பு வாங்கிப் போட்டுக்கப் படாதா?" என்று அவன் கேட்டான்.

இரண்டு மாத காலமாகவே செருப்பு வாங்க வேண்டுமென்று தாம் தீர்மானித்திருந்த விஷயம், அப்போது தான் முதலியாருக்கு ஞாபகம் வந்தது. அது வந்து என்ன செய்கிறது? அன்றாடம் சம்பாத்தியத்தால் ஏதோ வயிற்றைக் கழுவலாம் என்ற நிலையைத் தாண்டி மேலுக்குப்

போக முடியவில்லையே! என்ன கரணம் போட்டாலும் வரவுக்கும் செலவுக்குமே சரிக் கட்ட வில்லை. சில சமயம் கடனும் வந்துவிடுகிறது. அந்தப் பற்று தராசுதான் கீழ் நோக்கிப் போகிறதே தவிர, தாராளத்துக்கு அங்கே இடமே இல்லை. முதலியார் அடிக்கடி சொல்லுகிற மாதிரி, 'ஆடு கறக்கவும் பூனை குடிக்கவும்' சரியா யிருந்தது.

எதையோ சொல்ல எண்ணிய முதலியார் அதை விட்டு, "இந்தப் புளியமரம் இருக்கிறவரை நீங்களும் இங்கேதான்" என்றார்.

"என்னப்பா அப்படிச் சொல்றே?" என்று கேட்ட கிழவன், மறுபடியும் சிரித்து விட்டு, "உம், யாரப்பா கண்டது? நான் இன்னைக்குச் செத்தா நாளைக்கு இரண்டு நாள். இந்த மரமும் என் கூடவா வந்திடப் போவுது?" என்றான் ஒருவிதச் சலிப்போடு.

உண்மை; அந்த விருத்தனோடு அம்மரமும் உடன் கட்டை ஏறிவிடப் போவதில்லை. ஆனால், அது இருப்ப தாலும், ஒன்றும் பிரயோஜன மில்லை. பூ பூக்கிறது, காய் காய்க்கிறது என்ற பேச்சே அதனிடம் எந்தக் காலத்தி லும் கிடையாது. ஏதோ மொட்டையாக இல்லாமல், கொம்பில் கொஞ்சம் தழைகள் ஒட்டிக்கொண் டிருக் கின்றன; அவ்வளவுதான். கிழவனுடைய வியாபாரத் துக்கு ஏற்ற இடமாக விளங்கும் பெருமை ஒன்று தான் அது பெற்ற பாக்கியம். முதியவன் சொன்ன தொன்றையும் முதலியார் கவனிக்கவில்லை. அவருக்கு எத்தனையோ ஜோலிகள், கவலைகள். "சரி; சாவகாச மாய்ப் பேசிக்கலாம். நான் வாரேன்" என்று சொல் லிக் கிளம்பினார்.

பாவடியை அவர் தாண்டும் போது, அங்கே கற் களின் அடியே கஞ்சிப் பசை வரண்டு ஏடாக நிற்கு மிடங்களில், கழிநூல் ஏராளமாகக் குவிந்திருப்பதைக்

கண்டு, "எதுக்கும் கொஞ்சம் பாங்கு, பணிக்கு வேண்டாமா? இப்படிக் கண்டபடி சேதம் செய்திருக்காங்களே, பசங்கள்!" என்றும் இன்னும் பலவிதமாகவும் யோசனை செய்துகொண்டே தம் வீடு வந்து சேர்ந்து, தமது மூட்டை முடிச்சுகளை இறக்கி வைத்தார்.

இததனை நேரமும் வைத்த கண்வாங்காமல் தடம் பார்த்துக்கொண்டு நின்ற முதலியாரின் மனைவி தங்கம்மாள், அவரது மூட்டை முடிச்சுக்களை எடுத்துப்போய், அதனதன் இடத்தில் சேர்த்துவிட்டு, ஒரு செம்பு தண்ணீர் கொண்டுவந்து திண்ணையிலே வைத்துக்கொண்டே, "இலை போடட்டுமா?" என்று கேட்டாள்.

"என்ன அவசரம்? சற்றுப் போகட்டும். முதலிலே பாயை விரி" என்று முதலியார் சொன்னார்.

அந்த அம்மாள் பாயை எடுத்து வந்து போட்ட பின்பு "தலையணையும் வேணுமோ?" என்று கேட்டு நகைத்தாள். இன்னும் சிறிது நேரத்தில் அவர் சாப்பிட எழுந்து விடுவார். இந்தச் 'சயனம்' சிறிது சிரம பரிகாரம் செய்யத்தான் என்பதாலேயே, அவள் அவ்விதம் கேட்டாள். "கொஞ்சம் விசிறி எடுத்து வந்தாலே போதும்" என்று சொல்லிக்கொண்டே, அவர் படுத்தார்.

மடியில் சுற்றி வைத்திருந்த சில்லறை, அவர் கீழே படுக்கவும், சல சலத்தது.

"இந்தா......" என்று மனைவியைக் கூப்பிட்டார்.

"ஏன்? விசிறி வாண்டாமா?" என்று உள்ளிருந்து குரல் வந்தது.

முதலியார் பேசவில்லை. அதற்குள்ளாக, "இருக்கிறது இரண்டே முக்கால் ரூபாய்தானே? அரிசிக்காரனுக்கு ஒண்ணரை; எண்ணெய் புளி வாங்கினது அஞ்சணா......அப்புறம் தெக்கால வீட்டானுக்கு ஒரு மூணணா ......" என்ற கணக்கில் மூழ்கிவிட்டார்.

"என்னமோ சொன்னீங்களே?" என்று கேட்டுக் கொண்டே வெளியே வந்தாள் மனைவி.

"அட ஆமாம். நீ ஏனோ மறந்திட்டயென்னு பார்த் தேன்" என்று சொல்லிய முதலியார், தம் கையில் உள்ள பணத்தை மூடிக்கொண்டே காட்டினார்.

"மறக்கிறப் போலவா இருக்குது! அந்த மிளகாய்க் காரி இந்நேரம் 'சில்லு சில்லுன்னு' நின்னாளே. மூணரைத் துட்டுக்குப் பெரிய போடாப் போடறா. அவகிட்டே வாங்கப் படாதுன்னு இருந்தாலும், வாங்க வேண்டி வந்திடுது" என்று ஆரம்பித்தாள் மனைவி.

முதலியார் தடுத்து, "அதெல்லாம் என் கிட்டச் சொல்லாட்டி என்ன? இவ்வளவுதான் இருக்குது. எல்லாம் எப்படியோ சமாளிச்சுக்கோ" என்று கூறி, ஒரு அணாவைத் தம் சொந்தச் செலவுக்கு வைத்துக்கொண்டு, மீதியைத் தமது மனைவியிடம் கொடுத்தார். அதைக் கொடுக்கையில், கை தவறி நாலைந்து அணா வாசற்படிக் கல்மீது விழுந்தது.

"ஏதண்ணா! துட்டுச் சத்தம் கேக்குது?" என்று விசாரித்துக்கொண்டே பக்கத்து வீட்டு அப்பாவு வந்தான்.

"ஆமாமப்பா! நெசவுகாரன், நோட்டுப் பவுனைக் கனவில்தான் பாக்க முடியும். துட்டு......செப்புத் துட்டுத்தான் நாம் கண்டது. அதுக்குங்கூடப் பஞ்சம் வரச் சொல்லறையா?" என்றார் முதலியார்.

"நானேன் சொல்றேன்? கடைக்காரன் கொடுக்கிற கூலியிலே எல்லாம் இருக்குது" என்றான் அப்பாவு.

"அது நெசந்தானப்பா; அவன் கொடுக்கிற கூலிக்கு அவனுக்கு ஆண்டவன்தான் கூலி கொடுக்க வேணும்."

அப்பாவு சொன்னான்: "மனம் நொந்தவன் திட்ட வேண்டியதில்லை; வயிறு நிறைஞ்சவன் வாழ்த்த வேண்டியதில்லை. அண்ணா! அது கெடக்குது. நாளைக்கு எங்க

பாவு துவையரேும். ஆள் ஒருத்தரையும் காணேம். நாளைக்கு உன்னைத்தான் நம்பி யிருக்கிறேன். வார யாண்ணு?"

"நீ பாவுக்குச் சொல்லத்தான் வந்திருப்பாயிண்ணு நான் அப்பவே நெனச்சேன்" என்ருள் தங்கம்மாள்.

கண்ணை மூடிக்கொண்டிருந்த முதலியார், மௌன மாகவே இருந்தார்.

"அண்ணு! மறந்திடாதே" என்று சொல்லிக் கொண்டே, அப்பாவு எழுந்தான். அவன் புறப்படுகை யில் "ஒரு இலை இருந்தாக்குடுத்துடு" என்று தங்கம் மாள் கேட்டாள்.

அப்பாவு திரும்பி, 'இல்லை' யென்பதற்கு அடை யாளமாக உதட்டாலும் தலையாலும் சைகை செய்து கொண்டே போய் விட்டான்.

முதலியாருக்கு அதிகப் பசிதான். ஆனல், 'குளு குளு' என்று வரும் காற்றில் அப்படியே படுத்திருப்பது ரொம்ப சுகமா யிருந்தது. எதிரில் வாசலில் உள்ள தங் கரளி மரம் சற்று நேரத்துக் கொருதரம் அசையும். அது அசையும்போது, "இது இப்படியே எக்காலமும் அசைந்து கொண்டிருந்தால், எவ்வளவு ஆனந்தமாக இருக்கும்!" என்று எண்ணுவார். ஆனல், ஜடப்பொரு ளாக இருந்தாலும், எந்நேரமும் இயங்கிக் கொண்டே யிருக்க முடியுமா?

"அப்பாடி!" என்று கையில் நெட்டை எடுத்துக் கொண்டே, முதலியார் திரும்பிப் படுத்தார். தலைமாட்டி லிருந்த தறியின் விளிம்பில் அவர் கை சுருக்கெனப் பட்டு விட்டது. ஓரத்தில் சாய்ந்திருந்த நாடா 'லொடக்' கென விழுந்தது. அந்த நாடாவிலுள்ள பட்டுத்தாரைப் பார்த்து, "இதை எடுத்துவைக்கப் படாதா? பிரிந்து போச்சுன்ன இது என்னத்துக்காகும்?" என்று மனைவி காதில் விழச்சொன்னர்.

உள்ளே பூவரசம் தழைகளில் இலை தைத்துக் கொண்டிருந்த மனைவி, "ஆச்சு ஆச்சு, இதோ ஆயிட்டது" என்று பதில் குரல் கொடுத்தாள்.

"நான் ஒண்ணு கேட்டா, இவளொண்ணு சொல்றது இண்ணைக்குத்தான் புதுசா?" என்று, முதலியார் தமக்குத் தாமே சொல்லிக்கொண்டார். அப்படியே எதை எதையோ பற்றி எண்ணியவர், தம்மைப்பற்றி நினைக்கவும் கிலேசமடைந்தார். அந்த ஏக்கத்தால், அவருக்கிருந்த பசியும் பறந்து போய்விட்டது.

"நித்தமும் ஓயாமல் இந்த ஒரே வேலைதானா? சாப்பிடும் நேரத்தைத் தவிர, மற்ற வேளைகளில் எல்லாம் தறிக் குழியிலேயே அழுந்திச் சாகவேண்டியதுதானா? இவ்வளவும் சோற்றுக்கு......அட ஊரிலுள்ள எத்தனையோ பேர், நாடகம் பார்க்கப் போகிறார்கள்; சினிமாப் பார்க்கப் போகிறார்கள். என்ன என்னவோ கண்டு வந்ததாகச் சொல்லுகிறார்களே! ஆனால், நமக்கு வெளியே போக வழியுண்டா? அப்படிப் போனாலும், ஒரு ராத்திரி தூக்கம் முழித்தால், இரண்டு மூன்று நாளைக்குச் சேர்ந்தாற் போல் தூங்கியாக வேண்டுமே!...என் ஜன்மம் இப்படி! யாரைச் சலித்து என்ன பயன்?......" என்று ஏதோ எண்ணி ஏங்கினார்.

தங்கம்மாள் சாதம் பரிமாறிக்கொண்டே, "எழுந்திருச்சு வாங்கோ" என்று குரல் கொடுத்தாள்.

முதலியார் தொடர்ந்து யோசித்தார்: "இந்த வாழ்க்கை வசதிகள் எல்லாம் யாருக்கு? மனிதனுக்கா, மிருகத்துக்கா? அப்படியானால் நான் மனிதனல்லவா? சீமான் வீட்டில் நான் பிறக்கவில்லையே என்பதற்காக வருத்தப்படவில்லை. இந்தக் கூரை வீட்டில் இருந்தாலும், இருக்கிற வரையிலுமாவது சுகமாக இருந்துவிட்டுப்போக வேண்டாமா?"

இப்படி நினைத்துக்கொண்டே, முதலியார் மெதுவா

கக் கண்ணயர்ந்தார். அந்த நித்திரை நிலையிலே அவரை வாட்டும் எந்த வேதனையும் இல்லை.

'மனிதனுடைய வாழ்நாளிலே பாதிக்காலம் தூக்கத்தில் வீணாகிவிடுகிறது' என்கிறார்கள். ஆனால் அந்தத் தூக்கமும் இல்லாதிருந்தால்.........?

# ஒரு ஆசை

அத்தி பூத்தாற்போல் என்ருவது ஒருநாள் கோடையின் வெப்பத்திலே குளிர் நிழலுக்காக ஒரு ஆலமரத்தின் அடியில் இளைப்பாற உட்காருகிருேம். மீண்டும் எப்போதாவது ஒரு நாளைக்கு அம்மரத்தடியில் உட்காருவதற்கு வருவோமா என்று அப்போது நாம் நினைப்பதில்லை. அப்பேர்ப்பட்ட ஆவல் கூட உள்ளத்தில் உதிப்பதில்லை. ஆனல், திடீரென்று எப்போதாவது லேசாக அந்த ஆசை உள்ளத்தில் உதயமாவதும் உண்டு. போய்த்தான் தீர வேண்டும் என்ற கட்டாயமான ஆவல் தோன்ருவிட்டாலும், போகலாமா என்ற ஒரு 'நப்பாசை' நம் உள்ளத்தை அரிக்க முயலும் வாழ்க்கையில் இது சகஜம்.

சில மனிதர்கள் விஷயத்திலும் இப்படிப்பட்ட ஆசை நமக்கு ஏற்படுவது உண்டு. மீண்டும் ஒரு முறை சந்திக்க வேண்டும் என்று முதல் சந்திப்பில் எண்ணம் எழாவிட்டாலும் 'திடு திப்'பென்று ஒரு நாளைக்கு அவ்வெண்ணம் எழுந்து விடுகிறது. அவளுடைய நினைவும் இந்த மாதிரிதான் என் மனத்திடையே தோன்றியது.

முதல் முதலில் அந்தப் பெண்ணைச் சந்தித்தபோது நான் ஒன்றுமே நினைக்கவில்லை. புதிதாக ஒரு பெண்ணை அகஸ்மாத்தாகச் சந்திக்கையில் எதற்காக அப்படி எல்லாம் நினைத்துக் கொள்கிருேம்?

கூட்டத்தோடு கூட்டமாக பஸ்ஸில் நான் உட்கார்ந்திருந்தேன். அன்றைக்குப் பஸ்ஸில் ஏராளமான கூட்டம். ஆனல், கண்டக்டர் மட்டும் டிக்கட் கொடுப்பதை நிறுத்தவில்லை!

ஆச்சு; வண்டியும் புறப்பட்டு விட்டது. திடீ ரென்று இன்னும் ஒரு டிக்கட் வந்து சேர்ந்ததால் பஸ் நிறுத்தப்பட்டது.

பஸ்ஸிலிருந்த எல்லோருக்கும் எரிச்சலாகத்தான் இருந்ததென்பதை அவர்களுடைய முகக்கண்ணாடி எடுத்துக் காட்டியது. அந்த நெருக்கத்தில் ஒவ்வொருவரும் சிரமப் படுவதுபோலப் பாசாங்கு செய்ததை நான் குற்றம் என்று சொல்லவேமாட்டேன். ஏனென்றால் அந்தக் குற்றவாளிகளில் நானும் ஒருவன்தான்!

என்ன இருந்தாலும், எதிர் வரிசைப் பெண்களுக்கு மத்தியில்தான் அந்தக் கடைசி டிக்கட்டைத் திணிப்பான் என்று எண்ணியிருந்தேன். ஆனால், என் எண்ணத்திற்கு மாறாக என் பக்கத்திலே அந்தப் பெண்ணை உட்கார வைத்தான். நான் கையையும் காலையும் ரொம்பக் கஷ்டப்பட்டு, ஆமைபோலச் சுருக்கிக்கொண்டு உட்கார்ந்தேன். அப்படித் திணறிக்கொண்டே அந்தப் பெண்ணின் முகத்தைப் பார்த்தேன். உடனே எனக்கு உண்டான ஆச்சரியத்திற்கு அளவில்லை.

அந்தப் பெண் மிகுந்த துக்க மடைந்திருக்கிறாள் என்பது அவளுடைய முகத்திலிருந்து சுலபத்தில் தெரிந்தது. உள்ளம் குமுறிக்கொண்டிருப்பதை கண் ஊற்று எடுத்துக் காட்டியது. அவளுடைய இந்த மாளாத் துயரத்துக்குக் காரணம் என்னவோ?

காரணம் இருக்கட்டும். பார்வைக்கு நல்ல நாகரிகமான பெண்மணி போன்றிருக்கிறாள். நாலுபேருக்கு மத்தியில் வெளிப் படையாகக் கண்ணீர் வடிக்கிறாளே என்று நினைத்தேன்.

ஈரோட்டை விட்டு பஸ் புறப்பட்டு விட்டது. கொஞ்சம் கொஞ்சமாக நகரத்து வீடுகள் மறைந்து சாலையின் மரங்களுக்கு மத்தியில் பஸ் செல்ல ஆரம்பித்தது. காருக்குப் பின்னால் வானளாவப் புகை மண்டலம் சூழ்ந்தது.

இவைகள் ஒன்றையும் பொருட்படுத்தாமல் பஸ் சென்று கொண்டே யிருந்தது !

அந்தப் பெண் குனிந்தபடியே கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தாள். ஆனல், மற்றவர்கள் மனம் எங்கெங்கோ பவனிபோய்க்கொண்டிருப்பது அவர்களுடைய முகங்களிலிருந்து தெரிந்தது. நான் மட்டும் துடித்துக் கொண்டு வரும் அந்தப் பெண்ணேயே பார்த்துக் கொண்டிருந்தேன். என்னே யறியாமலேயே என் மனதை என்னமோ செய்தது. இதற்குக் காரணம் என்னவாக இருக்கலாம் ?

அவளிடம் என்னவாவது பேச வேண்டுமென்றிருந்தது. என்ன பேசுவது ? எப்படிப் பேசுவது ? சரியாகப் பதில் கிடைக்கும் என்பது என்ன நிச்சயம் ?

உலகில் தினம் தினம் எத்தனே எத்தனேயோ சோக சம்பவங்கள் நிகழ்ந்துகொண்டே போகின்றன. உள்ள முருக்கும் அந்தச் சோகக் கதைகள் நித்தியம் நிகழ்ந்து கொண்டிருந்தும், சர்வ சாதாரணமாகத்தானே எல்லோரும் காரியங்கள் செய்துகொண்டு போகிருர்கள் ? ஆனல், மற்றவர்களின் தவிப்பைக் கண்டு மனம் நொந்து கொண்டே யிருந்தால் உலகில் வாழ்வதுதான் எப்படி ? இவ்வித வேதாந்த நினேப்பு ஒரு கணத்தில் மறைந்து விட்டது. என்னதான் மனதைக் கல்லாக்கிக் கொண்டு ‘கம்’மென்று இருந்து விடலாம் என்ருலும் என்னல் முடியவில்லே.

பஸ் சிறிது நேரம் வழியில் ஒரு கிராமத்தில் நின்றது. இரண்டொருவர் இறங்கினர்கள். என் பக்கத்திலிருந்தும் ஒருவர் கீழே இறங்கினர். அப்பாடி ! கொஞ்சம் இடம் கிடைத்தது.

பஸ் மறுபடியும் அலறிக்கொண்டு புறப்பட்டது. அந்தக் கோர சப்தத்தை அந்தப் பெண் சகிக்கவில்லே போலும். என்னவோ முணு முணுத்துக் கொண்டாள்.

“அம்மா, கொஞ்சம் தள்ளி வேணுமானுல் உட்கார்ந்து கொள்ளுங்கள்” என்றேன்.

அவள் குனிந்திருந்த தலையை உயர்த்தினுள். ஆனுல், பேசவில்லை.

அவளுடைய குறிப்பிலிருந்தும், முகத் தோற்றத்திலிருந்தும் அவள் உயர்ந்த குணமுள்ளவள் என்று தோன்றிற்று.

‘சிலு சிலு’ என்று அடித்துக் கொண்டிருந்த இளந் தென்றலும், பூக் கொத்துகளுடன் மெதுவாக அசைந்து கொண்டிருந்த பச்சைக்கொடிகளும், ‘கும்’மென்று இருண்டு கொண்டு வந்த நீலவானமும் அன்று இயற்கைக்கு விரோதமாக என் கண்களுக்குப் பட்டன. சில்லென்ற தென்றலும் ஒரு சோக கீதத்தை இசைத்துச் செல்வது போலிருந்தது. அவளுக்கும் அம்மாதிரிதான் பட்டிருக்க வேண்டும்.

இன்னும் அரை மணியில் கோயமுத்தூருக்குப் போய் விடலாம் என்ருர் பின் சீட்டில் தத்தளித்துக் கொண்டிருந்த ஒருவர். “அப்பாடி” என்று பல குரல்கள் முணுமுணுத்தன. அவள் கோயமுத்தூர் என்றதும் தலையைத் தூக்கினுளே யொழிய ஒன்றும் பேசவில்லை. ஆனுல், யாரிடம்தான் பேசுவாள்? அவளுக்கு வேண்டிய ஒருவருந்தான் அங்கு இல்லையே!

‘ஐயோ பாவம்’ என்று அவள் துயரத்தில் நானும் பங்குகொண்டு வருகிறேன் என்பது அவளுக்கு எப்படித் தெரியும்? அப்படித் தெரிந்தும் கூட அவள் பேசாமல் இருக்கலாம். அப்போதைய எனது உடையும் தோற்றமும் அவ்விதம் இருந்தன. நாலைந்து நாளாக ஒரு காரியமாக அலைந்துகொண்டிருந்தேன். உணவு, உடைகளைப் பற்றிக் கூட கவனிக்க நேரமில்லை. ஆனுல் நான் கோயமுத்தூர் போனதும் சாப்பிட்டு விட்டுத்தான் வந்த காரியத்தைப் பார்ப்பது என்றிருந்தேன்.

கடைசியாக பஸ் கோவைக்கு வந்து சேர்ந்தது. மத்தியானம் மணி பனிரண்டிருக்கும். வெயில் கொளுத்திக் கொண்டிருந்தது. கீழே இறங்கியதும் எல்லோரும் அவரவர் திக்கை நோக்கிப் புறப்பட்டார்கள். ஆனல் அந்தப் பெண்...?

நீர் தோய்ந்த கண்களுடன் பரிதாபமாக அவள் தெருவில் நின்று கொண்டிருந்தாள். என்னதான் தப்பிதமாக நினைத்துக்கொண்டாலும் நினைத்துக் கொள்ளட்டும் என எண்ணி, "அம்மா, நீங்கள் எங்கே போக வேண்டும்?" என்று கேட்டேன்.

அவள் திகைப்புடன், "தெரியாது!" என்ருள்.

எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. "என்ன! தெரியாதா? உங்களுக்கே தெரியாதா?" என்றேன்.

பிறகு விசாரித்ததில் அந்தப் பெண்ணின் சகோதரி ஆஸ்பத்திரியில் அபாய நிலையில் இருப்பதாகத் தந்தி வந்திருப்பதாகவும், இந்த ஊரில் அறிமுகமானவர்களோ சுற்றத்தார்களோ யாரும் இல்லை என்பதாகவும் தெரிந்தது.

அவள் தன் சகோதரியைச் சீக்கிரம் பார்க்க வேண்டுமென்று துடி துடித்துக் கொண்டிருந்தாள்.

என்னுடைய காரியத்தை அப்புறம் பார்த்துக் கொள்ளலாம் என்று தீர்மானித்துவிட்டு, அவளை அழைத்துக்கொண்டு என்னுடைய நண்பர் ஒருவர் வீட்டிற்குச் சென்றேன்.

நாங்கள் போகும்போது அவர் வீட்டு வராந்தாவில் நின்று கொண்டிருந்தார். எதிர் பாராத விதமாக என்னைச் சந்திக்கவே அவருக்கு மிகுந்த மகிழ்ச்சி உண்டாகி விட்டது.

"அடடா! இன்று காலையில் எதற்கோ உங்கள் ஞாபகம் வந்தது" என்ருர்.

என் அருகில் நின்றுகொண்டிருந்த அந்தப் பெண் ஆச்சரியத்தோடு அவரை உற்றுக் கவனித்தாள். அவரும்

ஏற இறங்க இரண்டு மூன்றுதரம் அவளைப் பார்த்து விட்டு, "எங்கேயோ பார்த்த ஞாபகமாக இருக்கிறது" என்றார்.

பின்னர் யோசித்துப் பார்த்துவிட்டு, ஈரோட்டி லிருக்கும் தன் தம்பியைப் பார்க்கப் போகும் போதெல் லாம், எதிர் வீட்டிலிருந்த இந்தப் பெண்ணையும் பார்த் திருப்பதாகச் சொன்னார்.

உடனே அவர், "அம்மா, உங்கள் சகோதரி கூட இங்கே ஆஸ்பத்திரியில்..." ஆனால் திடீரெனத் தம் வார்த் தையை முடிக்காமல் நிறுத்திக்கொண்டார்.

"ஆமாம், பார்க்கத்தான் வந்திருக்கிறேன்" என்று அவள் வருத்தத்தோடு சொன்னாள்.

"சரி, மூன்று மணிக்கு மேல் போகலாம்; நானும் வருகிறேன்" என்றார் நண்பர். "இப்போதே போவோமே" என்றேன் நான். ஆனால் அவர் மூன்று மணிக்குத்தான், போகவேண்டும் என்று மன்றாடிக் கேட்டுக் கொண்ட காரணம் பின்னர்தான் விளங்கிற்று

சிறிது ஆகாரம் செய்துகொண்டு அங்கேயே இருந் தோம். ஜன்னலோரம் உள்ள நாற்காலியில் அவள் உட் கார்ந்துகொண்டு தலை கவிழ்த்திருந்தாள். அந்நிலையில் அவளைக் காணும்போது ஒரு விவரிக்க முடியாத தவிப்பு என் உள்ளத்தை வாட்டியது. நான் எங்கேயோ போய்க் கொண்டிருந்தேன். அவள் எவ்வாறு என்னோடு வந்து சேர்ந்தாள்? இப்படி நூதன சம்பந்தங்கள் உலகில் தினம் நிகழ்ந்து கொண்டுதானிருக்கிறதா? அத்யந்த சிநேகிதம் 'சடா'ரென்று முறிந்து விடுவதைக் காட்டி லும் இப்பேர்ப்பட்ட விந்தை உறவு உண்டாவது விசித் திரம் அல்லவா?

இப்படிப் பலவிதமாக எண்ணிக்கொண்டு எதிரே மலர்கள் குலுங்கிக் கொண்டிருந்த வாலாங்குளத்தைப் பார்த்தேன். வாலாங்குளம் என்பதில் என்ன அர்த்தம்

இருக்கிறதோ அது எனக்குத் தெரியாது. ஆனால் பூக்கள் குலுங்க அழ கலைகளை அள்ளி வீசிக்கொண்டிருந்த குளம் பல பேருண்மைகளை தெளிவாக எடுத்துக் காட்டியது. அழகு, இனிமை, சுகம் எல்லாம் கணப் பொழுதில் மறைந்துவிடக் கூடியவைதானே? ஆனால் இருக்குமட்டும் எவ்வளவு கோமளமாகக் காட்சி அளிக்கின்றது? கிர கணம் பிடிக்கப்போகும் கடைசி நிமிஷம் வரை தண் ணொளியை வீசிக்கொண்டிருக்கும் சந்திரனைப்போல. நான் எவ்வளவு நேரம் இப்படி அதிசயத்தில் மூழ்கியிருந்தேனோ தெரியாது. மணி மூன்றாகி நாடக முடிவும் தெரிந்தது. சாந்தி சலனமாகி விட்டது. "ஐயோ, இதைக் கேட்கவா இங்கு வந்தேன்" என்ற தீனக்குரல் அந்தப் பெரிய வீட்டையே அதிரும்படி செய்துவிட்டது. "காலையி லேயே முடிந்துவிட்டது. திடீரென வந்ததும் என் சொல்லவேண்டும்" என இருந்தேன். மூன்று மணிக் குச் சுடுகாட்டுக்குப் போகலாம் எனப் பலவிதமாக அவர் ஆறுதல் சொன்னார். ஆறுதல் அவள் அடைந்தாளா? அது எவ்வளவு தூரம் துயரை மறக்கச் செய்தது என் பதைப் பற்றியெல்லாம் எனக்குத் தெரியாது. வாழ்வில் ஒரு நாடகம் முடிந்துவிட்டது. சந்தடியில்லாமல் ஆரம்ப மானதைப்போலவே அது சந்தடியில்லாமல் அடங்கிவிட் டது. அதே சமயம் எதிரில் உள்ள குளத்தில் மாலைச் சூரியனின் வெப்பத்தைத் தாங்காது தலைசாய்த்துக் கொண்டே சோரும் ஒரு அல்லி மொக்கு என் கண்களுக் குத் தெரிந்தது. இரவின் இருளிலே என் காரியத்தைக் கவனிக்க நண்பரைத் தேடி நான் சென்றுவிட்டேன்.

இன்று மறுபடியும் அந்தப் பெண்ணைச் சந்திப் போமா என்ற ஒரு மங்கலான ஆசை என் உள்ளத்தில் வந்து மோதுகிறது. ஏன் சந்திக்க வேண்டுமோ, அது எனக்கே தெரியாது.

# திரும்பிய உயிர்

இளவேனிற் காலத்து நிலா வானவீதியில் வட்டமிட்டுக் கொண்டிருந்தது. ஜில்லென்று வேப்பங்காற்றின் மணம் நிறைந்த அந்த முன்வாசலின் ஓரமாகக்கட்டிலில் படுத்திருந்தான் கருப்பணன்.

பாதிராத்திரி சமயத்திற்கு மேலிருக்கும். கிராமம் முழுதும் ஆழ்ந்த உறக்கத்திலும், சொப்பன மயக்கத்திலும் மூழ்கிக்கிடந்தது. பூர்ண சந்திரிகையில் ரமித்திருந்த அந்தக் கோலாகலத்தைக்கண்டு களிக்க யாருமில்லையே என்ற துக்கத்தால் தலை ஆட்டுவன போன்று, நிலவில் குழித்தெழுந்த உச்சாணிக்கிளைகள், சற்றைக் கொருதரம் தலையசைத்துச் சத்தம் செய்தன. எங்கிருந்தோ இந்த சௌந்தர்யத்தால் தீண்டப்பட்ட, உள்ளத்திலிருந்து பொங்கிய ஆனந்தம், குழல் வழியாக வழிந்து கொண்டிருந்தது.

இந்த மாதிரியான அற்புத நாதம், அதுவும் அந்நேரத்தில், பக்கத்துப் பட்டிகளில் படுத்திருக்கும் பண்ட மேய்க்கிற பையன் களிடமிருந்து கேட்பது உண்டு. அப்போதெல்லாம் கருப்பணன் அதை எவ்வாறு ரசித்தான்? ஆனல் இன்றோ? மனம் ஒன்றில் ஆழ்ந்து லயித்துவிட்டால் மற்ற விஷயங்களுக்கு இடம் ஏது?

கருப்பணன் கட்டிலிலிருந்து எழுந்தான். சிறிது நேரம் அங்குமிங்கும் நடந்துவிட்டு, மறுபடியும் கட்டிலில் போய் உட்கார்ந்தான். கட்டிலுக்குக் கீழே அவனுடைய போர்வை கால்பட்டு உருண்டு கீழே விழுந்திருந்தது. அதை எடுக்கலாமென்று குனிந்தவன், பின் எதையோ

ஞாபகப் படுத்திக்கொள்ள முயலுபவன்போல் நிமிர்ந்து உட்கார்ந்தான். அர்த்தமின்றி எதிர்த் திசையில் அவன் பார்வை சென்றது.

அதே சமயம், வேப்பமரத்து வேரில் கட்டியிருந்த வெள்ளைக் காளையும் 'அம்மா' வென்று கத்தியது. அதன் அழைப்புக்குரலைக் கேட்டதும் சட்டென்று கருப்பணன் எழுந்துவிட்டான். அருகிலிருந்த கம்பம் போரிலிருந்து ஒரு தாவு பிடுங்கிப்போய், காளையின் கிட்டத் தூவிவிட்டு, தாளியிலிருந்த கழுநீரையும் கலக்கிவிட்டான். கலங் காதிருந்த புண்ணுக்கில் கை பட்டதும், 'குப்' பென்று ஒருவித வாசனை எழுந்தது.

கருப்பணன் கொஞ்ச நேரம் காளையின் முதுகைத் தடவிக் கொடுத்துக் கொண்டிருந்தான். அதன் கொம்பை ஆர்வத்துடன் நீவி விட்டான். பின்பு ஒரு தாய்தன் குழந்தையை அன்புடன் பார்த்துக் கொண்டிருப்பது போல், அங்கேயே கண் கொட்டாமல் காளையைக் கவனித்தபடி உட்கார்ந்து விட்டான்.

அந்தச் சமயம், இவன் நேற்றுச் சொல்லிய சங்கதியை கேட்டிருந்தவர்கள் யாராவது கண்டிருந்தால், "விடிந்ததும் சந்தைக்குக் கோண்டுபோகிற காளைக்கு இத்தனை பணிக்கை பண்ணுவானேன்?" என்றுதான் வியந்திருப்பார்கள். ஆனல் அவனல் அப்படியிருக்க முடியவில்லையே!

முதலாவது அந்தக் காளையை விற்பதற்கே அவனுக்கு விருப்பமில்லை. இருந்தாலும் என்ன செய்வது? விற்க வேண்டிய காலம் வந்து விட்டதே! கருப்பணனுக்கு அங்கு உட்கார்ந்து அதைப் பார்க்கப் பார்க்க துக்கம் பொங்கிக் கொண்டு வந்தது.

நாளையோடு தீர்ந்தது. அப்புறம் யாராவது விலைக்கு வாங்கிக்கொண்டு போய்விட்டால் பின் அந்தப் பொருள் அவர்களுக்கே சொந்தம். என்ன வேண்டுமானலும்

இஷ்டப்படி செய்யலாம். கவலையில் பூட்டி, ஏரில் கட்டி, தாம்பில் அடித்து இன்னும் வண்டிச் சவாரியில் தார் போட்டு முடுக்கி, எப்படி வேண்டுமானாலும் அலைக்கழிக்கலாம். யார் வேண்டாம் என்று தடுப்பது? தன்னைப் போல் அவ்வளவு பாங்காகக் கவனிக்கும்படி யாரையும் கட்டளையிட முடியாதே' யென்று நினைக்கையில், கருப்பண்ணன் மூளை கலங்கிப்போன மாதிரியே இருந்தது.

சாதாரணமாக இடைவெளியில் வந்து போகிற மாடுகளா யிருந்தால்கூட அவன் இவ்வளவு வியாகூலப்பட்டிருக்க மாட்டான். அந்தக் காளை அவனுக்குக் கிடைத்ததே ஒரு தனி வழி. அதை நினைக்கவும் அவன் மனம் கலங்கினது.

எட்டு வருஷங்களுக்கு முன்தன் கலியாணம் நடந்த மறுமாசம் மாமனார் வீட்டுக்குப் போயிருந்தான். அந்தக் காலத்தில் இரண்டு குடும்பங்களும் எடுப்பாகவே இருந்தன. ஒண்டிக்காடு வைத்திருக்கிறவர்கள் இவர்களிடம் ஏர் கட்ட எருதுக்காக வருவார்கள். அந்த மாதிரி தாராளம் தழும்பி வழிந்து கொண்டிருந்ததினால்தான், அவனுடைய மாமனருக்கும் அப்படிச் சொல்லத் தோன்றியது. கருப்பணன் ஊருக்குப் புறப்பட்டு வருகையில், 'மாப்பிளே, இந்தச் சேங்கண்ணையும் புடிச்சிட்டுப் போங்க. இது பெரிய மாட்டு வர்க்கமுங்க. நம்ம தங்கத்துக்கு இது மேலே உசிர்' என்று சொன்னர்.

கருப்பணன் சிரித்தான். தங்கத்தின் உயிரை மாமனர் வீட்டில் விட்டு விட்டு, வெறும் 'கூண்டை' தன்னேடு அழைத்துப்போக விரும்பவில்லை அவன். "சரி, நீயே அதைப் பிடிச்சிக்கிட்டு வா" என்று தன் மனைவியிடம் கூறியது இன்னும் நினைவிலிருந்தது.

இன்று அதையெல்லாம் நினைத்துப் பயன் என்ன? சம்சாரத்தில் ஏற்பட்ட கஷ்ட நிஷ்டூரத்தைச் சகியாது அந்தக் காளையையும் விற்கவேண்டி வந்து விட்டது.

அடுத்த நாள் சந்தைக்குப் பிடித்துப் போவதென்றும் தீர்மானித்து விட்டான்.

எழுந்துபோய் படுக்கவும் கருப்பணனுக்குத் தோன்ற வில்லை; உட்கார்ந்திருக்கவும் பிடிக்கவில்லை. அவனுடைய மனதில் எண்ணங்கள் மலைபோல் எழுந்து வளர்ந்தன. முடிவே யில்லையோ என்று சொல்லும்படி ஈசல் கும்பல் மாதிரி சிந்தனைகள் குவிந்துகொண்டேயிருந்தன. சமா தானம் இல்லாமல் தன்னைத்தானே சலித்தபடி இருந்தான் அவன்.

விற்காமலே இருந்துவிடலாமா வென்று ஒருதரம் எண்ணுவான். அப்படி யிருக்கவும் முடியாதே என்று அடுத்த நிமிஷமே தோன்றும். மழை துளித்து, காடு நனைந்து இரண்டு நாட்கள் ஆகிவிட்டதே! ஊரிலே எல்லோரும் விதைவிதைக்க ஆரம்பித்து விட்டார்களே! 'உண்பாரைப் பார்த்திருந்தாலும் உழுவாரைப் பார்த் திருக்க முடியுமா?' தவிர, காடு காய்ந்துவிட்டால் முச் சூடும் வெட்டியாகி விடுமல்லவா? வேறு ஏதாவது ஒன்றை விற்கலாமா வென்று யோசிப்பான். ஆனல் பாக்கி யிருக்கும் கிழடுகளை யார் விலை கொடுத்து வாங்கு வார்கள்? அவன் வேண்டுமானால் உழவில் பூட்டிக் சீரழியலாம். இந்த ஒரு வழியைத் தவிர வேறு எந்த மார்க்கமும் இல்லை யென்று பட்டது அவனுக்கு.

கடைசியாக நிலை கொள்ளாமல் புத்தி சுவாதீனமற்ற வனைப்போல சலிப்புடன் வந்து படுக்கையில் வீழ்ந்தான். காற்று குளிர்ந்துதான் அடித்துக் கொண்டிருந்தது. ஆனல் அவனுடைய ஹிருதய ஜ்வாலையைத் தணிக்க முடியவில் லையே! வெளிக் காற்றுக்கு அவ்வளவு சக்தி ஏது?

அடுத்த நாள் கருப்பணன் கோழி கூவுவதற்கு முன்பே எழுந்து விட்டான். முதல் வேலையாகக் காளையை இடம் மாற்றிக் கட்டிவிட்டு, சாலையில் படுத்திருந்த பையனிடம் கட்டுத் தறையை ஒழுங்குபடுத்தச்

சொன்னான். பின்பு சந்தையில் என்னென்ன சாமான்கள் வாங்கி வருவது என்பதை ஞாபகப்படுத்தத் தன் மனைவியிடம் போனான். அவள் அப்போதுதான் எழுந்து வாசல் தெளிக்க சாணி கலக்கிக் கொண்டிருந்தாள். அவளைப் பார்க்கவும் அவனுக்கு என்னவெல்லாமோ பழைய சம்பவங்கள் முன்னுக்கு ஓடிவந்து நின்றன. சரி, அப்புறம் கேட்டுக் கொள்ளலாமெனத் தன் வேலையைக் கவனிக்கலானான்.

ஆச்சு. எல்லா வேலைகளையும் கச்சிதமாக முடிப்பதற்குள் பொழுது வேலிக்குமேல் வந்து விட்டது. பயணக் கோலத்துடன் காளையைத் தலைக் கயிற்றுடன் பிடித்துக்கொண்டு வாசலுக்கு முன் வந்து நின்றான். அவன் மனைவி அவனை வழியனுப்பிவிட ஒரு கையை வாசல்படியிலும், மற்றொரு கையை நிலையிலும் ஊன்றிப் பிடித்துக் கொண்டு நின்றாள்.

கருப்பணன் காளையுடன் தன் எதிரில் நிற்பதைப் பார்த்ததும் அவளுக்கு என்னென்ன ஞாபகங்கள் வந்தனவோ? அவள் கண்களில் நீர் திரண்டது. அவளுடைய உதடுகள் எதையோ சொல்ல முடியாததை வெளியிட முயலுவதுபோல், அசைந்து கொடுத்தன. தன் கணவனின் சவத்தின்முன் கண்ணீர் வடிக்கும் பெண் மாதிரி அத்தனை விசனத்துடன் அவள் நின்றிருந்தாள்.

இதைக்காண கருப்பணனுக்கு சகிக்கவில்லை. சட்டென்று அங்கிருந்து கிளம்பிவிட வேண்டுமென்று, "சரி, நான் போய்ட்டு வாறேன்" என்று புறப்பட்டான். அவளும் தலையாலேதான், "போய் வா" என்று விடை கொடுத்தாள். ஆனால் ஒரு கணத்தில அவளுடைய மனதில் மகத்தான மாறுதல் ஏற்பட்டுவிட்டது.

"நில்லுங்க" என்று வாய்விட்டுக் கத்திக்கொண்டு முன்னுக்கு ஓடிவந்தாள். கருப்பணன் பிரமை நீங்காதவனாய், "ஏன்? என்ன?" என்றான்.

"நீங்க அதை விக்கவேண்டாம் சந்தைக்குக் கொண்டு போகவேண்டாம்..."

"பின்னே பணத்துக்கு......"

"என் மங்கிலியம்......"

"என்ன, உன் தாலியா?"

"ஆமாம், இதோ கொடுக்கிறேன். இந்தாங்க, இதை வித்து வேண்டியதை வாங்கிக்கொள்ளுங்க! என் உயிர் இங்கேயே இருக்கட்டும், நான் இருக்கிற மட்டும் இதைப் பிரியமாட்டேன்" என்ருள், தன் உறுதியில் சற்றும் தணியாமல்.

# பழைய நினைவு

வீட்டின் முன்னறையில் ஜன்னலுக்கருகே உட்கார்ந்து கொண்டு தன் கணவனின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள் ராதா. முன்னிரவிலேயே இருள் கவிழ்ந்து வந்தது. அன்று அமாவாசை. கனத்த பேரிருளில் வானமும், பூமியும் ஒன்றையொன்று கட்டித் தழுவிக் கொண்டாற்போல் தோன்றியது.

'இன்னும் சற்று நேரத்தில் வந்து விடுவார்,' என்று தன்னுள்ளே சொல்லிக்கொண்டாள் ராதா. அவள் புருஷன் ரயில்வே ஸ்டேஷன் மாஸ்டர். இந்த ஊருக்கு மாற்றலாகி வந்து நான்கு நாள்தான் ஆகிறது. அந்த இருளடைந்த சிறிய ஸ்டேஷனில் எப்பொழுதும் அதிக ஜன நடமாட்டம் இருக்காது. ஸ்டேஷன் மாஸ்டர் ராமசாமியும் போர்ட்டர் ஒருவனும்தான் எப்பொழுதும் காத்துக் கொண்டிருப்பார்கள். மணி ஒன்பது அடித்து விட்டது. ஆனல் ராமசாமி ஏனே வீட்டிற்கு இன்னும் வரவில்லை. அவன் வராதுபோன காரணத்தைப்பற்றி ராதா நீண்ட நேரம் யோசித்துக் கொண்டிருக்கவில்லை. ஒன்பதரை மணிக்கு வரும் வண்டி ஒன்றுதான் இருக்கிறது. அதன் பிறகு இரவு இரண்டுமணிவரை வண்டியொன்றுமில்லை. ஆகவே சற்று நேரத்திற்கெல்லாம் வந்து விடுவான் என்று எழுந்திருந்து வெளியே வந்து கதவைத் திறந்து பார்த்தாள்.

ஆகாய அகண்ட முகட்டுவரை எங்கும் அந்தகாரம். தூரத்தில் திசை முடிவில் தெரியும் மரங்களின் இருண்ட சாயை, அவள் மனதிலிருந்த சஞ்சலத்தை அதிகப் படுத்தி

யது. கதவை மூடிவிட்டு உள்ளே வந்து கட்டில் மீது சலிப்புடன் படுத்துக் கொண்டாள்.

அன்று காலையிலிருந்தே அவள் கலக்க மடைந்திருந்தாள். அன்றுதான் பழைய நினைவுகளை ஞாபகத்திற்குக் கொண்டு வந்தாள். அவள் தாயாரைப் பற்றியும், கிராமத்தைப் பற்றியும், தன் இளம் தோழிகளைப் பற்றியும் எண்ணினாள். அவளுடைய சிநேகிதைகளுடன் நந்தவனத்திற்கு மலர் கொய்து வரச்சென்றதும் சிரித்து விளையாடிக்கொண்டு ஆற்றிலிருந்து நீர் கொண்டு வந்ததும் ஞாபகத்திற்கு வந்தது. இனியும் அந்த மாதிரி ஒருகாலம் வருமா?

'உன்னைச் சேர்ந்தவர்களை மறந்து விட்டாயே" என்று யாரோ இடித்துக் கூறுவது போலிருந்தது அவளுக்கு. இவற்றிற்கெல்லாம் உச்சம் வைத்தது போன்ற ஒரு சம்பவம், அன்று காலை நடந்தது. அதுதான் அவள் நெஞ்சை கடூர வேதனைக்கு உட்படுத்தி விட்டது. அன்று காலை தண்ணீர் கொண்டுவருவதற்காக ஊர்க் கிணற்றிற்குப் போயிருந்தாள். கிணற்றுக்கு அருகே பிள்ளையார் கோவில் ஒன்றிருக்கிறது. அதற்கு எதிரில்தான் அந்த சம்பவம் நடந்தது. அதுதான் அவள் நெஞ்சைக் கலக்கி விட்டது. குடத்து ஜலத்துடன் கிணற்று மேட்டையடைந்து வீட்டுக்கு வந்துகொண்டிருந்தாள். அப்போது அவள் பார்வை தற்செயலாக கோவிலின் அருகே சாய்ந்தது. அவள் திருஷ்டியில் பட்டது இது.

ஒருத்தி. வயது பதினைந்து அல்லது பதினாறிருக்கும். அவள் அருகே ஒருவாலிபன். இருபது இருக்கலாம் வயது. அவன் சொன்னான் அவளிடம்:

"நீ என்னை ஏமாற்றிவிட்டாய். என்னை மோசம் செய்து விட்டாய். இறக்கும் வரை சாந்தியில்லாமல் செய்து விட்டாய் எனக்கு." மனதை நோக வைக்கும் ஒரு நோவு கலந்திருந்தது அவன் குரலில்.

தேம்பிக்கொண்டே அவள் சொன்னுள்: "இல்லை. நீ நினைப்பது தவறு. நான் உனக்குத் துரோகம் செய்து விட்டதாகச் சொல்கிருயே. கொஞ்சம் யோசித்துப் பார். எப்படி இது நிகழ்ந்ததென்பதை சற்று யோசித்துப் பாறேன்..." அவள் சொல்லிக் கொண்டு வரும் போதே அழுதாள். மறுபடியும் அழுதாள். அழுது கொண்டே யிருந்தாள்.

அந்தக் காட்சி, பிள்ளையார் கோவிலுக் கெதிரில், யுவதி, யுவனிடம் சொன்ன பேச்சுக்கள், அவன் கலங்கிப் போய் அவள் முன்னுல் சோர்ந்து நின்றது, எல்லாம் ராதாவின் உள்ளத்தில் மோதி எதிரொலித்தன. அவள் கண்கள் களைத்துச் சோர்ந்தன. மயக்கம் வரும் போலிருந்தது. நிலை தடுமாறிப்போய் விட்டாள். நடக்க முடியாமல் வீட்டை நோக்கி நடந்தாள். மனதிற்குள்ளாகவே, 'நானும் துரோகம் செய்து விட்டேன். ஆமாம், என் நண்பனை ஏமாற்றி விட்டேன். அவன்கூட அந்த வாலிபனைப் போலத்தான் புலம்பி யிருப்பானே?'

அன்றிரவு ராமசாமி சாப்பிடும் பொழுதுகூட அவள் ஒருமாதிரியாய் இருந்ததைக் கவனிக்கவில்லை. விடியற்காலை ஸ்டேஷனுக்கு எழுந்து போனவன், காபி சாப்பிட வீட்டிற்கு வந்தபோதுதான் அவள் முகத்தை நன்ருகப் பார்த்தான். யெளவனம் மிளிரும் அக் கண்களில் சஞ்சலம் நிறைந்திருப்பதைக் கண்டவுடன் திகைத்துப் போனுன். இவ்வளவு நாளாக ஆனந்தமாகத் தன்னேடு பேசிக்கொண்டிருந்தவள், நேற்று இரவு ஒரு வார்த்தையும் பேசாது போனது சட்டென்று நினைவுக்கு வந்தது. மிகுந்த பரிவுடன் அவளிடம் கேட்டும், 'ஒன்றும் இல்லை. எப்பொழுதும்போல்தான் இருக்கிறேன்' என்று சொல்லிவிட்டாள். அதற்குமேல் அவளைத் தொந்தரவு செய்து விஷயத்தைக் கிளறிக் கேட்டு அறிந்துகொள்ள விரும்பவில்லை அவன்.

அவனுடைய சிநேகிதன் இன்று வருவதாக எழுதி யிருந்த கடிதத்தை வாசித்துக் காட்டினன் மனைவியிடம். தன் நண்பன் தன்னிடம் வைத்திருக்கும் அன்பையும், மதிப்பையும் விஸ்தரித்துச் சொன்னன். இரண்டு நீண்ட வருஷங்களுக்குப் பிறகு இன்று அவனைச் சந்திக்கப் போகும் சந்தோஷ சமாசாரத்தை அவளிடம் சொன்னன்.

ஆனல் அவள் மனதில் ஒன்றும் பதியவில்லை. அவன் பேசிக்கொண்டு போவதை சிரத்தையுடன் கேட்டுக் கொண்டிருப்பதாகப் பாசாங்கு செய்தாளே யொழிய உண்மையில் அவள் கவனம் நதியின் ஓட்டத்தில் சென்றிருந்தது. அதுதான் வாழ்க்கை நதி. அதன் பிரவாகத்திலே ஒரு மலர்போல் தான் மிதந்து செல்வதாக அவள் எண்ணினள்.

இந்த உல்லாசப் பிரயாணத்தில் எனக்கேன் இடைஞ்சல் வந்தது? ஓஹோ இப்பொழுது நான் சுழலில் சிக்கிக் கொண்டேனு? அப்படியானல் எங்காவது கற்பாறை ஒன்றில் மோதி.........மிகப் பயங்கர மான புயல் வீச்சுகள். சை! இந்தக்கொடூர எண்ணங்களை மனம் ஏன் கல்பிதம் செய்கிறது? அன்று பகற்பொழுது வரை அவள் மனதில், 'ஜீவிய ஆரம்பத்தில் தாயின் கைக்குழந் தையா யிருந்தது, பால வயதில் தன்னேடொத்தவர்களு டன் ஆனந்தமாய்ச் சேர்ந்து விளையாடியது' போன்ற எண்ணங்களே நிறைந் திருந்தன. இந்த நினைவுகள் மாத் திரம் தான் அந்த இளம் இருதயத்தில் ஓடிக் கொண்டிருந் தனவா? இல்லை. இதற்கும் மேலான துக்கத்தைத்தரும் ஒரு சிந்தனை தன்னுடைய அவியும் குரலில் பாடிக் கொண்டிருந்தது.

அது நீண்ட நாட்களாக தன்னுடன் இருந்த நண்ப ஞெருவனை இழந்துவிட்ட ஏக்கத்தினல் ஏற்பட்ட துக்கம். அந்தத் தாங்கொணுத் துயரம் அவளை அலைய வைத்தது.

ராமசாமி தன் அறையில் தூசு படிந்திருந்த

புஸ்தகங்களையும், படங்களையும் நன்றாகத்துடைத்து ஒழுங்காக அடுக்கி வைத்துக் கொண்டிருந்தான். அவன் மனைவி வீட்டு வேலைகளில் மும்முரமாய் ஈடுபட்டு தன்னைச் சிதறடித்த பழைய நினைவுகளை மறந்திருந்தாள்.

பகற்பொழுதும் கழிந்து மாலை வந்தது. அப்பொழுது தான் ரயிலில் வந்து இறங்கிய தன் நண்பனுடன் ராமசாமி வீட்டிற்கு வந்தான். வாசலில் நின்றுகொண்டிருந்த ராதாவிடம், "நேற்று உன்னிடம் சொன்னேனே, இவர்தான்" என்று தன் நண்பனை அறிமுகப்படுத்தினான்.

அவர் பக்கம் ராதா திரும்பிப் பார்க்கும் போது அவரும் பார்த்துவிட்டார். அவர் முகத்தை நேராகப் பார்த்தவுடன், அவர் யாரென்பதைந் தெரிந்துகொண்டாள். அதை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல் வீட்டினுள்ளே போய்விட்டாள்.

ராமசாமியும், நண்பனும் அறையில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தனர். நீலகிரியில் தனக்குக் கிடைத்திருக்கும் வேலையைப் பற்றியும், தன் மனைவி, குழந்தை, முதலியவைகளைப்பற்றி ராமசாமியிடம் சொல்லிக் கொண்டிருந்தான் அவன் நண்பன்.

அவன் பேசிக்கொண்டு போகையில், இடையே பேச்சுக்கள் தடுமாறிப்போவதை ராமசாமி கவனிக்கவில்லை. அவனால் கவனித்திருக்கவும் முடியாது. ராதாவின் சொந்தக் கிராமமும், தன் சிநேகிதனின் ஊரும் ஒன்று தான் என்பது அவனுக்கு எப்படித் தெரியும்?

இரவு பதினொரு மணியிருக்கலாம். ஸ்டேஷன் மாஸ்டரின் அறையில் எரிந்து கொண்டிருக்கும் சிறிய விளக்கின் வெளிச்சம், வெளியே பரவியிருக்கும் காரிருளை பலமாக எடுத்துக் காட்டியது. ராமசாமி நன்றாகத் தூங்கிவிட்டான். அவன் நண்பனுக்கு மட்டும் ஏனோ தூக்கம் வரவில்லை.

அவன் வெகு காலத்திற்குப் பிறகு இன்றுதான்

அவளைப் பார்ந்தான். அவள் தன்னை மறந்து விட்டிருப் பாளோ வென்று ஒருசமயம் எண்ணுவான். இல்லை, அப்படியிருக்காது. ஒருக்காலும் மறக்க மாட்டாள் என்று தன்னுள்ளே திடம் கொள்வான். முன்பு நிகழ்ந்த வற்றை நினைத்தவுடன், அவன் மனம் அலைபாய்ந்தது.

இந்த இருண்ட இரவில் அவனைப் பற்றி யெண்ணி மனங்கலங்கும் இளம் பெண்ணைப் பற்றி அவனுக்குத் தெரிந்திருக்க முடியாது.

ராதா படுக்கையில் புரண்டு புரண்டு படுத்தாள். அவளுக்கு படுக்கை கொள்ளவில்லை. அவள் நெஞ்சில் வேதனை மூண்டது. பால்யத்திலிருந்து தன்னுடன் இணை பிரியாதிருந்த நேசனை இன்றுதான் அவள் கண்டாள். அவன் முன்பு தன்னிடம் சொன்ன பேச்சுக்கள் எல்லாம் இனிய கீதத்துடன் நாற்புறமும் சூழ்ந்து கொள்வதாக உணர்ந்தாள். அவளுடைய விவாகப் பேச்சு எழுந்த போது கூட அவன் கிராமத்தில்தான் இருந்தான். அவனைத் தனியாகச் சந்தித்து ஒரு வார்த்தை சொல்லிவிட வேண்டு மென்று நினைத்தாள். ஆனால் முடியவில்லை.........

ஒரு ஸ்திரமான தீர்மானததிற்கும் வரமுடியாமல் வெந்துயிர்த்துச் சாளரத்தைத் திறந்து வெளியே பார்த் தாள். 'அகண்ட வானத்தில் என்ன பார்க்கிறாய்' என்ற அக்ஷரங்களை நக்ஷத்திரங்கள் சித்திரித்துக் காட்டுவது போலிருந்தது அவள் காவியக்கண்களுக்கு. சோர்வுடன் படுக்கையில் சாய்ந்தாள்.

ராமசாமிக்கு தன் நண்பன் இவ்வளவு சீக்கிரத்தில் ஊருக்குப் புறப்பட்டு விட்டதன் காரணம் தெரியவில்லை. ரயில் புறப்பட இன்னும் இரண்டே நிமிஷங்கள் தானிருந்தன.

ஸ்டேஷன் மாஸ்டர் கடைசி வண்டியின் அருகே நின்று கொண்டிருந்தான்.

ராதா கண்களில் வழியும் கண்ணீரைத் துடைத்

துக்கொண்டு அவன் இருந்த வண்டியின் பக்கம் பார்த்தாள்.

அவன் நீர் நிறைந்த கண்களை அவளெதிரே காட்டப் பிரியப்படாமல் வேறு பக்கம் திரும்பிக் கொண்டான்.

# கல்லினுள் தேரை

நதி எங்கள் ஊரடியில் இரு கிளையாகப் பிரிகிறது. கம்பீரமாக அலை வீசிக்கொண்டு வந்த நீரின் வேகம் சற்றுத் தணிந்து, நாணிக்கோணி ஒதுங்கும் கன்னிப் பெண் போல இரண்டு புறமும் பாய்ந்து வழியும் வெள்ளத்தின் காட்சியே காட்சி! அதைப் பார்க்கப் பார்க்க ஆனந்தம் பொங்கிக் கொண்டுதான் இருக்கும். கிழக்கே வெகு தொலைவில் மறுபடியும் இரு கிளையும் ஒன்று சேர்ந்து மீண்டும் ஐக்கியமாகிப் போவதைப் பார்த்தால், ஒவ்வொரு மனத்திற்கும் தகுந்தபடி எத்தனையோ தத்துவங்களை அதில் காணலாம்.

எனக்கு இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருப்பதிலே பேரானந்தம்; திருப்தி. சுகமாக மணல் பரப்பின் மீது படுத்துக் கொண்டு நீரின் ஓசையிலே நெஞ்சைச் செலுத்தி, 'தன்னை மறந்த லயம் தன்னில்' ஆழ்ந்து விடுகிறது உண்டு. இப்படி ஒரு நாள் மிகவும் பரவசத்துடன் வழக்கமாக உட்காரும் இடத்தைத் தாண்டிக் கொஞ்ச தூரம் கரையோரமாக நடந்து சென்று ஓரிடத்தில் உட்கார்ந்தேன்.

அங்கொரு கற்சிலை கிடப்பது தெரிந்தது. சுமார் மூன்று மூன்றரை அடி உயரம் இருக்கும். வெயிலாலும், மழையாலும் சற்று மங்கிப்போ யிருந்தாலும் அதிகக் களையுடன்தான் இருந்தது. இடது பக்கத்து இடுப்பருகே ஒரு வெட்டுக்காணப்பட்டது. அநேகமாக அது உருக்குலைந்துதான் போயிருந்தது. இடுப்பளவு கீழே புதைந்த வண்ணம், ஊஞ்சல் மரத்தடியில் கன்னிமார் சாய்ந்திருக்கிற மாதிரி காட்சி அளித்துக் கொண்டிருந்தது, அந்தச் சிலை.

வெகு நேரம் அச்சிலையையே பார்த்துக்கொண்டு அக்கதி அடைவதற்கு முன் அது இருந்த கோலத்தையும், அதைச் செய்த சிற்பியைப் பற்றியும் யோசித்துக் கொண்டிருந்தேன். பொதுவாகச் சிற்பம், சித்திரம் முதலிய கலைகளைப்பற்றி நண்பர்களுடன் பேசிக் கொண் டிருந்தாலே ரவி வர்மாவின் அழகிய படம் எப்போதும் என் மனத்திரையில் தோன்ருமல் இருக்காது. அந்தச் சிலையைப் பார்த்தபோதும் அந்தச் சித்திரம் ஞாபகத்திற்கு வந்தது.

அஜ மகாராஜா இந்துமதியோடு முன் இரவில் உல்லாச மாகப் பூஞ்சோலையில் மேடை மீது உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கிருன். முன்னர் இந்துமதிக்கு ஏற்பட்ட சாபத்திற் கேற்பத் தேவலோகத்திலிருந்து பூமாலை ஒன்று மார்பின் மீது வந்து விழ, மாலையில் மடியும் ரோஜாவைப் போல் அப்போது அங்கு உயிர் துறக்கிருள். பசுமரம் போன்று தன் அருகே இருந்த இந்துமதி திடீரென்று உயிர் நீத்ததை மன்னன் கண்டு பிரலாபிக்கிருன். அஜ மகாராஜா அந்த உயிரற்ற பிரேதத்தைத் தன் மடி மீது வைத்துக்கொண்டு இரண்டு கைகளையும் விரித்து வானத் தைப் பார்த்துக்கொண்டு கண்ணீர் வடிக்கிருன். இவ் வளவு விஷயங்களும் நேரில் நடப்பது போல் அப்படியே சித்திரித்திருக்கிருர் ரவி வர்மா.

" இம்மாதிரி ஏதாவது நல்ல காட்சியைக் கண்டுதான் ரவி வர்மாவுக்கு அதை எழுதத் தோன்றியிருக்குமோ? ஆம், அப்படித்தான் இருக்கும்" என்று நான் வாய் விட்டுச் சொன்னேன்.

" அதில் சந்தேகமே இல்லை" என்று சொல்லிக் கொண்டே என் அத்தை மகள் சித்ரா அங்கே வந்தாள்.

நான் தனியாகப் பேசிக் கொண்டிருந்ததுகூட எனக்கு ஒரு மாதிரியாகப் படவில்லை; சித்ரா என்னைக் கேலி பண்ணுவதுதான் அவமானமாயிருந்தது.

"நீ வருவாய் என்பது எனக்குத் தெரியுமே" என்று சிரித்துக்கொண்டே சொன்னேன்.

"அது இருக்கட்டும்; இது எத்தனை நாளாக?" என்ருள்.

"என்ன?"

"பைத்தியந்தான்."

"சரி, எனக்குத்தான் பைத்திய மாச்சே? ஒரு பித்துக்கொளியுடன் பேச்சென்ன வேண்டியிருக்கு? எழுந்து போய் விடுகிறதுதானே?" என்று கொஞ்சம் கோபத்துடன் சொல்லிவிட்டு வேறு பக்கம் திரும்பிக் கொண்டேன்.

"சரி, சரி, அந்தப் பக்கத்தில்தான்; அதோ போகிருளே அந்தப் பெண்ணைத் தெரியுமா?" என்று கேட்டாள்.

கொஞ்ச தூரத்தில் நிஜமாகவே ஒரு பெண் போய்க் கொண்டிருந்தாள். சித்ரா விளையாட்டுக்காகச் சொல்லவில்லை. தவிர, அந்தப் பெண்ணை நான் பல தடவைகள் மாலை வேளையில் கரைப் பக்கம் பார்த்திருக்கிறேன். சித்ராவைக் கேட்டு அவள் யார் என்பதைத் தெரிந்து கொள்ள நினைத்தேன். என் கோபம் கணத்தில் மறைந்தது.

"இதோ" என்று பக்கத்தில் இருந்த அந்தச் சிலையைக்காட்டி, "இதைச் சிருஷ்டித்த மகானின் மகள் தான்" என்ருள்.

"என்ன, என்ன? இந்தச் சிலையைச் செய்தவன் மகளா?" என்று ஆச்சரியத்துடன் கேட்டேன்.

"ஆமாம். இந்த அற்புதச் சிலையைச் செய்தவனுடைய மகள்தான். அவள், தன் தந்தை விட்டுப்போன இந்த ஞாபகச் சின்னத்தைக் காணத் தினம் ஒரு முறையாவது இந்தப் பக்கம் வருவாள். ஆனல் யாராவது இங்கே உட்கார்ந்து கொண்டிருந்தால் பேசாமல் திரும்பிப் போய்

விடுவாள். கல்யாணமாகாத வயது வந்த பெண் இப்படி உங்களைப் போன்றவர் எதிரில் வரலாமோ?" என்றாள்.

நாம் இங்கே உட்கார்ந்து கொண்டிருப்பதால் இப் பொழுதுகூட அவளுக்குச் சிரமம் ஏற்பட்டிருக்கலாம். அட, பாவமே!" என்றேன்.

"இதில் ஒன்றும் பாவம் இல்லை. இப்போது அவளும் தாயும் படுகிற கஷ்டத்தைப் பார்த்தால்தான் பரிதாபமாய் இருக்கிறது. என்ன பண்ணுகிறது? அன்று எழுதியவன் அழிச்சா எழுதப் போகிறான்?" என்று சொல்லிவிட்டு சித்ரா முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டாள்.

"ஏன், யாராவது சொந்தக்காரர் இல்லையா?" என்று மெதுவாகக் கேட்டேன்.

"சொந்தக்காரர் இருந்து நாசமாப் போச்சு! இப்போது நம் சங்கதியையே எடுத்துக் கொள்வோமே. என்னவோ, ஆண்டவன் புண்ணியத்தில் எங்களுக்குச் சொத்து இருக்கத்தானே என்னைக் கலியாணம் பண்ணிக் கொள்ள நீங்கள் சம்மதித்தீர்கள்? இல்லாவிட்டால் என் மீதுள்ள காதல் உங்கள் உள்ளத்திலே பொங்கிப் பிரவகித்ததனால்தான் மணம் செய்து கொள்ள ஒப்புக் கொண்டீர்களோ?" என்றாள். சித்ராவின் குறும்புத் தனமெல்லாம் எனக்குத் தெரியுமாகையால் விவாதத்திற்குஇடம் கொடுக்காமல், "ஏதாவது கொஞ்ச நஞ்சம் கொடுத்து உதவக்கூட யாரும் இல்லையோ?" என்றேன்.

"இல்லாமல் என்ன? அதுதான் சொன்னேனே. பழைய புராணத்தையே திருப்பித் திருப்பி ஒப்பிப்பதில் லாபம் என்ன? அவளுடைய தகப்பனைப்பற்றிக் கேட்டால் நீங்கள் கண்ணீர் வடிப்பீர்கள்" என்றாள்.

மகளைப்பற்றிக் கேட்டதே வருத்தமாக இருக்கிறது. இனி, கண்ணீர் வடிக்க வேண்டி யிருக்கும் என்று நினைத்து ஒன்றும் பேசத் தோன்றவில்லை.

"சுருக்கமாகச் சொல்லி முடிக்கிறேன்." என்று சித்ரா தொடங்கினாள்.

* * *

"அவளுடைய தகப்பன் கை பட்டால் எதுவும் கண்ணாடிதான்; ரொம்ப ரொம்ப அபூர்வ வேலைப் பாடுடன் சிலைகள் செய்வதிலே பேரும் புகழும் பெற்ற வன். இதோ இங்கிருக்கும் சிலையைச் செய்து முடித்துத் தந்தபின் ஏராளமான சம்மானம் பெற்றிருப்பான். ஆனால் அதற்குள்ளே வந்தது ஒரு தடங்கல்.

"இந்தச் சிலை வேலை ஏறக்குறையப் பூர்த்தியானதும், இதைச் செய்யச் சொல்லியிருந்த பிரபுவை அழைத்து வந்து காட்டிக் கொண்டிருந்தான். அதற்கு நாலு நாளைக்கு முந்தி இந்த ஊருக்கு வந்த ஒரு இளைஞனைப் பற்றி இரண்டு வார்த்தை சொல்லியாக வேண்டும். அவன் எங்கிருந்தோ வந்தான். அந்தத் 'தறிதலை' இங்கு வந்தவுடன் அரைக் கணம் கூடச்சும்மா இருக்க வில்லை. சிற்பத்தைப் பற்றித் தனக்கு அபாரமாகத் தெரியும் என்று எல்லோரிடமும் சென்று தமுக்குப் போட்டுக் கொண்டிருந்தான். அஜந்தா, எல்லோரா முதலிய இடங்களுக்கு நேரில் சென்றுதான் எல்லாச் சிற்ப வேலைகளையும் கண்டு வந்ததாகச் சொன்னான். ஆனால், அவன் மஹாபலிபுரம் போயிருப்பானா என்பது கூட எனக்குச் சந்தேகமாயிருந்தது. இந்த விஷயம் ஒரு புறம் இருக்கட்டும். கடைசியில் அவன் 'தலைக்குக் கல்' கொண்டு வந்ததை நினைத்தால்தான் ஒரு வேளை அவன் சொல்லியதெல்லாம் உண்மையாக இருக்குமோ என நினைக்க வேண்டியிருக்கிறது."

"எப்படி ?" என்றேன்.

"இந்தச் சிலையைப் பார்த்ததும், 'யாரையா இதைச் செய்தது? உள்ளே தேரை இருக்கிறதே! இது தெரிய வில்லையா?' என்றான் அவன்."

"அங்கே கூடியிருந்தவர்களுக்கு, அந்தப் பெண்ணின் தகப்பன் முதற்கொண்டு எல்லோருக்கும், அது விவரிக்க முடியாத ஆச்சரியமாயிருந்தது. கல்லினுள் தேரை இருக்குமென்று கேட்டிருந்தாலும் இந்தச் சிலைக்குள் தேரை புகுந்து கொண்டிருக்கிறது என்பதை யாரும் நம்ப முடியவில்லை. 'எங்கே காட்டு பார்ப்போம். அப்படி இல்லாதுபோனால் உன் மண்டையை உடைத்துப் பார்த்து விடுவோம்' என்று பலரும் ஆர்ப்பரித்தார்கள்.

"சிலையைச் செய்யச் சொல்லியிருந்த ரசிகருக்கு அபாரமான கோபம் வந்து விட்டது; எல்லோரையும் சாந்தமாக இருக்கும்படி சிற்பி கேட்டுக் கொண்டான். அப்புறம் அந்த இளைஞனை, 'தம்பி, இப்படிவா' என்று கூப்பிட்டான்.

"எல்லோரும் இனி என்ன நடக்குமோ என்று உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தார்கள். இளைஞன், கம்பீரமாக முன் வந்து நின்றான்.

'ஏனப்பா, இந்தச் சிலையில் தேரை இருக்கிறதெனச் சொல்லுகிறாயா? என்ன ஆதாரத்துடன் சொல்கிறாய்? உனக்கு எப்படித் தெரிந்தது?

'இது என்ன கேள்வி? ஒரு நல்ல சிற்ப சாஸ்திர ஞானமுடைய சிற்பியின் கண்களுக்குக் கல்லினுள் தேரை இருப்பது தெரியாமலா போய் விடும்? அப்பொழுது அவன் கலைஞனல்ல' என்று வாலிபன் துடுக்காகப் பதில் சொன்னான்.

'அப்போதும் சிற்பிக்குக் கோபம் வரவில்லை. 'இதைச் செய்து முடிப்பதில் எவவளவோ சிரமப்பட்டிருக்கிறேன். உன் பேச்சைக் கேட்டு வீணாக இது வியர்த்தமாகி விடுமோ என்று தான் பார்க்கிறேன். சிறு பிள்ளைத் தனமாக நீ சொல்வதை எப்படி நம்புவது?' என்று கேட்டான்.

'நம்பினால் நம்புங்கள். நம்பாவிட்டால் போங்கள். நான் பலவந்தம் செய்யவில்லை. காலம் அதைப் பகிரங்கமாக்கி விடும்' என்றான்.

'அப்படியானால் அதை இப்போதே சோதித்துவிட வேண்டும். நீ சொன்னது மட்டும் பொய்யாயிருந்தாலோ?" என்று படபடப்பாகச் சிற்பி கேட்டான். 'இக் கண்களைப் பிடுங்கிக் கொள்கிறேன்' என்று ரோஷத்துடன் இளைஞன் கூறி விட்டு, 'நான் சொன்னபடியே தேரை உள்ளே இருந்தாலோ?' என்று கேள்வி போட்டான்.

'நான் இதைச் செய்த இந்தக் கைகளை வெட்டிக் கொள்கிறேன்' என்று சிற்பியும் சபதம் செய்தான்."

"கடைசியில் என்ன ஆச்சு?" என்று அவசரமாகக் கேட்டேன்.

"கடைசியாகச் சிலையின் இடது பக்கம் செதுக்கிப் பார்த்தபோது அவன் சொல்லியபடியே சிலையிலிருந்து தேரை வெளியில் குதித்தது. நம் சிற்பிக்கு ஏற்பட்ட அவமானம் சொல்லி முடியாது. அவன் தனது சபதத்தின்படியே கையை வெட்டிக் கொண்டான். அந்தச் சிலையுடன் தன்னையும் உருக்குலைத்துக் கொண்டான். அதோ அக்கரையில் தெரிகிறதே சூடுகாடு அதில் வெந்து சாம்பலும் ஆனான்."

"அட, பாவமே!" என்றேன்.

"பாவம் என்றும், புண்ணியமென்றும் சொல்லிக் கொண்டிருப்பதில் என்ன பிரயோஜனம்? நம் ஊரிலே முற்போக்குக் காரியங்களில் முனைந்திருக்கிறதாகச் சொல்கிறார்களே வாலிபர்கள், இவர்களில் ஒருத்தனாவது இவளைக் கல்யாணம் செய்து கொள்ள முற்படுகிறானா? சொல்லுங்கள், பார்க்கலாம்" என்றாள் சித்ரா.

நான் கிலேசத்துடன் தூரத்திலே விறகுச் சுமையை ஊணுங் கொடியால் இழுத்துக் கட்டிக் கொண்டிருந்த

அந்தப் பெண்ணைப் பார்த்தேன். என் மனத்தில் எத்தனையோ எண்ணங்கள் உருண்டு சென்றன.

"பார்ப்பதற்கு அவள் லக்ஷ்மி போல் இல்லையா? அவளைப் போன்ற அழகி நம் ஊருக்குள்ளேயே ஏது?" என்று சித்ரா வேகமாகப் பேசினாள்.

அந்த வேகத்தில் தன் அழகைப் பற்றிக்கூட மறந்து விட்டாள் போலிருக்கிறது! வேறு யாரிடமாவது பேசிக் கொண்டிருந்தால், "அவளை மணம் செய்து கொள்ள நான் தயார்" என்று தைரியமாகச் சொல்லியிருப்பேன். ஆனால் சித்ராவிடம் எப்படிச் சொல்வது?

சித்ரா மேலும் அதே வேகத்தில், "இப்பொழுதுகூட நீங்கள் இஷ்டப்பட்டால் அந்தப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்வதில் எனக்கு ஆக்ஷேபனை இல்லை" என்று சொல்லி நிறுத்தினாள்.

ஒரு வேளை என் கருத்தைத்தான் தெரிந்து கொண்டாளோ? நான் அவள் முகத்தையே பார்த்தேன்.

"ஆனால், அவள் புருஷன் என்ன சொல்வானோ?" என்று சொல்லிச் சித்ரா சிரித்து விட்டாள்.

நானும் சிரித்துக்கொண்டு, "என்னை ஏமாற்ற முடியுமா? இருந்தாலும் கதை நன்றாயிருந்தது" என்றேன்.

"ஓஹோ, கதையா? அப்படியானால் உங்கள் முகக் குறி ஏன் அப்படி மாறவேண்டும்? நெஞ்சு ஏன் அப்படி அடித்துக் கொள்ள வேண்டும்?" என்றாள்.

நேருக்கு நேராக, அதுவும் ஒரு பெண்ணிடம் நான் அசட்டுப்பட்டம் வாங்கிக்கொள்வேனா என்ன?

"இந்த மாலை நேரத்திலே, தனியாக ஒரு பெண் ஆற்றங் கரையிலே இப்படிப் பேசிக் கொண்டிருக்கலாமோ?" என்று பேச்சை மாற்றினேன்.

"அப்படியானால் புறப்படுங்கள்; வீட்டுக்குப் போவோம்" என்று என் கையைப் பற்றினாள்.

# அவன் தனி

அவனை ஒருவரும் அடையாளம் கண்டு கொள்ள முடிய வில்லை. எல்லோரும் அவனைப் பார்த்தார்கள். ஆனால் ஒருவராவது அவனை அணுகிப் பேசவில்லை. எல்லோரும் புதுமை கலந்த பார்வையாகப் பார்த்தார்கள். ஆனால் சிறு குழந்தைகள் கூட அவன் அருகில் செல்ல விரும்ப வில்லை. பார்ப்பதற்கு அவன் இப்போது ரொம்ப விகாரமாய்த் தான் இருந்தான். முகம் சுருங்கி, கண் குழி விழுந்து, அழுக்கடைந்த துணியைக் கட்டிக்கொண்டிருந்த அந்தப் பிச்சைக்காரனிடம் யாருக்குப் பேசப் பிடிக்கும்?

அவன் தன்னைக் கண்டும், காணாததுபோல் செல்லும் மனிதர்களையும், மருண்டு நகர்ந்து செல்லும் சிறு குழந்தைகளையும் பார்த்துத் தன்னுள்ளேயே என்னவோ முணு முணுத்துக்கொண்டான்.

'பிச்சைக்காரன்' என்றால் உலகம் ஒரு தினுசாகத் தான் நோக்குகிறது. ஆனால் அவனுடைய மறைக்கப் பட்ட வாழ்க்கையின் கனவுகள் என்னவோ? அவனுடைய ஆசை எண்ணங்கள் இடிந்து சாம்பலான வரலாறு யாதோ? அவனுடைய ஆசாபங்கத்தின் காரணம் என்ன என்று யாராவது கேட்கிறார்களா? அதுதான் போகட்டும். இந்த 'மறதி' ஜனங்களுக்கு என் இப்படி ஏற்படுகிறது? இப்படிச் சீக்கிரத்தில் மறந்து விடுவதென்பது மனித ஜாதியைப் பீடித்த ஒரு பெரிய நோய் போலும்!

அவன் அங்கேயே பிறந்தவன், அங்கேயே வளர்ந்தவன். ஆனால் அங்கே வாழ முடியாமல் தன் திக்கற்ற பெண் குழந்தையைத் தனியாக விட்டுப் பிரிந்து போய்

விட்டான். இன்று, நெடுநாள் பிரிவுக்கப்பால் தன் பெண்ணைப் பார்த்து விட்டாவது போகலாம் என்று வந்தான். அவன் வாழ்க்கைப் பாதையில் அவன் பட்ட கஷ்டங்கள் சொல்லத் தரமன்று. அந்த நாடோடியின் வாழ்க்கையே பெருவழி கொண்ட நீண்ட பாதையாகமாறி விட்டது. இன்று இங்கிருப்பான். நாளை அடுத்த ஊரில். அதற்கடுத்த நாள் எங்கோ! வழிதவறி இந்தப் பக்கம் வர நேரிட்டு விட்டது. "சரி, அவளையும் தான் பார்த்து விட்டுப் போகலாமே!" என்று தங்கிவிட்டான். ஆனல் நேராக வீட்டிற்குப் போவதெப்படி? இந்தக் கோலத்தில் மகள் வீட்டிற்குப் போய், "நான்தான் உன் அப்பன், வெகு நாட்களுக்கு முன் உன் தாய் இறந்தபோது சிறு குழந்தையாக இருந்த உன்னை இந்த வீட்டில் விட்டுச் சென்றவன் நான்தான்" என்று சொல்லித் தன் உறவைப் புதுப்பித்துக் கொள்ள விரும்பவில்லை அவன். இந்த ஒரு காரணத்திற்காக மட்டும் அவன் போகாமல் நிற்கவில்லை. தன்னல், அவளுக்கு எந்த விதமான தொந்தரவும் ஏற்படக் கூடாதென்று விரும்பினன். ஒரு வேளை அவள் புருஷன்—அவன் நல்லவனே, கெட்டவனே?—தன்னைச் சரியாக வரவேற்காவிட்டால், ஒருவேளை தன் பெண்ணின் மனம் இடிந்தால்......, இந்த மாதிரி பலவிதமாக யோசித்து அங்கு செல்லவில்லை அவன். ஆனல் இப்போது யாரைக் கேட்பது? எப்படி விசாரிப்பது என்று கலங்கிப்போய்த் திகைத்து, அவன் அங்கு உட்கார்ந்திருக்கையில் ஒரு பெரியவர் அந்த வழியாக வந்தவர், பிள்ளையார் கோவிலைக் கண்டதும், மேல் வேஷ்டியை இடுப்பில் மடித்துக் கட்டிக்கொண்டு, கையிலிருந்த தடியை பக்கத்திலிருந்த வில்வ மரத்தில் சாத்தி விட்டு, இரண்டு கைகளையும் குவித்து உயரத் தூக்கிக் கும்பிட்டார். பின்பு, எதிரில் எதையோ நினைத்து வருத்தப்படு பவனைப் போல் இருந்த அவனிடம் "யாரப்பா நீ" என்று கேட்டார்.

"நானு? நான்......நான் யாருமில்லை" என்முன் தடுமாறலாக.

அவனுடைய வார்த்தைகள் உதிக்கும் இடத்திலேயே மரணமடைந்தன. அவன் குரலில் வேதனை மிகுந்திருந்தது. 'பைத்தியம்போல் இருக்கிறது' என்று எண்ணிய கிழவர், "உனக்கு எந்த ஊர்? ஏன் உட்கார்ந்து கொண்டிருக்கிருய்?" என்று மறுபடியும் கேட்டார். அவனுக்கு யாரிடமும் பேசப் பிரியமில்லை. ஒன்றும் சொல்லாமல் எழுந்தான். தன் வழியே நடக்கலானுன். "என்ன பதில் சொல்வது? ஏன் சொல்ல வேண்டும்? சொல்லி என்ன பிரயோஜனம்? அவளை இனிக்காணமுடியாது. இன்னும் கலியாணம் ஆகாமலா இருக்கும்? அவள் இப்போது இங்கிருக்கிருளோ, இல்லை யோ?" என்று நினைத்துக்கொண்டு நடக்க ஆரம்பித்தான். ஆனுல் அதற்குள் ஒரு சிறு ஆசை வந்து கண்ணை மறைத்தது. அவன் மனத்தில் ஒரு குரல், "கேளேன். கேட்டுப்பார். ஒருகால் இங்கு இருந்தாலும் இருப்பாள். இவ்வளவு தூரம் வந்துவிட்டு அவளைப் பார்க்காமலா போவது?" என்று சொல்லிற்று. போனவன் தூர நின்று ஒரு தரம் திரும்பிப் பார்த்தான். கிழவன் அசையாது அங்கேயே நிற்பது கண்டு, விசாரித்தே தீர்வது என்று போய்க் கேட்டான். "கந்தன்... இல்லை அவன் மகள்...இல்லை, இல்லை; அதோ, அந்தத் தென்னை மரத்திற்கு எதிரில் இருக்கிறதே, அந்த வீட்டில் இப்போது யாரிருக்கிருர்கள்?"

"அங்கே இப்போது யாருமில்லையே. வெகு நாட்களுக்கு முன் ஒரு கிழவி இருந்தாள். ஒரு பெண்ணும் கூட."

"ஆமாம், ஆமாம். அந்தப் பெண் எங்கே? எங்கே போனுள் தெரியுமா?"

"கிழவி, செத்துப் போய் ரொம்ப நாளாகிறது. பெண்ணுக்குக் கலியாணமாகிவிட்டது. கலியாண

மானதற் கப்புறம் இங்கு அவள் ஒரு தடவைகூட வந்த தில்லை. சரி, நீ யார்?''

''சொல்லுகிறேன். ஆனல் இப்போது அவள் எங்கிருக்கிருளென்று தெரியாதா?''

'' அவள் இருப்பதா?......அவள் இப்போது......இரு, இரு, ஞாபகம் வருகிறது. கீரனூரில் இருக்கிருள். அவள் புருஷன் ரொம்ப நல்லவன். ஏழையாயிருந்தாலும் பரவா யில்லை யென்று இவளை......''

கிழவன் என்னவோ பேசிக்கொண் டிருந்தான். ஆனல் அவன், ''சரி, தெரிந்தது போதும்,'' என்று புறப் பட்டு விட்டான்.

அவன் கிராமத்தைத் தாண்டி, சாலையோடு இறங்கி நடக்கலானன். அவன் கண்களும், காலும் சோர்வு கொண்டு, மனம் உறக்கம் கொள்ளும் நிலையில், பக்கத் திலிருந்த மரத்து நிழலில் சிறிது தங்கி இளைப்பாற உட்கார்ந்தான்.

அன்று முழுதும் அவன் உணவு கொள்ளவில்லை. முந்தின தினமும் இல்லை. மிகவும் சோர்ந்து போய்க் காணப்பட்டான். அந்நிலையிலும் தன் மகளைப்பற்றிச் சிந்திக்கையில் சிறிது ஆனந்தம் கொண்டான்.

மாலை ஆகிவிட்டது. மரத்து நிழல்களும் நீண்டு விழ ஆரம்பிக்கலாயின. மங்கிய இருளும் படர்ந்தது. அவன் உறங்காது இருட்டிலும் நடந்தான். வேகமாக வும், மெதுவாகவும் நடந்தான். 'சலசல'ப்பற்ற அந்த மொட்டை மரங்கள் அவனைத் தாவி அணைப்பதைப் போல நீட்டி நின்றன. தலைக்குமேல் கவிழ்ந்திருந்த நட்சத்திரம் பதித்த ஆகாயத்தை அடிக்கடி அண்ணாந்து பார்த்துப் பெருமூச்சு விட்டுக் கொண்டே போனன்.

விடியற்காலை கிராமத்திற்கு வந்து சேர்ந்தான். ஆனல் எங்கே, எப்படிப் போய் அவளைக் காணுவது என்றுதான் அவனுக்குத் தெரியவில்லை. அவன் கிராமத்

தில் முதலில் நுழைந்ததும் பாழ்பட்ட ஒரு இடிந்துபோன வீட்டைத் தான் கண்டான். "நீயே எனக்கு எல்லாம் விளக்குகிருயா?" என்று நினைத்து உள்ளே நுழைந்தான். எதிரில் ஒரு கிழவி வந்தாள். அவளது தோற்றமும் நடையும் சேர்ந்து, இவள்தான் ஏற்ற மனுஷி என்று அவளிடம் கேட்டான். அவளிடம் தன் பெண்ணின் அடையாளத்தைச் சொல்லிக் கேட்டான். அவள் புருஷனின் பெயரை—எல்லாச் சங்கதிகளையும் சொல்லிக் கேட்டான். அவள் மூன்று மாதத்திற்கு முன் எரிந்து போய்ச் சாம்பலாய்க் கிடந்த அந்தப் பாழடைந்த வீட்டின் குட்டிச்சுவர்களைக் காட்டினுள். கை நீட்டிச் சுட்டிக் காட்டினுள்.

"அதோ, அதா?" என்று தன்னையே, தன் மனத்தையே திட்டிக் கொண்டு ஒன்றும் சொல்லாமல் திரும்பினுன். திரும்பிப் பின் ஊரை நோக்கி 'தூ' என்று காரித் துப்பினுன். உண்மையைக் கண்டும் பின் நம்ப மறுத்தான். நிச்சயத்தைக் கண்டு கூட உதறித் தள்ள விரும்பியது அவன் மனம். "பாட்டி சொல்வது நிஜமா? ஏன்?...... பாட்டி? பாட்டி பொய்யா சொல்வாள்? பாட்டி சொன்னுலும் அந்தத் தடிக்கம்பு......" என்று இன்னும் என்ன வெல்லாமோ எண்ணிக் கொண்டு நடக்கலானுன்.

"இதைத் தெரிந்து கொள்ளத்தானு இங்கு வந்தாய்? ஏன் நீ இத்தனை நாளும் சுற்றிக்கொண்டிருந்ததைப் போல இருந் திருக்கலாகாதா? நீ ஒருவன் தான், தனிப்பட்ட நீ ஒருவனே இருக்கிருய் என்பதைப் பலப்படுத்திக் கொள்ள விரும்பினுய் போலும்" என்று எங்கிருந்தோ யாரோ பேசுவதுபோ லிருந்தது. திடுக்கிட்டுத் திரும்பினுன். எதிர்த் திசையைப் பார்த்தான். காற்றில் அலைக்கப்பட்ட மரத்தின் இரைச்சலைக் கேட்டுச் சிறிது நடுங்கி, பின்பு தெளிவுபெற்று நடந்தான். அவனது மூளை கொஞ்சம் கொஞ்சமாகச் சுற்ற வாரம்பித்தது. இல்லாத

கோர எண்ணங்கள் உருவெடுத்தன. சீக்கிரத்தில் சித்தமும் சிதறிவிட்டது. பேசிக்கொண்டே நடந்தான்.

“நான் போறேன். போகிறேன். சதா போய்க் கொண்டிருக்கப் போகிறேன். அது எனக்கே தெரியாது. ஆனல் நான் போய்த்தான் ஆகவேண்டும். சாந்தி! சாந்தியா? இனி எனக்கு எங்கே கிடைக்கப்போகிறது? சை! எங்கும் இல்லை.....

இருள் நிறைந்த அந்தச் சாலையில் அவன் முனகிக் கொண்டே நடந்து போய்க்கொண்டிருந்தான்.

# மன்னிப்பு

தைமாதத்தில் ஒரு மத்தியான வேளை. கானல் எங்கும் கடூரமாகப் பரவியிருந்தது. காற்ளோட்டமே சிறிதும் இல்லை. உலகமே மகா மௌனத்தில் ஆழ்ந்து விட்டமாதிரி அவ்வளவு நிசப்தம். இலை அசை வற்ற ஓர் எலுமிச்ச மரத்தடியில் மாரப்பன் உட்கார்ந்து கொண் டிருந்தான். அவனுக்கு முன்னல், உதிர்ந்து போய்க் கிடந்த சில பழுப்பு இலைகளும் கோலும் குச்சியும் இருந்தன. பக்கத்தில் செம்மண் படிந்து கிடந்த கலப்பை. ஒரு சின்னத் துண்டைக் கட்டிக் கொண்டிருந்தான் அவன். காலையிலிருந்து நிற்காமல் பகல் வரையில் உழுத தால் கொஞ்சம் சலித்தவனைப் போல் காணப்பட்டான். தலையில் சுற்றியிருந்த வேஷ்டியை எடுத்து விரித்துப் படுத்தான். வானத்திலிருந்து வந்ததைப் போன்று குபீ ரென்று ஒரு காற்று எழுந்து மறைந்தது. அருகிலிருக்கும் தென்ன மரங்கள் பட்டையை ஆட்டின. கிணற்ளோரத்தில் சரிந்து கிடந்த இரண்டொருகற்கள் நீரில் விழுந்து சத்தம் செய்தன. சோளப் பயிர் 'சர் சர்' என்று அசைந்ததால் அதிலிருந்து கம்மென ஒரு வித வாசனை எழுந்தது. அந்த உச்சி வேளையின் உக்கிரம் மாரப்பனை மயக்கி அவனுக்குத் தூக்கத்தை உண்டாக்கியது. சற்றுக்களைப்பு நீங்கப்படுத் தவன் அப்படியே தூங்கி விட்டான்.

அந்தச் சப்தத்தைக் கேட்டி ராதிருந்தால் அந்தக் குளிர்ந்த தூக்கத்திலிருந்து அப்பொழுதும் எழுந்திருக்க மாட்டான். கறு முறு என்ற சப்தத்தைக் கேட்டுத் திடுக்கிட்டு விழித்துக் கொண்டான். துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு பின்னல் திரும்பினன்.

அவன் வேறு ஏதாவது காட்சியை அங்கே கண்டிருந்தால் அவ்வளவு பதறிப் போயிருக்க மாட்டான். தன் ஹிருதயமே இரண்டாக்கப் பட்டுப் போனதைப் போல் துள்ளினன். வார்த்தைக் கெட்டாத நோவு அவன் மனதைப் பிடித்தது. கொம்பிலே சுற்றப்பட்டிருந்த தலைக் கயிற்ருேடு பெரிய விழிகளை உருட்டிப் பார்த்த வண்ணம் வாலை அசைத்துக் கொண்டு ஒரு காளை சோளக் கொல்லைக்குள் நின்றுகொண்டிருந்தது. அதன் வாயில் இப்போதும் குத்துப் பயிர்கள் சுழன்று கொண்டிருந்தன. அதற்குப் பசி முழுதும் அடங்கி விட்டதென்பதை அதன் வயிற்றைப் பார்த்தாலே தெரிந்து கொள்ளலாம். கருகரு வென்று கரும்பு போல வளர்ந்திருந்த நாலு பாத்திச் சோளப் பயிர்களைச் சூறையாடி விட்டது. அதன் கால் பட்டுக் கால்பாகம் அழிந்து கிடந்தது. பாதிக்கு மேற்பட்ட தோகையை மென்று விட்டு வேரைத் துப்பியிருந்தது.

மாரப்பனுக்கு அதைக் காணக்காண நெருப்பை நெஞ்சிற்குள் வைத்துக் கட்டியதைப் போல் இருந்தது. அவன் இரவு பகலாக இதற்காகவா பாடுபட்டான்? நொடிப் பொழுதில் நசுக்கி நாசமாக்கி விட்டதே. இந்த வெயிலில் எத்தனையோ நாட்கள் நீர் இறைத்தது இதற்குத்தானு? அவனுக்குக் கோபமும் துக்கமும் பொங்கிக் கொண்டு வந்தன அந்தத் தகிக்கும் கானலோடு உள் எரிப்பும் சேர்ந்ததால் அவன் கண்கள் ரத்தத்தைச் சிந்திவிடுவனபோல் இருந்தன. மனங்கொண்டமட்டும் அதைப் புடைத்து விடுவதென்று அருகிலிருந்த கவையை எடுத்துக் கொண்டு எழுந்து பலமாக நடந்தான். அவனைக் கண்டு அந்த இளங்காளை கொஞ்சங் கூடப்பயப் படவே இல்லை. தன் காதுகளை ஆட்டியபடியே இளங் குழந்தையைப் போல் முன்னுக்கு வந்தது. அந்த மத்தியான வெயிலில், வெள்ளையும் சாம்பலும் கலந்து காணப்பட்ட அதன்

தோற்றம் மினுமினுப்பாகவும் பார்க்கப் பார்க்க அழகாகவு மிருந்தது. ஆனல் அவன் அந்த அழகைக் கண்டு ரசித்தானு? அது அவனல் முடியக்கூடிய காரியமா அப்போது? என்ன நினைத்தானே அந்தக் கண நேரத்தில் அவன் மனத்தில் என்ன நினைவுகள் தோன்றினவோ, கையிலிருந்த கவையைத் தூர எறிந்து விட்டுக் காளையின் தலைக் கயிற்றைப் பிடித்து இழுத்து வந்தான். அவன் தனக்குள்ளேயே, "இதை அடித்து என்ன செய்வது? பாவம்! வாயில்லாப் பிராணி. இதை விட்டானே, அந்தச் சோம்பேறிக் கழுதையின் எலும்பை முறித்து விடுகிறேன்!" என்று சொல்லிக் கொண்டு குடிசைக் கருகே வேலியில் காளையை இழுத்துக் கட்டிவிட்டு உள்ளே போய்க் கயிற்றுக் கட்டிலில் உட்கார்ந்தான். அவன் தேகத்திலிருந்த அந்தத் துடிப்பும் ஆங்காரமும் இன்னும் அடங்கவில்லை. கைகள் பதறிக் கொண்டிருந்தன. தனக்கு உயிரினும் இனிய வஸ்துவைக் கண்ணெதிரிலேயே போட்டுச் சித்திரவதை செய்தால் மனம் என்ன பாடு படும். அந்த நிலையில் இப்பொழுது இருந்தான். எப்பொழுதுதான் வரட்டுமே இந்தக் காளைக்குச் சொந்தக்காரன். "வராமலாபோய் விடுவான்? ஏண்டா உனக்குப் புத்தியிருக்கிறதா? நீயும் மனுசனு? என்றெல்லாம் கேட்கிறது. சை! கேள்வி யார் கேட்கிறது? அவனையா... ......?" என்று பல்லைக் கடித்துக் கொண்டான்.

அப்பொழுது சற்றுதூரத்தில் யாரோ வருவது தெரிந்தது. 'சரி வரட்டும்' என்று காத்திருந்தான். அந்த உருவம் நடுங்கும் தோற்றம் கொண்டதாயிருந்தது. நேராக வரப்பில் இடம் இருந்தும், பருத்திச் செடிகளை மிதித்துக் கொண்டு, நடுச் சாமத்தில் கன்னம் வைக்கப் போகும் கள்ளனைப்போல் பதுங்கிப் பதுங்கி அருகில் வந்தது. அந்தச் சிறுமிக்குப் பத்து வயது தான் இருக்கும். தூரத்திலே நெருப்பு இருந்தாலும் பற்றிக்கொள்ளக்

கூடிய தலைமயிர். கிழிந்துபோன ஒரு வெள்ளைத் துணியை முழங்காலளவு கட்டிக்கொண்டிருந்தாள். கன்னங்கறேல் என்றிருந்தது அவள் நிறம். அவள் கண்களிலே பயம்குடி கொண்டிருந்தது. மாரப்பனுக்கு அந்தச் சிறுமியைக் கண்டதும், அவள் யார்? அவள் தகப்பன் பெயர் என்ன? அவன் எந்தத் தோட்டத்தில் வேலை செய்கிறான்? என்பன வெல்லாம் தெரிந்துவிட்டன. அந்தப் பெண் பேசவில்லை. ஒரு கையைத் தோள்மீது வைத்துக் கொண்டும் மற்றொரு கையைத் தொங்கப்போட்டுக் கொண்டும் நின்றாள். மாரப்பன் அதட்டலாக "மாட்டைச் சோளக் கொல்லையிலே விட்டு எங்கே போய்ச் சுற்றிக் கொண்டிருந்தாய்?" என்று கேட்டான். குழந்தை நடுங்கினாள். அவள் கண்களில் நீர் திரண்டது. "வேல மரத்தடியில் படுத்துக்கொண்டிருந்தேன்" என்றாள் தயங்கிய வண்ணம்.

"காளையை இஷ்டப்படி விட்டு நீ சுகமாய்ப் படுத்துக் கொண்டிருந்தாயா?" என்று எரிச்சலுடன் கேட்டான் மாரப்பன்.

அவன் முகத்தை நேராகப் பார்க்க அச்சிறுமிக்குத் தைரியமில்லை. மெதுவாக, "தூங்கிப்போய் விட்டேன்" என்றாள்.

"தூக்கமா, மத்தியானத்திலா தூக்கம்?" என்றான். அதே சமயம் தான் படுத்துக் கொண்டிருந்தது நினைவுக்கு வந்தது. அவளைச் சுட்டு விடுபவன் போல் பார்த்தான். மாரப்பனுக்குப் பசி, அதோடு அந்த வயிற்றெரிச்சலும் சேர்ந்து கொண்டது. அவன் குடிசைக்குள் உட்கார்ந்து கொண்டிருக்கிறான்; அப்பொழுதும் அனல் அடிக்கிறது. அவள் வெளியில் வெயிலில் நிற்கிறாள்; அடிக்கடி ஒரு காலை எடுத்து மற்றொரு காலின்மேல் வைத்துக் கொள்கிறாள்; இடம் மாற்றிக் கீழே காலை வைக்கிறாள்; கட்டப்பட்டிருந்த காளையைத் திரும்பத் திரும்பப் பார்க்கிறாள்.

அவன், 'அவளும் என்னைப் போலத்தானே. இன்னும் சாப்பிடாமல் இருக்கிறாள்; அவள் முகத்தைப் பார்த்தாலே அது தெரிகிறது. எனக்காவது சாதம் வரும். ஆனால் அவளுக்கு......? அவள் வீட்டின் நிலைமை தான் தெரிந்தே இருக்கிறதே' என்று நினைத்தான்.

பின்பு அவள் கெஞ்சுதலாக, "நான் அடிமரத்தில் கட்டித்தான் வைத் திருந்தேன். ஆனால் அது நழுவிக் கொண்டது........" என்று சொன்னாள். அந்தக்குரலி லிருந்த உருக்கமும் பரிதாபமும் அவன் மனத்தை என்னவோ செய்து விட்டன. கட்டிலி லிருந்து எழுந்தான். குடிசையிலிருந்து தலையை வெளியில் நீட்டினான் சிறுமி பயத்தால் பின்னுக்கு நகர்ந்தாள்.

"இந்தா, இனிமேல் இப்படி எல்லாம் கவனமில்லாமல் இருக்காதே" என்று காளையை அவிழ்த்து அவள் கையில் கயிற்றோடு கொடுத்தான். சோகத்தால் புழுங்கிக் கொண்டிருந்த அந்தச் சின்னக் கண்களும் முகமும் மலர்ந்தன. தன் கரிய விழிகளை மலரவிரித்து அவனை ஒரு தரம் பார்த்து விட்டுக் காளையை ஓட்டிக் கொண்டு சென்றாள்.

# நாடக முடிவு

பல நாட்களுக்குப் பிறகு அன்றுதான் அவனைச் சந்தித்தேன். அவனைப் பார்த்து வெகுநாளாய் விட்டது. நானும் என் நண்பனும் கலாசாலையில் ஒன்றாய் வாசித்துக்கொண் டிருந்தோம். அதன்பிறகு ஒருவரை யொருவர் சந்திக்கவே யில்லை. எனக்குக் கலியாணம் நிச்சயமானவுடன் என் நண்பனை நேரிலேயே சந்தித்து அழைத்துவர அவன் வசிக்கும் கிராமத்திற்குப் போயிருந்தேன். இருவரும் சாயங்காலம் நதிக்கரைக்குப் பேசிக்கொண்டே வந்து உட்கார்ந்தோம். நாங்கள் பல பல விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம். பால்ய வயதில் கிராமத்தை விட்டுச் சென்ற நாங்கள், யௌவனத்தில் வந்து கலந்தோம். நகரத்தில் வாசித்துக்கொண்டிருந்தபோது பட்டண்மே சிறந்ததெனத் தோன்றியது. ஆனால் கிராமத்திற்கு வந்த பின்பு அந்த நினைவு வரவரக் குறைந்து நிழலைப்போல் மங்கிப் போயிற்று.

என் நண்பன் ராஜுவிடம் எனக்கு அளவற்ற அன்பு உண்டு. இல்லாவிட்டால் நானே நேரில் வந்து அவனைக் கூட்டிக்கொண்டு போவேனா? என் கலியாணத்தன்று அவன் பிரசன்னமா யிருப்பதில் எனக்கு அளவுகடந்த ஆனந்தம்.

முன்பொரு தடவை அவன் இருக்கும் கிராமத்திற்கு வந்த ஞாபகம். ஆனால் எப்பொழுது என்று திட்டமான நினைவு இல்லை. அப்பொழுது காணப்பட்டது போலவே தான் கிராமம் இன்றும் காண்கிறது. எவ்வித மாறுதலும் இல்லை. அந்த ஆற்றோரத்து ஊஞ்ச மரங்கள் இன்னும்

மலர்களை ஆற்று நீரில் அள்ளி வீசிக்கொண்டே யிருக்கின்றன. நதிக்கரை யோரத்து இடிந்த கோவில், ஊர்க்கோடியிலிருந்த இரண்டு பாழடைந்த கூரை வீடுகள், தோட்டம் துறவு எல்லாம் அப்படியே யிருந்தன. மனதிற்கு மிகவும் மகிழ்ச்சியைத் தந்தது அந்த மாலைவேளை. எங்களுக் கெதிரே மலர்கள் நிறைந்த சுகமயமானதோர் வாழ்க்கைச்சாலை திறந்து விடப்பட்டிருப்பதாக எண்ணினேன்.

"என்ன ராஜு, உனக்கு உற்சாகமாக இல்லையா? இதோ பார், எவ்வளவு அருமையாக ஜலம் தெளிவுடன் ஓடிக்கொண் டிருக்கிறது. தூரத்தில் செல்லும் பசுக்களின் கழுத்தில் கட்டியிருக்கும் மணியின் சப்தம் உனக்குக் கேட்கவில்லையா? எப்படிப்பட்ட இன்பகரமான காலம் இது" என்றேன்.

ராஜுவின் உள்ளத்தில் பொங்கிக்கொண்டிருந்த மகிழ்ச்சி பாட்டாக மலர்ந்தது. நான் சொன்னதைக்கூட அவன் கவனிக்கவில்லை. மெதுவாகப் பாட ஆரம்பித்தான். அவனது கண்டத்தினின்றும் எழுந்த குரல் கேட்பதற்கு மிகவும் இனிமையா யிருந்தது. பித்தளைக் குடங்களிலும், மண் பாண்டங்களிலும் நீரை நிரைத்துக்கொண்டு ஒய்யாரமாக நடந்து சென்றனர் பெண்கள். சலசலப்பு மிகுந்த நதிக்கரையில்தான் அவன் பாடினன். ஆனல் அவன் பாட்டு என்னை மறுபடியும் கலாசாலை நாட்களை நினைவிற்குக் கொண்டுவந்தது. என்னுடன் இடைவிடாமல் சதா விளையாடிக்கொண்டிருப்பான் சந்திரசேகரன். அவனுடைய குரலை என்னவென்று சொல்வேன்! அடடா! எப்பேர்ப்பட்ட இன்னிசையைத் தன்னுள் அடக்கி வைத்திருந்தான் அவன்! அற்புதமாகப் பாடுவான். அவனைப்பற்றி சிந்தனை செய்துகொண்டே ஓடுகிற ஜலத்திலே மிதந்து வருகிற சருகுகளையும், பச்சை இலைகளையும் பார்த்துக் கொண்டிருந்தேன் ::

"என்ன யோசித்துக்கொண் டிருக்கிறுய்?" என்று என் கரங்களைத் தட்டினுன் ராஜு.

"என்ன ராஜு, யோசிப்பதற்கா ஒன்றுமில்லாமல் போயிற்று? நம்முடன் படித்துக்கொண்டிருந்தானே சந்திரசேகரன்; அவனைப்பற்றித்தான் எண்ணிக்கொண் டிருந்தேன். உன்னுடைய சங்கீதம்தான் அவனை நினைக் கும்படி தூண்டிற்று" எனச் சிரித்துக்கொண்டே சொன் னுன்.

"நம்ம சந்திரசேகரனு! அடடா, அவன்கூட வரச் சொல்லி யிருந்தான்; நாளைக் காலையில் போகலாமென்று இருந்தேன். நீயும் வந்து சேர்ந்தாய் நல்ல வேளையாக; இங்கே பக்கத்து ஊரில் நாடகம் நடக்கிறது. அதில்தானே அவன் இருக்கிறுன். காலையில் அவசியம் போகலாம்" என்றுன்.

"சந்திரசேகரனு நாடகத்தில் சேர்ந்துவிட்டான்! நான் ஒரு காலத்தில் இதை எதிர்ப்பார்த் தெண்ணியிருந் தேன். பின்னுல் தொடரப்போகும் அவன் வாழ்க்கைக்கு அறிகுறியாக முன்னுலேயே அதன் சாயல் தென்பட்டது. அவன் எப்பொழுதும் பாடிக்கொண்டே யிருந்ததினுல் தான் இத்துறையில் கொண்டுவந்து விட்டது. அதிருக்கட் டும். கலாசாலை வாலிபனெருவன் நாடகத்தில் நடித்துக் காலங் கழிப்பதென்பது அவனுக்கு உற்சாகத்தைக் கொடுக்குமென்று நான் நம்பவில்லை."

"உன் அபிப்பிராயம் என்ன?" என்றேன்.

"கிருஷ்ணு! இன்னும் உனக்கு இந்த விஷயங்க ளெல்லாம் விளங்காம லிருப்பது ஆச்சரியமாயிருக்கின் றது. அவன் மிகவும் குதூகலத்துடனேயே காணப்படு கின்றுன். அவனிடம் நானும் இக்கேள்வியைக் கேட் டேன். அவன் சொன்னுன். "நகரத்தில் இருந்து, இருந்து, சாலைகளிலிருந்து கிளம்பிய புகைப்படலத்தை யும், பஞ்சாலைகளினின்றும் எழுந்த பேரரவத்தையும்,

கடுமையாக முகங்களை வைத்துக்கொண்டு செல்லும் மனிதர்களையும் பார்த்துக்கொண் டிருப்பதைவிட, இது எவ்வளவோ மேலல்லவா? இங்கே யாராவது உணர்ச்சி குன்றிக் காணப்படுகின்றார்களா? இவர்கள் காட்டும் உற்சாகம் முழுவதும் நடிப்பு மாத்திரமேயானாலும், அந்த உண்மையை அவர்கள் மறைக்க முயலவில்லையல்லவா? உங்கள் நடிப்புக்கும், எங்கள் நாடகக் கூட்டத்தின் நடிப்புக்கும் இதுதான் வித்தியாசம்'' என்றான்.

எனக்கு சந்திரசேகரனைப் பார்க்கவேண்டுமென்ற ஆவல் துடித்தது. பொழுது விடிந்ததும், புறப்படுவதென்று முடிவு செய்துகொண்டு, வீட்டிற்குப்போக எழுந்தோம். ஆற்றங்கரைக்கு சந்தியா காலத்தில் ஜபம் செய்ய இரண்டு மூன்று பிராமணர்கள் வந்தனர். மேற்கு வானில் வேதகால நட்சத்திரம் உதயமாயிற்று.

அடுத்தநாள் அதிகாலையில் இருவரும் புறப்பட்டோம். மூன்று நான்கு மைல்களுக்குக் குறையாமலிருந்தும், வண்டிவாகன மொன்றுமில்லாமல் நடந்தேதான் போனோம். வழியில் சாலையில் வேப்பம்பூவின் மணம் நிறைந்திருந்தது. நாங்கள் பல அற்புதமான காக்ஷிகளைப் பார்த்துக்கொண்டே சென்றோம். பக்கத்துப் பூந்தோட்டங்களினின்றும் கிளம்பி, எங்கும் நிறைந்திருந்த பரிமள சுகந்தம், பசுக்களை ஓட்டிச் செல்லும் இடையர்களின் பரவசப் பாட்டு, அவற்றின் கழுத்தில் கட்டியிருக்கும் மணியின் நாதம், இன்னும் காலை நேரத்தின் வசீகரம் பொருந்திய தென்றலின் தன்மை யாவும் எங்களுக்கு ஆனந்தத்தைத் தந்தன.

நாங்கள் சந்திரசேகரன் வசிக்கு மிடத்தைக் கண்டு பிடித்து அவன் இருக்குமிடத்தை யடைந்தோம். சாதாரணமான ஒரு சிறிய அறையைத்தான் எடுத்துக்கொண் டிருந்தான். எங்களை மிகவும் அன்புடனும், மகிழ்ச்சியோடும் வரவேற்றான். அவன் ராஜுவின் வருகையை

ஆவலுடன் எதிர்நோக்கிக்கொண் டிருந்தான். நானும் வந்து சேரவே மிகவும் பூரிப்படைந்து போனுன். நாங்கள் நீண்ட நாளாக விட்டுப் பிரிந்திருந்த கோலத்தையும், இனியும் அம்மாதிரி கடிதப்போக்கு வரத்துக்கூட இல்லாமல், மூடத்தனமா யிருக்கக்கூடாதென்றும் பேசிப்பேசி முடிவு செய்துகொண்டோம். அடடா! அவன் முன்பு இருந்த நிலைமை என்ன? இன்று எப்படிக் காணப்படுகின்ருன்! அவன் முகத்தில் வீசிக்கொண்டிருந்த பிரகாசம் இன்று மறைந்துபோய்விட்டது.

நரை, திரை, மூப்பு எல்லாம் வந்தடைந்த வயோதிகன்போல் காணப்பட்டான்.

"என் சந்திரா இந்தக் கோலத்திலிருக்கின்ருய்?" நீ ரொம்ப மனச் சந்துஷ்டியுடன் இருப்பதாக வல்லவா ராஜா சொன்னுன்" என்றேன். அவ்ன் ஒருமாதிரியாகச் சிரித்துக்கொண்டான். அந்தச் சிரிப்பிலே ஏமாற்றமடைந்ததின் த்வனி ஒலித்தது.

"நான் என்னவோ உல்லாசமாக இருப்பதாகத்தான் எண்ணிக்கொண்டிருக்கிறேன். மனக்கவலை யொன்றும் எனக்கில்லை. இன்று நீங்கள் வந்ததனல் நான் எவ்வளவு ஆனந்தமடைகிறேன் தெரியுமா? அந்த இழந்துபோன என் செல்வம் முழுவதும், திரும்பக் கிடைக்கப் பெற்றதாகக் களிப்படைகிறேன். கவனமாகக் கேள் கிருஷ்ணு, இதெல்லாம் ராஜுவிற்கு தெரிந்திருக்கலாம். ஆனல் உனக்குத் தெரிய நியாயமில்லை. என் இளமையிலேயே என்னைச் சேர்ந்தவர்களைப் பறிகொடுத்துவிட்டு, மாமன் வீட்டில் வளர்ந்து வந்ததும், அவருடைய உதவியினுலேயே காலேஜில் படித்துக்கொண்டிருந்தே னென்பதும் உனக்குத் தெரியும். அதன் பிறகு மாமா, என்னை ஏமாற்றி சொத்தை அபகரித்துக்கொண்டார். ஆனல் வியாபாரத்தில் பெருத்த நஷ்டமேற்பட்டு அவர் தற்கொலை செய்துகொண்டார். இந்த நாட்களில்தான் நான் நாட

கத்தில் சேர்ந்தது. இப்பொழுது நீ கேட்கிறுயே அது போல 'இந்தக்கோலம்' எல்லாம் அதன்பிறகு ஏற்பட்டதே" என்றுன்.

சந்திரசேகரன் தன்னுடைய வாழ்க்கைக்கு அரிதாரம் பூசிக்கொண்டதாகத் தோன்றியது எனக்கு. அவனுடைய பிரயாணத்திலே நதிக்கரைக்கும், உத்தியாவனத்திற்கும், அந்தப்புரத்திற்கும் செல்லும் நேர்சாலேகளேவிட்டு, கேவலம் கானல் நீர்போன்ற ஒரு பாதையில் இறங்கி விட்டான். அவனுக்கேற்பட்டிருக்கும் மனக்குறை என்னவென்பதைக் கண்டுகொள்ள முயன்றேன். ஆனல் நான் அறிந்துகொள்ளும்போது அவன் இல்லே.

பலத்த அந்தகாரத்தின் நடுவே நின்றுகொண்டு ஒளி ரேகை கண்ணுக்கெட்டிய தூரத்தில் எங்கேயாவது தெரிகின்றதா வென்று அவன் பார்த்தான். ஆனல் எங்கும் ஒளியில்லே!

"நீ நாடகத்தில் தோன்றுவதைக் காண எங்களுக்குள்ள ஆவலே அடக்க முடியாதுபோ லிருக்கிறது. சந்திரா! எங்களுக்கு வாஸ்தவமாகவே அற்புதமான நாள் இது!" என்றுன் ராஜு.

சந்திரசேகரன் சொன்னன்: "கம்பெனி மானேஜரின் மகளுக்கு உடம்பு சரியாயில்லே. இரண்டுநாள் ஓய்வு எடுத்துக்கொண்டால்தான் முடியும். அவளால் பேசக்கூட முடியாத நிலேமைக்கு வந்துவிட்டாள். ஆகையால் இன்னும் இரண்டு நாட்களுக்குப் பிறகுதான் ஆரம்பிப்போம். பிரதானமான நடிகை யில்லாமல் நாடகம் நடத்துவதெப்படி? அவள்தான் முக்கிய வேஷம் தரிப்பவள். அதுவரையில் நீங்களும் என்னுடனேயே இருக்க வேண்டும். சலிப்படைந்த எனக்கும் சற்று களிப்புண்டாகும்" என்றுன்.

அவன் கேட்டுக் கொண்டபடியே அந்த இரண்டு நாட்களும் அவனுடன் இருந்தோம். அவன் முன்பு

இருந்தமாதிரி இல்லை இப்பொழுது. எங்களிடம் மிகவும் உள்ளக் களிப்போடுதான் பேசிக்கொண்டிருந்தான். என்னதான் அவன் சிரித்துப் பேசி மகிழ்ந்திருக்க முயன்றாலும் அவன் நெஞ்சில் வேதனை நிறைந்திருந்ததாகவே எனக்குத் தோன்றியது. இனியுள்ள நாட்கள் அவனைச் சூழ்ந்து இருண்டு வருகின்றதாக நினைத்தேன். ஏனோ இக்கெட்ட நினைப்பு!

இப்பொழுதெல்லாம், கண்ணுக்கினிய கவர்ச்சிக் காட்சியும், மலரின் மணமும் பறவைப் பாட்டும், காற்றின் ஓசையும் கலகல கீதமும், அவன் நெஞ்சைக் கவர்வதில்லை. எவ்வளவு வெறுப்படைந்து விட்டான் அவன்!

அலங்காரமாயிருந்த அவனுடைய வாழ்க்கை இன்று இப்படி அலங்கோலமாகி விட்டதே, ஏன்?

"முதலில் என்ன நாடகம் நடத்தப் போகின்றீர்கள்?" என்று கேட்டதற்கு சந்திரன் சொன்னதாவது, "காதலின் முடிவு!' கதை உங்களுக்குக்கூட தெரிந்திருக்குமே. கதாபுருஷன், தன்னுடைய வீரத்தினாலும், அன்பினாலும், குணவிசேஷத்தினாலும், கதா நாயகியின் காதலை அடைய முயலுகிறான். அவளோ அவனை திரஸ்கரித்து விடுகிறாள். அவனது பிரயத்தனங்கள் பலிக்காது போகவே, மனக்கிலேசமடைந்த அவன், தான் யாரைக் காதலித்தானோ, யாரை நம்பி உயிர் வாழ விரும்பினானோ அவள் கையால் கடைசி வெகுமதியாக விஷத்தைக் கொடுத்தாலும், அதுவே திருப்தியாகுமென எண்ணுகிறான். ஒரு கிண்ணத்தில் விஷம் கலந்த நீரை எடுத்துக் கொண்டு போகிறான். அவளிடம், 'இந்தத் தண்ணீரை உன் கையினால் எனக் கருந்தக் கொடு. இதுவே உன்னுடைய அன்பிற் கறிகுறியாயிருக்கட்டும்; உன் திவ்ய கரஸ்பரிஸம் பட்ட இந்த ஜலம் என் தாகத்தைத் தணித்து விடும்' என்று சொல்லுகிறான். அவளும் கொடுக்கிறாள்... நாடகம் முடிகிறது."

"கதை சின்னதாயிருக்கிறதே" யென்றேன் நான். "நடிக்கும்போது வேண்டிய அளவு நீடித்துக்கொள்ளலாம். மானேஜரின் மகள் சுகாமியைப் பார்க்க விரும்புகிறீர்களா? இஷ்டப்பட்டால் போகலாம். எழுந்திருங்கள்" என்றான் சந்திரன்.

நாடகத்திலேயே பார்த்துக்கொள்வதாகச் சொல்லிவிட்டோம்.

அன்று ஜனங்கள் கொட்டகை முழுதும் நிறைந்திருந்தனர். நாடகம் ஆரம்பமாகிக் கொஞ்ச நேரத்திற்குள்ளாக சபையோரின் முழு கவனத்தையும் நடிகர்கள் கவர்ந்துவிட்டனர். எல்லாரும் அவரவர் மேற்கொண்ட பாத்திரமாகவே மாறி மெய்மறந்து நடித்தனர். சந்திரசேகரன் குரல் முன்னிலும் விசேஷ இனிமைகொண்டு ஒலித்தது. மனமுருகி அவன் பாடியபோது, ஜனங்களின் உள்ளமும் அதிலே லயித்துப்போய்விடும். கடைசி கட்டம்.

சந்திரனுக்கெதிரே அவனால் காதலிக்கப்பட்ட கன்னிகை. அவள் கரத்தில் அவன் கொடுத்த கோப்பையிருந்தது. அவள் கொடுத்தாள். சந்திரன் அந்தநீரைப் பருகுமுன் நாங்கள் உட்கார்ந்திருந்த இடத்தைப் பார்த்தான். ஒரே நிமிஷம். அதற்குள் எல்லாம் முடிந்துவிட்டது. அவன் உட்கொண்ட தண்ணீர் நிஜமாகவே விஷநீரே! அதற்கு முன்னாலேயே அவன் அதில் விஷம் கலந்திருந்தானென்பது யாருக்குத் தெரியும்!

கதைக்காக, அவனை நாடகத்தில் திரஸ்கரித்த காதலி நிஜவாழ்க்கையிலும் அவனது காதலை ஏற்றுக்கொள்ள மறுக்கவே முடிவைத்தேடிக் கொண்டான் போலும்!

# ஏழைப் பையன்

கிருஷ்ணசாமி முதலியார் தம்முடைய சொந்த முயற்சியாலேயே பாடுபட்டு உழைத்து முன்னுக்கு வந்தவர். அவருக்கு எந்தவேலை செய்வதிலும் சலிப்பு என்பதே கிடையாது. அவரது தளராத உள்ளமும் திடமான நம்பிக்கையுமேதான் இன்று அவர் நல்ல நிலைமையிலிருப்பதற்குக் காரணமாயிருக்கிறது. அவர் தந்தை அவருக்கு ஏராளமான பொருள்கள் வைத்துவிட்டு இறக்கவில்லை. அவர் சொந்த முயற்சியாலேயே இன்று இருபதினாயிரம் ரூபாய்க்குச் சொந்தக்காரராய் இருக்கிறார்.

அவர் சொந்தமாக மளிகைக் கடைகூட ஒன்று நடத்திவருகிறார். கடை வரவு செலவு கணக்குகளைத் தாமே பரிசீலனை பண்ணிவிட்டு இரவு பத்து மணிக்குமேல் வீட்டிற்குப்போவது வழக்கம். வழக்கம்போல் அன்று அவர் கடையை மூடிவிட்டு வீட்டிற்குப் புறப்பட்டார். அன்று பௌர்ணமி. நிலவு வெள்ளத்திலே மிதந்த ஒவ்வொரு வஸ்துவும், புதிய ஜீவகளைபெற்று ஜ்வலித்தது. கடையிலிருந்து முதலியார் வீட்டிற்கு ஒரு பர்லாங் தூரமிருக்கும். அவர் கொஞ்சதூரம் நடந்துவந்தார். அங்கே தான் கார்ஸ்டாண்டு இருக்கிறது. அதைத் தாண்டி அப்பால் ஒரு சிறு பாலத்தைக் கடந்துவிட்டால்போதும். பாலத்தருகிலேதான் அவர் வீடு. அவர் கார்ஸ்டாண்டுக்கு வந்தபோது அங்கே யாரும் இல்லை யாரோ ஒரு பையன் தான் பனிகொட்டும் அந்நேரத்திலே, வெறும் தரையில் படுத்துக்கொண்டிருந்தான். அவன் ஒரு கந்தல் துணி போர்த்தியிருந்தான். இடுப்பில் கிழிந்துபோன ஒரு கோவணம் மட்டும் கட்டியிருந்தான். நல்ல நிலவு

வெளிச்சமடித்ததால் அவன் அங்கே படுத்திருந்தது முதலியாரின் கண்களுக்கு நன்ருகத் தெரிந்தது. "யாரோ பாவம், ஏழை. இந்தத் தாங்கமுடியாத குளிரில் நனேந்து கொண்டிருக்கிருன். இவனைப்போல் எத்தனேபேர், இப்படி வீடு வாசலின்றித் தெருவில் அவஸ்தைப் படுகிருர்களோ!" என்று நினேத்துக்கொண்டே மேலே நடந்தார்.

அங்கே படுத்திருந்த அந்த ஏழைப் பையன் வாஸ்தவத்தில் தூங்கவில்லே. சும்மா விழித்துக்கொண்டுதான் படுத்திருந்தான். பசி வயிற்றைக் கிள்ளும்போது தூக்கம் வரும்மா? அவன் ஒரு அநாதை. வீடுவாசல் இல்லே. தாய், தகப்பன் யாரென்று அவனுக்குத் தெரியாது. நினேவு தெரிந்ததிலிருந்து பிச்சையெடுத்தே வயிறு வளர்த்து வருகிருன். அன்று அவனுக்கு ஒரு காலணு காசுகூடக் கிடைக்கவில்லே. அன்று அவன் கேட்டவர்களிட மிருந்தெல்லாம், "இல்லே" என்ற ஒரே பதிலேத் தான் பெற்ருன். ராத்திரி, கார் ஷெட்டிற்குப் போனுலாவது ஏதாவது கிடைக்காதாவென்று வந்தான். ஆனல் அங்கு படுத்துக்கொள்ளும் காவற்காரன் இவனே அங்கே படுத்துக்கொள்ளக்கூட அநுமதிக்காமல் விரட்டிவிட்டான். நேரமாகிவிட்டதால் வேறு எங்கே போவதென்று நினேத்து அந்த வெறும் நிலத்திலேயே படுத்துக்கொண்டான். இப்போது முதலியார் நடந்துபோகவும், காலடிச் சப்தத்தைக் கேட்டுத் திரும்பிப்பார்த்தான். யாரோ போகிருர்களென்று தெரிந்தது. "அன்றைய தினத்தின் கடைசிப் பிச்சையை அவரிடம் கேட்கலாமே. ஒருவேளே மனமிரங்கி, காலணு, அரையணு அவர் கொடுக்க மாட்டாரா? கொடுத்தாரானல், அந்தச் சினிமாக் கொட்டகைக்குப் பக்கத்திலே யிருக்கும் வெற்றிலே பாக்குக் கடையில் வாழைப் பழமாவது வாங்கித் தின்னலாம்" என்று நினேத்து அவரிடம் ஓடிவந்தான்.

"ஐயா, காலணு இருந்தால் கொடுங்களேன்.

நேற்றுச் சாப்பிட்டது ஐயா! பசி பொறுக்க முடியவில்லே!" என்று இரங்கும் பாவனையில் அவரிடம் கேட்டான்.

முதலியார் ஈவு, இரக்கம், தயை, தாட்சண்யம் எல்லாம் உடையவர்தான். ஆனுல் அப்போது அவரிடம் சில்லறை இல்லே. எல்லாம் முழு ரூபாயாகவும், நோட்டுக்களாவும்தான் இருந்தன. ஆனுல் அதையெல்லாம் அவனிடம் சொல்லியாக வேண்டுமா?

"போடா, போ! உங்களுக்கு வேறே வேலே இல்லே."

"ஐயா சாமி, பசி காதை அடைக்குது. ஒரு காலணு!"

"ஏண்டா, இல்லேயென்ருல் போகமாட்டே? ராத்திரி பத்து மணிக்குமேல் பிச்சை வேண்டுமாம், பிச்சை" என்று அதட்டினுர்.

அவர் கோபமாகப் பேசவும், பையன் பயந்துபோய் மறுபேச்சுப் பேசாமல் அங்கேயே நின்றுகொண்டான். கொஞ்சதூரம் போனதும் அவர், "என்னகாரியம் செய்துவிட்டோம், எப்படிக் கடுமையாகப் பேசி விட்டோம்!" என்று நினேத்தார். அவர் மனமே அவரை அறுக்கலாயிற்று. "சை, ஒரு ரூபாயில் என்ன குடியா முழுகிவிடப் போகிறது? நம்மிடம் எத்தனேயோ ரூபாய்கள் வரும், போகும். பாவம்! அவனுக்கு ஒரு ரூபாய் கொடுத்துவிட்டால்தான் என்ன?" என்று நினேத்தார். உடனே சட்டென்று திரும்பி, பின்னுல் பார்த்தார். அந்தப் பிச்சைக்காரப் பையன் கொஞ்சதூரத்தில் போவது தெரிந்தது. அப்போது அவர் மனதில் மற்ருெரு எண்ணம் எழுந்தது. அந்த வீடுவாசலற்ற பையனேத் தம் வீட்டிற்கே கூட்டிக்கொண்டுபோய் சாப்பாடு போட்டு, தம் கடையிலேயே சேர்த்துக்கொண்டால் என்ன என்று எண்ணினுர். அவர் அவசரமாக நடந்து போகப்போக அந்தச் சிறுவனும் மறைந்துவிட்டான்.

அந்தவிடத்தில் சாலையிலிருந்து இரண்டு மூன்று சந்துகள் பிரிகின்றன. அந்தச் சிறியசந்து எதிலோ அவன் போய் விட்டான். இனி அவனை எங்கேதேடுவது?

கொஞ்சநேரம் அவர் அங்கேயே நின்றுகொண்டிருந் தார். பின்பு அங்கு நிற்பதில் பிரயோஜனமில்லை யென்று வீட்டிற்குத் திரும்பினார். வீடு சேரும்வரையும், அந்தத் திக் கில்லாச் சிறுவனைப்பற்றியே நினைத்துக்கொண்டுபோனார். அடுத்த நாள் அவனை எப்படியாவது தேடிக் கண்டு பிடித் துக் கடையில் சேர்த்துக்கொள்வது என்று உறுதி செய்து கொண்டார்.

அன்று இரவு அவர் தூங்கும்போது ஒரு கனவு கண்டார்:—"அவருடைய ஆஸ்தி முழுவதும் கொள்ளை போய்விட்டது. கடையிலும் தீப்பற்றிக்கொண்டது. அவருடைய நண்பர்கள் எல்லாம் பொருள் முழுதும் போய்விட்டதால் ஒருவர்கூட முகம் கொடுத்துப் பேசா மல், பார்த்தும் பார்க்காததுபோல் போகிறார்கள். அவரு டைய மனைவி மக்கள் சாப்பாட்டிற்கில்லாமல் திண்டாடு கிறார்கள். அந்தப் பரிதாப காட்சியைப் பார்த்துக்கொண் டிருக்கும்போதே அவர் முன்னால் கந்தல் துணியுடன் ஒரு சிறுவன் தோன்றிச் செல்லுகிறான்.

கனவு கலைகிறது. திடுக்கிட்டு விழித்துக் கொள்ளு கிறார்.

மனைவி பக்கத்தில் படுத்திருக்கிறாள். குழந்தை மஞ் சத்தில் சுகமாகத் தூங்குகிறது.

முதலியாருக்குத் தெய்வத்தினிடம் அதிக பக்தி உண்டு. "ஆண்டவனே, இனி இந்த மாதிரி "துர்ச் சொப்பனம்' ஒன்றும் என் கனவில் வராமலிருக்க அருள் புரிய வேண்டும்!" என்று பிரார்த்தனை செய்துகொண்டு படுக்கையில் மறுபடியும் படுத்துக்கொண்டார்.

ஒரு மாதம் கழிந்தது. முதலியார் இந்த முப்பது நாளும் அந்தப் பையனை, அந்த ஊரெல்லாம் தேடினார்.

அவன் எங்கும் அகப்படவில்லை. கார் ஸ்டாண்டிலும், சத்திரத்திலும், சோம்பேரிகள் தூங்கும் மடங்களிலும், எங்குமே அவனைக் காணவில்லை. 'ஒருவேளை இந்த ஊரை விட்டுப்போய்விட்டானுக்கும்' என்று நினைத்துக்கொண்டு அவர் அவனைத்தேடும் வேலையை விட்டுவிட்டார்.

அவர் மனதில் மாத்திரம், ஏதோ பெருத்த தவறு செய்துவிட்டதாகத் தோன்றியது. அநியாயமாக அன்னியர் ஒருவரின் பணத்தைக் கொள்ளையடித்துப் பிடிங்கிக் கொண்டதைப் போலிருந்தது அவருக்கு. அவர் மனம் சாந்தியற்றுப் போய்விட்டது. எப்பொழுதும் அந்த ஏழைப்பையனை நினைத்துத் துக்கப்பட்டுக்கொண்டேயிருந்தார். அன்று தாம் அவனுக்குக் காசு கொடுக்காமல் போனதால் ஒருவேளை பசியினால் இறந்துபோய் விட்டானோ என்றுகூட எண்ணுவார். அப்போது அவருக்குத் தாங்கமுடியாத விசனம் உண்டாகும்.

அகஸ்மாத்தாக அவனை மறுபடி ஒரு தரம் சந்தித்தார். ஒருநாள் கடையிலிருந்து வீட்டிற்குப் போகும்போது, தெருவில் ஒருகோடியில் கும்பலாகப் பலர் நின்றுகொண்டிருந்தார்கள். அங்கேபோய் விசாரித்ததில் யாரோ ஒரு சிறுவன்மீது வண்டி ஏறிவிட்டதாகத் தெரிந்தது. என்ன ஆச்சரியம்! அதே அந்தப் பிச்சைக்காரப் பையன்! ஒரு மாதமாக அவர் தேடி அலைந்துகொண்டிருந்த சிறுவன். அவன் வலது கால் தொடையின் மீது வண்டிச் சக்கரம் ஏறி எலும்பை முறித்துவிட்டிருந்தது. அந்தத் தொடையிலிருந்து ரத்தம் வெள்ளம்போல் வழிந்தோடிக்கொண்டிருந்தது. அவன் பிரக்ஞை தப்பிக் கிடந்தான்.

அவனை பார்த்தவுடன் முதலியார் நெஞ்சு படபட வென்று அடித்துக்கொண்டது. அவனை உடனே ஆஸ்பத்திரிக்கு எடுத்துக்கொண்டு போகவேண்டுமென்று கருதினார். ஆனால் அருகிலுள்ளவர்கள், "அவனுக்கு சாவு நெருங்கி விட்டது. அவனை இனி எங்கு கொண்டுபோனா

லும் பிழைக்கமாட்டான்" என்றனர். அவன் கண்கள் சலனமற்றுப் போய்விட்டன. முகம் சவக் களே தட்டி விட்டது. முதலியாருக்கும் அவன் பிழைத்து விடுவான் என்ற நம்பிக்கை இல்லே.

துயரத்தோடு அவன் முகத்தையே பார்த்துக் கொண்டு நின்ருர். அந்தச் சிறுவன் கடைசித் தடவையாக ஒரு முறையாகிலும் கண்ணேத் திறந்து தம்மைப் பார்க்க மாட்டாஞவென்று எண்ணினர்.

அவனது உயிர், உடலேவிட்டுக் கொஞ்சம் கொஞ்ச மாகப் பிரிந்துகொண்டிருந்தது. கடைசியில் மெதுவாக அவன் கண் இதழ்கள் விரிந்தன. அங்கு கூடியிருந்த அனேவரையும் ஒருமுறை கண்களேச்சுற்றி நோக்கினுன். அவன் கண்கள் முதலியார் முகத்தைப் பார்த்ததும் அப் படியே நின்று விட்டன. அவன் என்ன நினேத்தானே? அந்த மரண வேதனேயிலும் ஒரு இளநகை அவன் முகத் திலே படர்ந்து மறைந்தது. கடைசியாக அவன் கண்கள் மூடின. அப்புறம் அவை திறக்கவேயில்லே.

முதலியாருக்கு இப்போது முன்பிருந்த மனக்கலக்க மும், குழப்பமும் இல்லே. ஒரு பெரிய க்ஷேத்திரத்தை முதன் முதலாகத் தரிசித்துப் பரவசமடைந்த பக்தனுடைய மனதைப்போல சந்தோஷம் நிறைந்த சாந்தி அவர் உள்ளத்திலே குடிகொண்டிருக்கிறது.

# ஓட்டமும் ஓய்வும்

மணியக்காரர் முத்துசாமிக் கவுண்டரின் தோட்டத்துச் சாளை இன்று 'அமளி துமளி' படுகிறது. வாழைக் காய்கள் தாரோடு போகின்றன. அக்கம் பக்கம் தோட்டங்களில் ஒரு பிஞ்சு பூ கூட இல்லாமல், இருந்த காய்களை எல்லாம் ஆட்கள் 'துளாவி'க்கொண்டு வந்துவிட்டார்கள். மணியக்காரர் கேட்டால் யார் 'இல்லை' என்று சொல்லி விட முடியும்? அதுவும் செட்டியாரின் நிமித்தம்!

ராமபண்டாரம் காலையில் குளித்துவிட்டு, ஈரவேஷ்டியோடு, சமையல் உள்ளில் புகுந்தவன் அப்புறம் வெளியில் தலைகாட்டவே யில்லை. புத்துருக்கு நெய் வாசனை 'ஜம்' மென்று வீசுகிறது. இவ்வளவிற்கும் காரணம் என்ன தெரியுமா? ஸ்ரீமான் திரு. கந்தப்ப செட்டியார் வந்திருப்பதுதான்.

கந்தப்ப செட்டியாரைத் தெரியாதவர்கள் காங்கயம் பிர்க்காவில் யாருமே யில்லை. சுற்று வட்டாரக் கிராமங்களி லுள்ளவர்களுக்கு அவரால் எவ்வளவோ உபகாரம்! கடனுக்காகப் பூமியை ஏலத்தில் எடுத்துக்கொண்டாலும், பூமியை, சொந்தக்காரனுக்கே குத்தகைக்குக் கொடுத்து விடுவார்! அவ்வளவு தர்மசிந்தை உடையவர்! அப்பேர்ப்பட்டவர் வந்திருக்கிறார் என்றால் சொல்லவேண்டுமா? அவர் வருகையால் முத்துசாமிக் கவுண்டர் அளவற்ற சந்தோஷமடைந்தார்.

செட்டியார் இன்று புதிதாக வந்துவிடவில்லை. எத்தனையோ தரம் வந்திருக்கிறார். ஆனால் அவர் ஒவ்வொரு தடவை வரும்போதும், ஏதோ ஒரு குடும்பத்திற்கு அநர்த்தம் பிடித்திருக்கிறது என்பதை ஊகித்துக்கொள்ளலாம்!

மணியக்காரருக்கும், செட்டியாருக்கும் உள்ள சிநேகி தத்தைப் பற்றி ஊரில் பலவிதமாகப் பேசிக்கொள்வார் கள். "கிராமத்தையே இரண்டு பேரும் சேர்ந்து பங்கு போட்டுக்கொள்ளப் பார்க்கிறூர்கள்" என்பார் ஒருவர். "இல்லை இல்லை, செட்டி, மணியக்காரனுக்கு ஒரு தம்பிடி கூடத் தரமாட்டான். பார்த்துக்கொண் டிருங்கள். மணி யாரனும் நம்மைப்போலவே பாப்பராகப் போகிறுன்" என்று மற்ருெருவர் கூறுவார். "ஒருவரைச் சொல்லி என்ன சொகம்? நாம் தெரியாமல் போய் மாட்டிக் கொள்வதற்கு?" என்று ஒருவர் அறிவுறுத்துவார்.

அப்படித் தெரியாமல் போய் மாட்டிக்கொண்டவர்க ளில் ராமசாமிக் கவுண்டனும் ஒருத்தன். அவன் 'பாக்கி' விஷயமாகத்தான் இப்போது செட்டியார் கிரனூர் வந் திருப்பது. கோர்ட்டுக்குப் போகாமல் பைசல் ஆகிவிட வேண்டுமென்பது செட்டியாரின் விருப்பம். இதிலே அவருக்கு ஏதோ கஷ்டமிருப்பதாக நினைத்துக்கொள்ளா தீர்கள். எத்தனையோ கேசுகளில் கோர்ட்டுக்குப்போய் வெற்றி யடைந்திருக்கிறூர். அது அவருக்குத் தண்ணீர் குடிப்பதுபோல. விஷயம் என்னவென்றூல், கடைசியில் கோர்ட்டுச் செலவும் அந்தப் பூமிமேல்தானே விழுகிறது? அந்தச் செலவின்றியே பூமியை கபளீகரம் செய்துகொள் வது நல்லதல்லவா?

மணியக்காரரும், செட்டியாரும் ராமசாமிக் கவுண் டனை வரவழைத்தார்கள்.

"என்ன கவுண்டரே! வட்டி ஏறிவிட்டதே, முதல் காணுதுபோ லிருக்கிறதே! நீங்கள் பாட்டுக்குப் பேசாம லிருக்கிறீர்களே?" என்றூர்.

ராமசாமிக் கவுண்டன் மனதிற்குள் வருத்தமடைந் தான். இருந்தாலும் சிரிப்பை வரவழைத்துக்கொண்டு, "என்ன செய்றதுங்க. காலாகாலத்திலே மழை துளி இல்லாமலே கயிட்டமா இருக்குதுங்க. கெணத்திலே ஒரு

சொட்டுத் தண்ணிகூட இல்லே. அடுத்த வருஷத்துக்குப் பாக்கலாமுங்க" என்ருன்.

"அவ்வளவு நாளேக்குப் பொறுக்க முடியாது. இதை உடனே ஒரு வழிப்படுத்தி விடுங்கள்."

"இல்லாதபோது கயிட்டப்படுத்துறீங்களே!" என்று கூறிவிட்டு மணியக்காரரைப் பார்த்து "ஏனுங்க அண்ணு, பேசாமே இருக்கிறீங்க? நீங்க ஒரு பேச்சு சொன்னு ஆவாதா?" என்ருன்.

உடனே மணியக்காரர், முன்பே யோசித்து வைத்திருந்தவர்போல, "என்னே என்ன சொல்லச் சொல்ருய் ராமண்ணு? கொடுத்தவங்கபாடு வாங்கினவங்க பாடு. அதிலே நான் பூந்துகிட்டு என்ன சொல்றது?" என்ருர்.

செட்டியார் ஒரு கனைப்புக் கனைத்துக்கொண்டு, "அவங்க, இவங்க ஒருத்தரும் சொல்ல வேண்டாம். நான் சொல்றேன் கேளுங்க. உங்களாலே இப்பக் கடனே அடைக்க முடியாட்டி பரவாயில்லே. பின்னுலே கடனேத் தீர்த்துடுங்க. தோட்டத்தை நான் எடுத்துக்கொண்டு போய்விடப்போவதில்லே. அது உங்களேவிட்டுப் போகாது. வட்டி ஏறிக்கொண்டு போனுல் பின் ரொம்பக் கஷ்டம். சும்மா, பெயருக்கு எனக்கு கிரயத்தைப் பண்ணீடுங்க. நான் கிட்டக்கூட வரலே. நீங்களே அனுபவிச்சுடுங்கோ. காலம் மாறினதிற்கப்புறம் பணத்தைக் கொடுத்துடுங்க. என்ன மணியாரரே, நான் சொல்வது?" என்ருர்.

மணியக்காரருக்குத்தான் இது முன்பே தெரியுமே! ஆகையால் அவர் ஒன்றும் சொல்வேண்டி யிருக்கவில்லே. ஆனுல் இதைக் கேட்டதும் ராமசாமிக் கவுண்டனுக்கு வயிறு பற்றி எரிந்தது. நாலாயிரம் ரூபாய் கடனுக்குப் பத்தாயிரம் ரூபாய் பெறுமான பூமியைக் கிரயம் பண்ணிக் கொடுப்பதா? இல்லாவிட்டால் இந்த அவசரத்திற்கு வேறு யார் கடன் கொடுத்து உதவப்போகிருர்கள்? மணியாரனின் அந்தரங்கம் எல்லாம் ராமசாமிக் கவுண்ட

னுக்குத் தெரியும். எதாவது தடை செய்தால் ஏலத்துக்குக் கொண்டுவரும்படி செய்து மணியாரன் பூமியை உழுவதற்குச் சீட்டு வாங்கி விடுவான். பிறகு அவனிடம் என்ன செய்ய முடியும்? வேறு யாருக்காவது குத்தகைச் சீட்டுக் கொடுத்துவிட்டால் தன் பிழைப்பு என்னுவது? வேறு ஒரு வழியையும் காணேமே!

"அண்ணு, நீங்கபாத்து எப்படி உட்டாலும் செரி. பேசாமயே இருக்கிறீங்களே?" என்ருன் ராமசாமிக் கவுண்டன்.

"என்னத்தை யப்பா பேசுகிறது? நீயும் வேண்டியவன். செட்டியாரும் வேண்டியவர். சரி, குத்தகையைக் கொஞ்சம் கம்மி பண்ணச் சொல்றேன் போ" என்ருர் மணியக்காரர்.

உடனே செட்டியார், "சபாஷ்! நீங்கள் எப்பவும் உங்கள் ஊர்க்காரரோடு தானே சேர்ந்துகொள்வீர்கள்! சரி, போகட்டும். கோர்ட்டுக்குப் போகிற தொந்தரவில்லாமல் முடிஞ்சுது" என்று கூறிக் கடகடவெனச் சிரித்தார். ராமசாமிக் கவுண்டனுக்கு அசாத்தியகோபம். ஆனல் அதை அவன் வெளிக்குக் காட்டாமல், "கோர்ட்டுக்குப் போனலென்னங்க? நாலேந்து வருஷத்துக்குமுந்தி நம்ம சின்னக் கவுண்டன் பூமி ஏலததுக்கு வந்தது தெரியுமா? செட்டியாருக்குத் தெரியாது. எண்ணு, உங்களுக்குத் தெரியுமல்ல! பூமி சுவாதீனப் படுத்தறபோது எத்தனே போலீசாரு வந்தாங்க! அப்புறம் என்னச்சு? ஏலத்தில் எடுத்தவன் அனுபவிக்க முடிஞ்சுதா? நம்ம கண்முன்னலே பாக்கலியா........."

செட்டியார் முறுக்கிவிட்டார். "என்ன கவுண்டரே, நம்மைப் பயப்படுத்துறீங்களா? அதெல்லாம் அந்தக் காலம். இப்போது ஒண்ணும் சாயாது, தெரியுமா?" என்று கூறிவிட்டுப் பலமாகச் சிரித்தார்.

"காலம் கீலம் ஒண்ணுமில்லீங்க. எல்லாம் நம்ம

கிட்டே இருக்குதுங்க. தூர எம் போவணும்? நம்ம நாச்சியப்பன் பூமிதான் முதல் ஏலத்திற்கு வந்தது. அந்த அண்ணன் என்ன வெல்லாமோ பண்ணிப் பாத்து, எங்களைக் குத்தகைக்கு உழக்கூடாதுன்னு தடுத்தது. நாங்க மணியாரர் பேச்சைக் கேட்டுக்கிட்டு உங்ககிட்டே நாச்சியப்பன் பூமிக்கு குத்தகைச் சீட்டு வாங்கிட்டோம். அவனும் ஊரைவிட்டே ஓடிப்போயிட்டான். நாங்க அப்ப மாத்திரம் ஒரே கட்டுப்பாடா இருந்திருந்தா, நீங்க வேற பூமியை ஏலத்துக்குக் கொண்டுவரலாமின்னு கனவிலே கூட நெனைச்சிருக்க மாட்டீங்க” என்று கூறிப் பெருமூச்சு விட்டான்.

“நீ நல்லா மொடக்கடி நாயம் பேசறே ராமண்ணு! வாங்கின கடன் உட்டுப்போவுமா? கொடுத்துத்தானே தீரணும்? உன் நாயம் நல்லாருக்கு” என்றார் மணியக்காரர்.

“அது எல்லாருக்கும் தெரிஞ்சுதாண்ணு இருக்குது. பொளப்புக் கெட்டு அதேண்ணு பேசனும்? சரி! நீங்க கூப்பிடறபோது வரேன்” என்று சொல்லிவிட்டு எழுந்து நின்றுகொண்டான்.

அதன்பிறகு ஒருவரும் ஒன்றும் பேசவில்லை. ராமசாமிக் கவுண்டன் சிறிதுநேரம் நின்று பார்த்துவிட்டு, பேசாமல் வீடு திரும்பினன்.

* * *

கீரணம் மணியக்கார முத்துசாமிக் கவுண்டர் பரம்பரைப் பணக்காரர் அல்ல. எல்லாம் அவருடைய தகப்பனர் தோன்றிச் சம்பாதித்ததுதான். கோழியை வளர்த்தி, குஞ்சை வளர்த்தி, ஆட்டை வளர்த்தி, மாட்டை வளர்த்தி எப்படியோ இறப்பதற்குள் 50 வள்ளப் பூமியைச் சம்பாதித்துவிட்டார். அவர் ஆடம்பரமாக வாழாவிட்டாலும் இருக்கிற வரையிலும் கண்ணியமாகத்தான் வாழ்ந்து வந்தார். அதற்குப் பிறகு முத்துச்சாமி கவுண்டர் கி.மு.

ஆனர். இவர் தந்தையைப்போல அவ்வளவு அடக்கமான வர் அல்ல. கொஞ்சம் படாடோபத்திலே பிரியமுள்ளவர்; அதற்குத் தகுந்தாற்போல செட்டியார் சிநேகிதமும் ஏற் பட்டது.

சவாரி வண்டியில் போவது அவருக்கு மதிப்புக் குறைவாகப்பட்டது. இத்தனை நாளும் சவாரி வண்டியில் போய்க்கொண்டிருந்ததற்காகத் தம்மையே நொந்து கொண்டார். சொந்தத்திற்கு ஒரு மோட்டார் வாங்கி ஞர். மோட்டார் வாங்கினதற்கப்புறம் மணியக்காரருக்கு வெளியூர்களில் ஜோலி அதிகரித்தது!

செட்டியாருக்கும், மணியாரருக்கும் நட்பு அதிக மாக ஆக கிராமத்தில் அநேகர் பூமி செட்டியாருக் குச் சொந்தமாகிக்கொண்டே வந்தது. இதில் மணியக் காரருக்கும் அவ்வப்போது சிறிது பணம் ரொக்கமாகக் கொடுப்பது உண்டு. ஆனல் அந்தப் பணமெல்லாம் கடைசியில் மணியாரர் கணக்கில் சேர்க்கப்பட்டது என் னும் விஷயம் பின்னல்தான் தெரியவந்தது.

பழைய சோற்றைவிட்டு காப்பி குடிக்க ஆரம்பித்த தில் எத்தனையோ குடும்பங்கள் கெட்டுப்போ யிருக்கின் றன! பின் மோட்டார் சவாரி போய்க்கொண்டிருந்தால் கேட்கவா வேண்டும்?

மணியாரருக்கு நாளுக்குநாள் செலவு ஏறிக் கொண்டே வந்தது. அதோடு இரண்டு மூன்று வருஷம் மழையின்றி விளைவும் குறைந்தது. ஆனல் செலவைக் குறைத்துக்கொள்ள முடியுமா? ஆப்த நண்பர் செட்டி யார் இருக்கும்போது பணத்திற்கு என்ன குறைச்சல்?

கடன் அதிகரிக்க அதிகரிக்க செட்டியார் சிநேகித மும் குறைந்துகொண்டே வந்தது. இதற்குள் ஊரிலுள்ள முக்கியமான புள்ளிகளெல்லாம் செட்டியார் கைவசமாகி விட்டார்கள். இனி, மணியக்காரரின் தயவு எதற்காக வேண்டும்? இனி, மணியக்காரரிடமிருந்து பணத்தை வசூ

விக்க வழி தேடவேண்டியது தானே? மணியக்காரர் பாடு நாளுக்குநாள் அம்பலமாகிக்கொண்டு வந்தது. கையி லிருந்த பணத்தை எல்லாம் போட்டு கிணற்றை வெட்டி ஞர். ஆனுல் கிணற்றில் தண்ணீர் வரவில்லே. மணியக்காரர் கண்ணில்தான் தண்ணீர் வந்தது. ஆட்டுக் குட்டிகளே விற்று 'பெட்ரோல் வாங்க ஆரம்பித்தார்! அது எத்தனே நாளேக்கு வரும்? சீக்கிரத்தில் பட்டி காலியாயிற்று. ஒரு நாள் செட்டியார் ஒரு குமாஸ்தாப் பையனேடு ஊருக்கு வந்திருந்தார். இந்தத் தடவை மணியக்காரர் விஷயத்தை இரண்டிலொன்று முடிவு செய்து விடுவது என்ற தீர்மா னத்தோடு தான் வந்திருந்தார். செட்டியாரை எப்படி யாவது திருப்திசெய்ய வேண்டுமே யென்பது மணியக்கார ரின் ஆசை. "என்ன செட்டியார்வாள், பல பேர்களேப் பார்க்கவேண்டி யிருக்குமே. நம்ப காரிலேயே போய் சுற்றிப் பார்த்துவிட்டு வாருங்கள்" என்று உபசாரமா கச் சொன்னர். இந்த குமாஸ்தாப் பையனேவிட்டு டிரை வரைக் கூப்பிட்டு வருமாறு அனுப்பினர். போன பையன் சிறிது நேரத்தில் திரும்பிவந்தான். "டிரைவரை எங்கே யும் காணலீங்க. அவனுக்குத் தரவேண்டிய சம்பளப் பாக்கி ஏராளமா யிருக்குதாமே. அந்த பாக்கி சம்பளம் கூட வேண்டாம்னு சொல்லிப்பிட்டு நேத்தே போயிட் டானுங்களாம்" என்ருன். அதைக் கேட்டபோது மணியக்காரருக்கும் செட்டியாருக்குங்கூட தூக்கி வாரிப் போட்டது.

மணியக்காரர் நிலேமை வெட்ட வெளிச்சமாகத் தெரிந்துவிட்டபின் செட்டியார் "பரவாயில்லே. நான் போயிட்டுவரேன்" என்று தனது குமாஸ்தாவோடு புறப் பட்டு விட்டார். என்ன தீர்மானத்தோடு புறப்பட்டா ரென்று சொல்லவும் வேண்டுமா?

மணியக்காரருடைய அந்த மோட்டார் அசையாமல் வீட்டெதிரில் நின்றது. ஊரிலுள்ள குழந்தைகள் 'பூம்

பூம்' என ஆர்ன் அடித்து மகிழ்ந்தன. இந்த சத்தத்தால் மணியக்காரர் மிகுந்த வெறுப்படைந்தார். அது அவருக்குச் சகிக்க முடியாத வேதனையாயிருந்தது. அதை விற்கவும் முடியவில்லை. யாராவது இரவலாகவாவது வாங்கிக் கொண்டுபோய் விடமாட்டார்களா என்று தவித்தார்.

* * *

செட்டியார் பத்திரத்தை கோர்ட்டில் தாக்கல்செய்து தீர்ப்பும் வாங்கிவிட்டார். ஏலத்தேதியும் மிகச் சமீபத்தில் வந்துவிட்டது. மணியக்காரர் அளவுகடந்த துக்கமடைந்தார். இப்போது மணியக்காரர் வீட்டிற்குத் தோட்டி தலையாரிகளைத் தவிர்த்து யாரும் வருவதில்லை. பத்துப்பேர் சதா தம்மைச் சூழ இருந்து கொண்டிருந்தவருக்கு இது ரொம்ப வருத்தத்தை அளித்தது. தாம் வாழ்ந்த வாழ்க்கையை ஒருமுறை எண்ணிப் பார்த்தார். இனி நிலத்தை ஒருவனுக்கு விட்டுவிட்டு கையைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்திருப்பதா ?

"திடீரென்று இருபது ஆயிரம் ரூபாய்க்கு எங்கே போவது? யார் கொடுப்பார்கள்? இதற்கு வேறு ஒரு வழியுமில்லையா? நம் குடும்பம் இதோடு அழிந்து தொலைய வேண்டியதுதானா? முடியாது! முடியாது! இதை என் கண்ணால் பார்த்துக்கொண்டிருக்க மாட்டேன். செட்டி எப்படி பூமிக்குள் காலை எடுத்து வைப்பானோ பார்க்கிறேன்" என்று மணியக்காரர் நினைத்தார்.

பூமிக்குள் செட்டி காலை வைக்க முடியாதுதான். ஆனால் அந்தக் காலம் மலையேறிவிட்டது. கூப்பிட்ட குரலுக்கு ஏனென்று கேட்கக்கூட ஆளில்லை. ராமசாமி கவுண்டன் பூமி ஏலத்தில் போனபோது அவன் என்னமாய்த் துடித்தான்? பொன்னுசாமிக் கவுண்டன், 'இனி, இந்த ஊரில் இருப்பதில்லை' என்று கூறிவிட்டு, இந்தத் தள்ளாத வயதில் மகள் வீட்டுக்கே போய்விடவில்லையா? இன்னும் எத்தனைபேர் பூமியைச் செட்டிக்குக் கதறக்

கதறப் பறித்துக் கொடுத்தார். அதன் பலனை இன்று அனுபவிக்காமல் வேறு யார் அனுபவிப்பது?

"அந்த நாளையிலே பேத்துக்குப் பிதிருக்கு. இந்தக் காலத்திலே நாமே அனுபவிக்க வேண்டியதுதான்" என்று கூறிக்கொண்டு ராக்கியாக் கவுண்டன் வந்தான்.

வெளித் திண்ணையில் உட்கார்ந்திருந்த மணியக்காரர் திரும்பிப் பார்த்தார். தம்மைத்தான் ஏளனம் செய்கிறுன் என்பதைத் தெரிந்துகொண்டார். ஆனாலும் வெளிக்குக் காட்டாமல், "என்ன ராக்கியப்பா, தன்னப்போல பேசிக்கிட்டு வரயே?" என்றுர்.

"ஒண்ணுமில்லீங்க, என்னமோ ஒரு ஆத்திரத்திலே சொல்லிக்கிட்டு வந்தேனுங்க. நீங்க ஏந் தனியா குக் கிக்கிட்டு இருக்கிறீங்க" என்று சம்பந்தமில்லாது எதையோ கூறி மழுப்பினுன். மணியக்காரருக்கு அவனிடம் பேச இஷ்டமில்லை. ஆகையால் மௌனமாக இருந்தார். ஆனல் அவன் விடவில்லை. "நம்ம ராமண்ணன், காங்கயத்துக்குப் போயிருக்கிறுன் தெரியுமா?" என்றுன்.

"தெரியாதே! போனல் எனக்கென்ன?"

"எல்லாம் உங்க விசயமாத்தான். உங்க பூமியை உழுவறதுக்கு சீட்டு தனக்கே கொடுக்கோனுமின்னு கேக்கப் போயிருக்கிறுனம்."

இதைக் கேட்கச் சகிக்கவில்லை. மணியக்காரர் அங்கிருந்து எழுந்து சென்றுவிட்டார்,

*　　　*　　　*

நாளை மணியாரர் பூமி ஏலமாகப் போகிறது. இன்று காலையில் மணியாரர் நேரத்தில் எழுந்துவிட்டார். எல்லோருடனும் 'கலகல' வென சிரித்துப் பேசினுர். யார் மேலும் சிறிதும் கோபமில்லாதவர்போல் நடந்து கொண்டார். மணியாரர் மனைவிக்குக் கூட இது ஆச்சரியமாயிருந்தது. மத்தியானம் சாப்பிடும்போது,

"நாளைக்கு நம்ம பூமி ஏலத்திலே போகுதாமே?" என்ருள் மனைவி.

"ஆமாம்" என்று சிரித்துக்கொண்டே மணியாரர் சொன்னர்.

"பூமி ஏலத்திலே போயிட்டா நாம் என்ன செய்யறது?"

"நமக்கென்ன, புள்ளையா, குட்டியா? ஒண்ணும் கெடையாதே. வயித்துக்குச் சோறு கெடைக்காமலா போயுடும்? உம்பொறந்த ஊட்டுக்குப் போனு சோறு போடமாட்டானு?"

"நீங்களும் வருவீர்களா?"

"வராமே. நான் வந்துதானே தீரணும்?"

மணியார் வெளிக்கு துக்கப்படாதவர்போலக் காணப்பட்டாலும் உள்ளுக்குள் மிக வேதனைப்பட்டுக்கொண்டிருந்தார்.

வழி நெடுக என்ன வெல்லாமோ யோசித்துக்கொண்டே சென்ருர். தோட்டத்தைப் பலமுறை பெருமூச்சுடன் சுற்றிப் பார்த்தார். நாளையோடு இந்தப் பூமி அவரைவிட்டு போய்விடப் போகிறது. அப்புறம்......... அப்புறம்.........அப்புறம் என்ன, எல்லோரையும் போலத்தான்! இவரும் குத்தகைக்கு உழ வேண்டியது. இல்லை-இல்லை, அதுகூட சீட்டுக் கொடுக்கமாட்டான், அதற்குத்தான் ராமசாமிக் கவுண்டன் போயிருக்கிருனே!

"சை! இதென்ன பிழைப்பு? அப்புறமும் உயிரை வைத்துக்கொண்டிருப்பதா? உயிர்மேல் ஆசை யிருந்தால் பின் என்ன செய்வது! வாழ்ந்துதானே தீரவேண்டும்?

மாலைபோய் இருள் பரவியது. மணியாரர் மட்டும் தோட்டத்தை விட்டுக் கிளம்பவில்லை. வேலையாட்களெல்லாம் வீட்டிற்குப் போய்விட்டார்கள். எங்கும் நிசப்தம். சற்றைக் கொருதரம் காற்றில் அசையும் தென்னேலைகள் பட படத்தன. அதோடு இவருடைய உள்ளமும் துடி

துடித்தது. நாலா திசைகளிலிருந்தும் 'கடன்காரா! கடன்காரா!' என்று யாரோ அழைப்பதுபோ லிருந்தது. ஆகாயத்தை அண்ணுந்து பார்த்தார். அங்கேயும் 'கடன் காரன்' என்று அக்ஷரங்களை நட்சத்திரங்கள் சித்தரித்துக் காட்டின. தம் தோட்டத்திலுள்ள பனை மரங்களை இருளில் பார்த்து மருண்டார். கடைசியில் மணியாரர் என்ன நினைத்தாரோ தெரியவில்லை. சரேலெனப் பட்டிக் குள் நுழைந்தார். மாட்டுத் தலைக்கயிற்றை அவிழ்த்துக் கொண்டு அந்த இருளில் தோட்டத்தில் ஒரு திசையை நோக்கி நடந்தார்.

* * *

மறுநாள் பொழுது புலர்ந்தது. அன்று என்றுமில் லாதவாறு சூரியன் பிரகாசித்தான். பக்ஷிகள் அழகாகப் பாடின. மணியாரர் பிரேதமும் காலைக் காற்றிலே வேப்ப மரத்தின்கீழ் கயிறுடன் ஆடி அசைந்தது.

# மன மயக்கம்

சில சமயம் வாழ்வின் பயங்கர உண்மைகளைக் கேள்விப் படுகிறோம். "இப்படியும் நடக்குமா?" என்ற அதிசயம் நமக்கு ஏற்படுகிறது. "ஏன் நடக்காது?" என்று சமாதானம் செய்து கொண்டால் கூட மனது கேட்கமாட்டேனென்கிறது.

அன்றொரு நாள் உல்லாசப் பிரயாணம் போய்க் கொண்டிருக்கையில் என் நண்பன் ஒரு சோகச் சம்பவத்தைச் சொன்னான். அந்த சோகநாடகம் நடந்த இடத்துக்கு அருகே வண்டிபோய் நின்றதால் அது அவனுடைய ஞாபகத்துக்கு வந்தது போலும். இன்று நெடு நாளைக்குப் பிறகு அதை நினைத்தாலும் மெல்லிய பனி போன்ற துயரத்திரை இதயத்திலே படர்கிறது. பார்க்கப் போனல் எனக்கும் அந்த சம்பவத்திற்கும் என்ன சம்பந்த மிருக்கிறது? காதால் கேட்டது ஒன்றேதான். என் நண்பன் நல்ல ரசிகன். அவன் சுவாரஸ்யமாகச் சொல்லியதனால் தான் இத்தாங்கல் ஏற்படுகிறதோ என்னவோ என்று பல தரம் நான் யோசித்தது உண்டு.

"அந்தப் பேரழகியைப் படைக்கையிலேயே பிரம்மா குற்றத்தைச் செய்து விட்டான். ஞாபகப் பிசகாக கந்தர்வ உலகுக்கோ, வேறு எங்கோ அற்புத உலகுக்கு அனுப்ப வேண்டிய அந்த அழகியை இந்தச் சின்னஞ்சிறு கிராமத்தில் வந்து பிறக்கும் படி செய்தான். அது மாத்திரமா? பிரம்மா அவள் விஷயத்தில் இழைத்த தவறுதல்களுக்குத் தண்டனை விதிக்கப் போனல்........." என்று சொல்லி என் நண்பன் பார்த்த பார்வையின் வேகத்தை

என்னால் தாங்கவே முடியவில்லை. மேலே, நண்பன் சொன்ன வரலாற்றை அப்படியே தருகிறேன்.

பத்து வருஷங்களுக்கு முன் அவனை அந்தப் பிராந்தியத்தில் எல்லோருக்கும் தெரியும். அவன் அங்கேயே பிறந்தவன், வளர்ந்தவன். இந்த உலகிலே, இப்போதும் அப்போதும் அவனுக்கு உறவினர்கள் யாருமில்லை. தாயார் இருந்தாள். ஆனல், ஒரே நாளில், ஒருவரும் காணமுடியாத இடத்திற்குப் போய்விட்டாள்! அவனும் போய் விட்டான் அதற்கு முன்பே பொருள் தேட.

ஆனல், அவளுக்காக இப்போது வந்தான் அங்கே. அப்போது அவன் மேலானவனுகத் தோன்றினன். உயர்ந்தவனுக, உலகிலுள்ள எல்லோருக்குமே உயர்ந்தவனுகத் தோன்றினன்.

ஆனல், இப்போது? சை! இந்த சனங்கள் இருக்கிறார்களே, நன்றி கெட்டவர்கள். எல்லோருமே, உலகப் பாதையில் உருண்டோடும் மனித ஜாதிமுழுவதுமே சீக்கிரத்தில் மறந்து விடுகிருர்கள்.

எல்லோரையும் போலவா அவளும்? ஆமாம். அவள் என்ன எச்சா? ஆனல், அவள் மறந்தாளா? மருண்டாளா? ஓடி ஒளிந்தாளா? இல்லை. அவனைக் கண்டாள், அவனிடம் பேசினள்.

ஆனல்.........ஆனல், அவன் ஏன் அப்படி உலக மகாஜனங்களின் துக்கம் முழுதும் தன்மேல் சுமத்தப் பட்டவன் போல் கலங்கிப் போனன்? அவளிடம் பேசும் போது உணர்ச்சி இழந்த வார்த்தைகளாக அவன் வாயிலிருந்து புறப்பட்டதே, அது ஏன்? அவன் மனதின் அடியிலே அமிழ்ந்திருந்த எண்ணக் குவியல்கள், வார்த்தைகள் ஏன் அப்படி பிறக்கும் இடத்திலேயே நடுங்கு கின்றன? அவன் பயந்தானு? இல்லை. பயப்படவில்லை. நேராக நிமிர்ந்து அவளிடம், சோகம் தொனிக்கச் சொன்னன்:
“என்னை நீ மறந்து விட்டாயா?”

அவள் முதலில் அவனிடம் ஒன்றும் பேசவில்லை. பேசாமல் சிலையைப் போல் அசைவற்று அவன் முன் நின்று கொண்டிருந்தாள். அந்த நிசப்தமான நதிக்கரையிலே அவர்கள் இருவரையும் தவிர வேறுயாருமே இல்லை. அவளிடம் பேசுவதற்காக காத்திருந்து, தண்ணீர் கொண்டுவர ஆற்றங்கரைக்கு அவள் வருவதைப் பார்த்து, நிழல்போல தொடர்ந்து வந்திருக்கிறனல்லவா? என் அப்படித் தனியாக அவளைச் சந்திக்க விரும்பினன்? நேராக அவள் வீட்டிற்கே போனல் என்ன? ஓகோ! அங்கே 'அவன்' இருக்கிறனென்று? கோபித்துக் கொள்வானே?

"ஐயோ! இவ்வளவு நாட்களுக்குப் பிறகு வந்திருக்கிறயே! என் இளமையை வாரியிறைத்து விட்டேன்! ஒரு அன்னியன் காலடியில் கிடக்கும் போது வந்து சேர்ந்தாயே........"

அவள் இன்னும் என்ன வெல்லாமோ எண்ணினள். அப்படி யோசித்துக் கொண்டே எதிர்க்கரையைப் பார்த்தாள். அப்படியே உசர ஆகாயத்தைப் பார்த்தாள். எதிர்க்கரையில் காற்றின் அசைப்பில் உரைந்த நாணல்களின் 'சிர்சிர்' சப்தம் அவள் மனதிலிருந்த கலக்கத்தை அதிகப் படுத்தியது.

"இப்போது நீஎன் இங்கு வந்தாய்?" நடுங்குங் குரலில் சொன்னள் அவள்.

"உனக்காக, உன்னைத் தேடி எங்கிருந்தாலும் வராமலா இருப்பேன்? உனக்கு ஏராளமான பொருள் தேடிக் கொண்டு வந்திருக்கிறேன். இனி நாமிருவரும் ஆனந்தமாக வாழலாமல்லவா?"

அவன் உள்ளத்திலுள்ள ஆசைகளை அப்படியே அவள் முன் சிந்திவிட வேண்டுமென்று விரும்பினன்.

"என்னை நீ பார்க்காதே. திரும்பிக் கூடப் பார்க்காதே. பாவி! நான் மகாபாவி! உனக்குத் துரோகம்

செய்து விட்டேன். நான் கலியாணம் செய்து கொண்டு விட்டேன்."

இருண்டு கிடக்கும் பெரிய வனந்திரத்தின் இருளைப் பிளந்து கொண்டு புறப்படும் ஒளியின் கதிரைப் போல மெதுவாக அவள் வார்த்தைகள் தைத்தன அவன் நெஞ்சில். அவன் அவசரமாகப் பேசினான்: "அதனால் என்ன? நீ வந்துவிடு என்னோடு. உன்னை எப்படி வைத்திருக்கிறேன் பார். உனக்காக........."

அவள் தடுத்துப் பேசினாள்: "அது முடியாது, நான் உன்னோடு வர முடியுமா? ஜனங்கள் என்ன சொல்லுவார்கள்?"

"இந்த ஜனங்களின் பேச்சுக்குப் பயந்தா உன் வாழ்க்கையை நாசம் செய்து கொள்கிறாய்? அநியாயமாக உன் செளந்தர்யத்தையே வீணாக்குகிறாயே........."

"எதற்காக இந்த மாதிரி பேச்செல்லாம் பேசுகிறாய்? என்னை நோகவைக்காதே. நான் எப்படிப்பட்ட துக்கத்தை அனுபவிக்கிறேனென்று உனக்குத் தெரியுமா?.........நீ போய்விடு. இந்த இடத்தை விட்டு இப்போதே போய்விடு. நான் கெஞ்சிக் கேட்டுக் கொள்ளுகிறேன். நேரமாகிறது போ"

"இருட்டி விட்டால் என்ன? என்னை எங்கே போகச் சொல்கிறாய்? உன்னை விட்டா? வெறும் சூந்யத்தை நோக்கி என்னை ஏன் போகச் சொல்கிறாய்?"

அவள் அசைவற்று அவன் முன் நின்றாள். அவள் இதயத்தின் ஆழத்திலிருந்து கிளம்பிய சோகத்தின் ஏக்க மூச்சு முகத்தில் படர்ந்தது. அவளுடைய இதயம் சொல்ல முடியாத வகையில் அடித்துக் கொண்டது. கண்களிலிருந்து கண்ணீர் அருவிபோல வழிந்தோடிற்று. அவள் அழுது கொண்டே அவனிடம், "போய்விடு" என்று சொன்னாள். அதோடு மறுபடியும் சொன்னாள்: "நீ போவது மட்டுமல்ல. இதோடு என்னை மறந்துவிடு.

என்னை அடக்கம் செய்து விட்டார்களென்றே நினைத்துக் கொள்."

"அது முடியாது. என்னால் உன்னை மறக்கவே முடியாது. நான் உன்னை மறக்கவே முடியாது. நான் உன்னை வற்புறுத்தவில்லை. போகிறேன், நிச்சயமாகப் போகிறேன். ஆனால், எங்கே கடைசியாக என்னைப் பார்த்து, போய்வா என்று சொல். அன்பாக விடை கொடு."

"போகிறாயா? நீ எங்கிருந்தாலும் சரி. சௌக்கிய மாயிரு. என்னைப் பற்றி நினைத்துக்கொண்டு வருந்தாதே."

"இந்த ஜன்மத்தில் அது ஆகாத காரியம். இதோ என்னைப்பார் போய், வருகிறேன்."

அவள் மறுபடி என்னமோ பேசிக்கொண்டிருக்கும் போதே வெகு தூரம் வந்து விட்டான்.

அவன் மனதிலே, அவள் பேச்சுக்கள் பெரிய மாறுதலை ஏற்படுத்தி விட்டதை அவன் அறிவானா? அவள் துயரத்தோடு சொன்ன வார்த்தைகள் அவன் நெஞ்சிலே பாய்ந்து அவனை வேறு மனிதனாக்கி விட்டது. அவனைப் பைத்தியக்காரனாக்கி விட்டது. அவன் அவளைப் பிரிந்து, அப்பால் ஆற்று மணலையும் தாண்டி, கிராமத்தைக் கடந்து சாலையில் நடந்து போய்க் கொண்டேயிருந்தான். மண்ணும், ஆறும், குன்றும், மேடும் இருளில் மௌனத்தில் ஆழ்ந்தது. அவள் மட்டும் அந்த நதிக்கரையிலே தனித்து நின்று கொண்டே யிருந்தாள். அந்த இருண்ட இரவிலே ஆற்றங்கரையிலே, காலடியில் உருண்டு கிடக்கும் குடத்தைப் பார்த்துக்கொண்டு பேயால் அடிக்கப் பட்டவள் போல நின்று கொண்டே யிருந்தாள்.

அவளுக்குத் தன்னிடமே வெறுப்பு ஏற்பட்டது. அந்த ஆற்று நீரிலே விழுந்து பிராணனை முடிக்கக் கருதினாள். இரண்டடி எடுத்து வைத்தாள் முன்னால். அப்போது எங்கிருந்தோ திகிலடைந்த பட்சியின் அலறும்

குரல் அவள் நெஞ்சில் வந்து தாக்கி அவளைத் திகைக்கச் செய்தது. மறுபடி ஏதோ முடிவுக்கு வந்தவள் போல, இருளில் ஒரு திசையை நோக்கி நடந்தாள்.

அது அந்திச் சாயை மறையு முன்பு அவன் போன தடம் அல்லவா? அவனைத் தேடிக் கொண்டா போகிறாள் அவள்? அந்தப் பயங்கரமான இரவிலே மேடும், பள்ளமு மான அந்தப் பாழடைந்த பாதையிலே அவள் நடந்து போய்க் கொண்டிருந்தாள். அவள் மனதிலே ஒரே ஒரு எண்ணம் மாத்திரம் சுழன்று கொண்டிருந்தது. அது எப்படியாவது அவனைத் தேடிக்கண்டு பிடித்து விடுவ தென்பதே.

அவள் விடியும் வரை நடந்தாள். வழியில் ஒருவரை யும் அவள் காணவில்லை. விடியற்காலை, கிழக்கு வானத் தின் ரத்தச் சிவப்பு அவள் கண்களுக்குத் தெரிந்தபோது ஒரு மனிதன் அவளுக்கு முன்னால் போவது தெரிந்து கூப் பிட்டாள்: "யார் அது?"

அவனா அது? இல்லை, இல்லை, இல்லை. அவன் யாரோ? எங்கு போகிறானோ? அவன் திரும்பிப் பார்த் தான். ஆனால், ஒன்றும் பேசவில்லை. பேசாமல் மேல் நடந்தான்.

அன்று உச்சிப்பொழுது வரை நடந்து கொண்டே யிருந்தாள். நல்ல மத்தியான வேளையில் ஒரு கிராமத் திற்கு வந்து சேர்ந்தாள். ரொம்பக் களைத்திருந்ததால், ஒரு வேப்பமரத்தின் நிழலில் படுத்தவள் அப்படியே தூங்கிவிட்டாள். மறுபடி தூக்கத்திலிருந்து அவள் விழித்த போது யார் யாரோ பக்கத்தில் பேசுவது கேட்டது. அவர்களிடம் கேட்டாள்:

"நேற்று இந்த வழியாக ஒரு மனிதன் வந்தானா?"

"ஆமாம், ஒரு பைத்தியக்காரன் இந்த வழியாகப் போனான். நேற்று எல்லோரும் பார்த்தோம்."

"ஆமாம்" என்றனர் எல்லோரும். அங்கிருந்த ஒரு

பெண், "உனக்கு அவன் உறவா?" என்று கேட்டாள்.

அவளுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. தெரியாத கதையைச் சொல்லி அர்த்தம் கேட்பது போலிருந்தது.

அடையாளம் சொல்லிக் கேட்டாள். அவனே தான் என்றனர் எல்லோரும்.

"பைத்தியமா! பைத்தியமா பிடித்து விட்டது உனக்கு" என்று அழுதாள். அருகிலிருந்தவர்களுக்கு ஒன்றும் விளங்கவில்லை.

அவன் அந்த இருள் சூழ்ந்த சாலையிலே நடந்து போய்க் கொண்டிருந்தான். அவன் வாய் மட்டும் முணு முணுத்துக்கொண்டே யிருந்தது. அவனுடைய உருவம் இருளுடன் கலக்க ஆசை கொண்டு விட்டது. இப்போது அவனுக்கும், மரத்து நிழலுக்கும் வித்தியாசம் தெரிய வில்லை. அவன் போய்க்கொண்டே யிருந்தான்.

முடிவில்லையோ என்று சொல்லும்படி அந்த நீண்ட சாலையும் அவனுக்கு வழிவிட்டுக் கொண்டே யிருந்தது.

சாலை அவனுக்கு வழிவிடுகிறது; உண்மை. ஆனால் அவளுக்கு? கடவுளா? ஆம், கடவுள் விட்ட வழிதான் இதுவும்!

# மண்ணாசை

பழைய கோட்டைப் பசுமாடுகளைப் பார்த்து அனுபவித்தவர்களுக்கு, அந்தக் காட்சியை மறக்க மனமே வராது. இளங்காளைகள் பெரிய கரிய விழிகளை உயர்த்தி ஆச்சரியத்தோடு நம்மைப் பார்க்கும் போது குதூகலம் உண்டாகாமல் போகாது. மழமழவென்று "குலைநுங்கு" போன்ற உடம்பு, 'திமு திமு' வென வாளிப்பான தோற்றம், தொட்டுப் பார்க்கவேண்டும் என்று ஆவலைத் தூண்டும் 'சிலு சிலு'ப்பு இத்தனையும் சேர்ந்து நம்மை என்னவெல்லாமோ பண்ணிவிடும். அந்தக் காளைகளிடம் இன்னொரு தனி அழகு உண்டு. புதிதாகத் திடீரெனப் பார்க்கையில் அத்தனையும் ஒன்றுதானோ என்ற சந்தேகம் தோன்றும். ஒரே அச்சில் வார்த்தமாதிரி என்பார்களே, அப்படி வித்தியாசம் காணமுடியாமல் நம்மைத் திகைப்புக் கடலில் ஆழ்த்திவிடும். இப்பேர்ப்பட்ட அனுபவம் உள்ளவர்களுக்கு, மராம்பாளையத்துக் கிட்டப்பனையும், வெங்கப்பனையும் பற்றிச் சொல்வதைக் கேட்டால் ஆச்சரியம் உண்டாகாது. கிட்டப்பனும் வெங்கப்பனும் ராமலக்ஷ்மணர்கள் மாதிரி! பெற்ற தாய்க்கே பிள்ளைகள் அடையாளம் தெரியாது. தெரியாது என்றால் அப்படித் தடுமாற்றத்தை உண்டு பண்ணும் முக அமைப்பு. பேச்சும் அப்படியே. எனக்கே எத்தனையோதரம் சந்தேகம் உண்டாகியிருக்கிறது. "என்ன தம்பி, யாரு வெங்கப்பனா? கிட்டப்பனா?" என்று சந்தேகப் படலத்தைத் தெளிவு படுத்திக் கொண்டு பேசுகிறவர்களும் உண்டு.

அதென்னவோ, அந்த உருமால் கட்டுக்கூட, குடுமி

யைப் பின்னுக்குத் தள்ளிவிட்டுக் கட்டுவதும் ஒன்றைப் போலவே மற்றதும் அமைந்திருந்தது. செம்மண்நிற மீசை, கோவணக்கட்டு, முழங்காலுக்குக் கீழே, செடி கொடிகளுக் கிடையில் திரிந்து கொண்டிருப்பதால் சின்னச் சின்ன பில்லுகளும், செடிக்கிழிசல்களும் ஒரே மாதிரி ஒட்டிக்கொண்டிருக்கும்.

பாகப் பிரிவினை தகப்பனார்காலத்திலேயே ஆகியிருந்தும் ஏகக்குடும்பம் போலவேதான் வாழ்ந்து வந்தார்கள். தோட்டத்தில் ஆளுக்குப் பாதி. மேல் பொளியோடு பெரியவனுடையது, கீழ்ப்பொளி, தொண்டுப் பட்டியோடு சின்னவனுடையது. ஆனால் இரண்டு பண்ணையத்து மாடுகன்றுகளும் ஒன்றுகவே தான் தொண்டுப்பட்டிக்கு வந்துசேரும்.

வெளி ஒற்றுமையைப் போலவே உள ஒற்றுமையும் அமைந்திருந்தது. பெரியவன் ஒன்று சொன்னல் சின்னவன் தட்டிச் சொல்ல மாட்டான். இருவரும் 'ஒருத்தர் கோட்டை மற்றவன் தாண்டமாட்டான்' என்று எல்லோரும் சொல்லும்படி காரியம் நடத்திக் கொண்டு போனார்கள்.

சேற்றில் செந்தாமரை மலர்வது போல என்று சொல்லுவார்களே, அதுபோல அந்தக்கிராமத்தில், இவர்கள் குடும்பத்தில் ஒரு பெண்பிறந்திருந்தாள். கிராமத்தைக் குற்றம் கூறிவிட்டால், சீர்திருத்தத்திலே ஒரு படி முன்னேறி விட்டதாகவோ அல்லது இந்தக் கிராமம்தான் கீழானது மற்றதெல்லாம் மேம்பட்டது என்றோ எண்ண வேண்டாம். எல்லாப் பட்டிக்காட்டைப் போலவும், பாழடைந்து, பகவானை வெளியுலகுக்கு பகிரங்கமாகக் காட்டிக் கொண்டு நிற்கும் கோவில் சுவர்கள், ஊரைச் சுற்றிலும் தடையின்றி மல ஜலங்கழிக்கும் பொது உடமைப் பிரதேசங்கள், வையாளத்திலே கிணறுகளில் தண்ணீர், காய் காய்க்காத புளியமரங்களும், விட்டு விட்டுக் கத்திப்

பறக்கும் காகங்களும், சில சில சமயங்களில் மௌனத் தின் எல்லையையே நிரூபிப்பதும், மற்றும் சில வேளைகளில், பொது இடம் என்று சொல்லப்படும் ஊர்ச் சாவடி, அல் லது தாரமிழந்தவன் வீட்டு முன்பக்கத்துத் திண்ணையி லிருந்து எழும் கதம்ப ஒலி—இத்யாதி சிறப்புகள் பெற்று அந்தக் கிராமம் விளங்கினாலும், அங்கே அந்தப் பெண் பிறந்து விட்டதைப் பற்றி வியப்பு ஒன்றும் இல்லை. ஆனால் வெங்கப்பன் வீட்டில் அந்தக் கன்னி என் பிறந்தாள்? மற்றப்பெண்களைப் போல் இல்லாமல் எந்தக் கவியோ கனவு கண்டமாதிரி, கவர்ச்சியும் வனப்பும் அவளைத் தேடி என் வந்தடைந்தது? இது தான் நமக்குப் புரிய வில்லை. ஆனால் 'அழகு' இங்குதான் இருக்கவேண்டும் என்று ஒரு கட்டாயமில்லை யல்லவா? நீல நிறவானம், சலசலத்திடும் கடல் அலைகள், அருணோதயத்தில் மகிழ்ந்து நிற்கும் மலர்—என் அதுமட்டுமா? தோன்றும் பொருள் களி லெல்லாம் தான் அழகு இருக்கிறதே.

ஆனால், இங்கே சொல்ல வந்த அழகும் அதுபற்றிய விரிவும் வேறுவகையைச் சேர்ந்தது! இந்த அழகியைப் படைத்த ஈசன், வெங்கப்பன் கிட்டப்பன் மனைவிகளோடு இவளை வளரவிட்டதுதான் குற்றம். கிட்டப்பன் பெண் சாதிக்குக் குழந்தை குட்டி கிடையாது. ஆனால், இனி மேலும் பிறக்கலாம். முழுதும் கைவிரிப்பதற்கு இல்லை. ஏனென்றால் மணமாகி நான்கு வருஷங்கள் தான் ஆகி யிருந்தன. ஆனால், வெங்கப்பன் வீட்டுக்காரிக்கு பதி னறு வருஷத்திற்கு முந்தி பிள்ளைப் பேறு அளித்த பக வான் பிறகு கருணைக் கண்திறந்து 'மக்கட் செல்வம்' அளிக்க ஏனோ மறந்து விட்டான். இதற்காக மனைவியா வது; கணவனாவது, நேர் முகமாகவோ அல்லது மறை முகமாகவோ வருந்திய தாகத்தெரியவில்லை. ஆகவே பதி னறு வயசுப் புதல்வி, சீரும் சிறப்புமாய், சாதாரண அன்ன விசாரம், என், மற்ற நவீன நங்கையர் போன்ற

தேகவிசாரம்—கொஞ்சம் பகிரங்கமாகச் சொன்னல் ‘காதல் விசாரம்’ இன்றி பூரிப்பாக வளர்ந்து வந்தாள்.

ஆனல், பெண்ணின் கலியாணத்தைப் பற்றியோ அல்லது செய்ய வேண்டிய சிரமத்தைக் குறித்தோ அண்ணனே தம்பியோ வருத்தப்பட்டதாகத் தெரியவில்லே. வருந்தக் காரணம் என்ன இருக்கிறது? எங்கோ ஒரு மாப்பிள்ளே, பதினறு வயதுக் கட்டழகிக்குப் பிறந்திருக்காமலா போகிருன்?

தோட்டத்தில் “அப்பாடி” என்று உட்காருவதற்கோ அல்லது “அப்பாடி” என்று உட்காரும்படி நேர்வதற்கோ சமயம் கிடைக்காது. ஆகையால் ‘ஓப்பன் கோட்டைக்’ கழற்றும் தொந்தரவோ, உடைந்து நிற்கட்டுமா விழட்டுமா என்று கேட்டுக்கொண்டிருக்கிற சாய்வு நாற்காலியோ முதலிய சிரமங்களின்றி, ஒரு வேப்ப மரத்து நிழலிலோ அல்லது வாரி வெளி பூவரசமரத்துக்குக் கீழே உட்காருகையில் “அப்பாடி” என்று வெங்கப்பனே கிட்டப்பனே நாளது தேதிவரை சொல்லியது கிடையாது. ஆனல் அப்படி வேலே ஓய்ந்து உட்கார்ந்துகொண் டிருக்கையில் தங்கள் பெண்ணேக் கண்டுவிட்டால் ‘திக்கென’ மனது அடித்துக்கொள்ளும். காரணம் என்ன என்று கேட்டால் அவர்கள் ‘பெண்டாட்டி மார்கள்’ தான் என்று ஒரு வார்த்தையில் சொல்லி விடலாம்.

பெண்டாட்டி இல்லாத கணவன் உண்டா? நல்ல கேள்வி; எல்லாருக்குந்தான் மனேவி உண்டு; குடும்பம் உண்டு. குடும்பத்தில் சண்டையும் உண்டு. ஆடல் பாடலேக் காட்டிலும் ஊடலிலேதான் இன்பம் அதிகம் என பழம் நூல்களும் பகர்கின்றன. இருக்கலாம் யார் இல்லே என்ருர்கள். இங்கே அந்த ஊடலேயா சொல்லப் போகிறேன்?

தோட்டத்திலே நாளது தேதிவரை பங்கு பிரித்துக் கொண்ட பின்னும் ‘இது என்னுது, அது உன்னுது’

என்று அவர்கள் தகராறு பண்ணிக்கொள்ளவில்லை. பஞ்சாயத்துச் செய்ய நாலுபேர் வந்து நின்றதுமில்லை. ஆனால், வெங்கப்பன், கிட்டப்பன் மனைவிமார்களுக்கு அக்கம் பக்கம் நாலைந்து வீட்டுக்காரர்களாவது தினம் பஞ்சாயத்துப் பண்ணிவிட வந்துகொண்டே இருக்கவேண்டும். இரண்டு வீட்டுக்கும் மத்தியில் ஒரு சின்ன ஒண்ணரை அடி மண் சுவர் போடப்பட்டிருந்தது. முன்புறம் சாணி தெளிக்கையில் எல்லை கோலாததால் வரும் பெரும் கஷ்டம். அந்த சின்ன மதிலை பெரிதாக்கி விடவேண்டும் என்று சின்னவன் மனைவி முயற்சி; ஆனால் அது பெரியவன் மனைவி கைபட்டுக் கால்பட்டு இடிந்துகொண்டே வந்தது. இவர்கள் சச்சரவானது பெண்ணைத் தூது அனுப்பும் படலத்தோடு வந்து நிற்கும்.

பிறகு, இரவு நீதி ஸ்தலத்திலே தங்களுக்குத் தீர்ப்புக் கிடைக்கும் என்று அவர்கள் ஏங்கி எதிர்பார்த்து நிற்கையிலே, கணவன்மார்கள் வீடுவந்து உண்டபிறகு வெற்றிலையும் புகையிலைக் குச்சியையும் ஒருமுறை பதம் பார்த்தானதிற்கப்புறம் வழக்கம்போல முடக்கிக்கொள்வார்கள். மறுபடி விடியுமுன், தோட்டத்தில்தான் அவர்களைக் காணலாம்.

இதற்காக, இரண்டு மனைவிமார்களும் குறைந்தது வாரத்திற்கு ஏழு முறையாவது தோட்டத்திற்குப் பெண்ணை அவர்களிடம் அனுப்பிக் குறை தீர்க்க மன்றாடுவது வழக்கமாகிவிட்டது.

எத்தனை நாளைக்கு மனிதன் ஒன்றையே கேட்டுக் கொண்டிருப்பது? எல்லை கடந்து விஷயம் போய்க்கொண்டிருந்ததோடு பெண்ணுக்கு வேறு ஓயாத்தொல்லை. ஒண்ணரை மைல் வீட்டுக்கும் தோட்டத்திற்கும் நடப்பதோடு, 'நடுநிலைமை' வேறு இந்தச் சின்ன வயதில் வகிக்க வேண்டியிருக்கிறது. அவளால் இந்தக் கஷ்டத்தைச் சகிக்க முடியவில்லை. பெண்ணும் ஆழ்ந்து யோசித்தாள்.

வீட்டிலும் முடிவாகத் தீர்மானித்து விட்டார்கள். "இண்ணக்கி இரண்டிலொன்று கேக்காமே வந்திடாதே" என்று அம்மாவும் சின்னம்மாவும் சொல்லி அனுப்பினார்கள்.

"ஏண்டா, நீதான் இதுக்குச் சொல்லப்படாதா?" என்றான் அண்ணன்.

"நீதான் அவளுக்குச் சொல்லப்படாதா?" என்றான் தம்பி.

"இத்தனையும் நீ குடுக்கிற செல்லம்!"

"இல்லை, நீதான்."

ஆனால், அன்றைக்கு அவர்கள் வீட்டில் வந்து ஒன்றும் சொல்லவில்லை. மறுநாளும் மண்சுவர் தகராறு வழக்கப்படி நடந்தது. பெண்ணைத் தூதும் அனுப்பினார்கள்.

இந்தத் தடவை வீட்டிலிருந்து சோர்ந்த முகத்துடன் அந்த கன்னி புறப்படவில்லை. தலை சீவி வாசலில் இருந்த பூவையும் எடுத்து வைத்துக்கொண்டாள். நேராகத் தோட்டத்திற்கு மேற்கே போகவேண்டியவள், மேற்கே வந்து பிறகு தெற்கே திரும்பினாள். அருகில்தான் கிழக்குத் தோட்டத்து ஐயன் கிணறு. எந்தச்சாமி புண்ணியமோ அங்கே மாத்திரம் எப்போதும் கிணற்றில் தண்ணீர் மூய்வதில்லை. அறுபதாம் வருஷத்துப் பஞ்சத்தின் போதுகூட கையில் தொடும்' அளவு தண்ணீர் இருந்ததாம். கொஞ்சதூரத்தில் நின்று பார்த்தாள். யாரும் அங்கே இல்லை. எதிரில்தான் நாக்கில் ஊசி குத்திக்கொண்டு காசு வாங்கும் மாரியாத்தாக்காரி வந்து கொண்டிருந்தாள். நாக்கில் ஊசி குத்திக்கொண்டு காசு வாங்கவரும் அந்த மாரியாத்தாக்காரியிடம் மாரி அம்மனிடம் உள்ள பக்தியே இந்தப் பெண்ணுக்கு உண்டு. சின்ன வயசிலிருந்தே இந்த உணர்ச்சி ஏற்பட்டிருந்தது. தன்னை வதைக்கு உள்ளாக்கிக்கொள்வதிலிருந்து மற்றவர்களின் அனுதாபத்துக்கு உரியவளாகி காலம் தள்ளிவந்தாள் அந்த ஊசி குத்திக்கொள்ளும் பெண். தன் துன்

பத்தைக் கண்டு மற்றவர் மனம் இரங்கவேண்டுமென் பதே அவள் கோரிக்கை. நாளதுவரை அந்தக் கோரிக்கை பயன் அளித்தே வந்தது. இது தெரிந்தோ தெரியாமலோ இந்த இளம்பெண் மனசிலே ஊறி வந்தது.

அவள் சின்ன வயதிலிருந்தே தன்னோடொத்த சிறு மிகள் மணல் வீட்டைக் காலால் அழித்துவிட்டால் தன் தலையில் மண்ணை அள்ளிப் போட்டுக்கொள்வாள். படிப் படியாக அது வளர்ந்து நாளடைவில் தன்னையே பிறருக் காகப் பலியிட்டுக்கொள்ளும்—அதென்னவென்று சொல் வது—தியாகத்தின் உச்சியைத் தொட்டுவிட்டது அவள் மனசு. சத்தியாக்கிரகத்தின் தத்துவத்தைப்பற்றியோ, அல்லது தான் இன்னல்களை வரவழைத்துக் கொள்வதால் மற்றவர் இதயம் மாறும் என்ற சித்தாந்தமோ முறைப்படி படித்தோ அல்லது கேட்டோ அறிந்துகொண்டவள் அல்ல அவள். ஆனால், தன் செய்கைக்கு ஏதோ ஒரு பலன் உண்டு என்பதை அவள் உணர்ந்தாள். அதை எண்ணித்தான் போகிறாளோ?

ஒரு சிறு கிழுவமர முள்க் கொத்து வழியில் கிடந் தது. அதைத் தூக்கி வேலியோரம் போட்டுவிட்டு கிணற் றருகே வந்து நின்றாள். பிறகு குனிந்து பார்த்தாள். கண்ணாடியில் பார்ப்பதுபோல முகம் நன்றாகத் தெரிந்தது. பிறகு............

ஒரு நொடியில் ஊரே கிணற்றடியில் கூடிவிட்டது. பாதாள சோதி போடவேண்டாம் என்று கிட்டப்பனும் வெங்கப்பனும் கண்டிப்பாகச் சொல்லிவிட்டார்கள். செத்த பிணமாகத்தான் இருக்கட்டுமே. அந்தச் செத்த உடலுக்கும் ஒரு 'நோவு' தரும் கோலத்தைப் பார்க்க அவர்களுக்குச் சகிக்கவில்லை. எப்படியும் பொழுது மறை வதற்குள் மேலே வந்து விடும் என்று ஒரு முதியவர் சொன்னார். ஆனால் யாருக்குமே உண்மைக் காரணம் ஒரு துளிகூடத் தெரியாது.

சவத்தை எடுத்துக்கொண்டு போகையில் இருவருடைய பெண்டாட்டிமார்களின் ஒப்பாரிதான் பலமாக இருந்தது.

# போர்த் தீ

"பழிக்குப்பழி வாங்கியே தீருவேன்" என்று கோபம் பொங்க வீராசாமிக் கவுண்டர் எழுந்தார்.

அவருடைய கண்கள் தணல்போலக் கொதித்துக் கொண்டிருந்தன. உருட்டிக் கோவணம்போட்டுக் கட்டியிருந்த வேட்டியை இன்னும் நன்ருக இழுத்துக் கட்டிக் கொண்டு, பிச்சுவாக் கத்தியை மடிக்குள் சொருகினுர். நெற்றிக்கட்டுக் கைத்தடியை அலட்சியமாக எடுத்து, முன்னுல் கிடந்த சருகு செத்தைகளை ஒரு தட்டுத் தட்டினுர்.

நாச்சக்காள் இடுப்பில் இருந்த ஒரு வயதுக் கைக் குழந்தை வீறிட்டு அலறியது. நாச்சக்காள்கூடத் தன் கணவனுடைய இந்தப் போக்கைக் கண்டு என்ன சொல்வதெனத் தெரியாமல் கல்லாய்ச் சமைந்துவிட்டாள்.

வீரப்பன் சாந்தமான ஆசாமி. தப்புத் தண்டாவுக்குப் போகாத அப்பாவி. சுற்றுப்பக்கம் பாளையப்பட்டில் அவன் பேரைக் கேட்டாலே, "மகராசன், தெவச்ச வாயிக்குத் தண்ணி ஊத்தற புண்ணியவான்" என்றுதான் யாரும் போற்றுவார்கள்.

அப்பேர்ப்பட்ட சாது இப்படி ருத்திரமூர்த்தியாகப் பொங்கி எழக் காரணம்? தகுந்த காரணம் இருந்தது. அதற்குமுன், இரண்டு நாளைக்கு முன்னர் நடந்த சம்பவத்தைக் கவனிப்போம்.

வீரப்பனுடைய மூத்த மகளைக் கட்டிக்கொடுத்து ஆறு மாதந்தான் ஆகிறது. தாய் வீட்டிற்குப் போன வாரம் வந்திருந்தாள். அவள் வந்ததும் வராததுமாய் ஊர்ப்பெண்கள் எல்லாம் ஓடோடியும் வந்துவிட்டார்கள்.

ஊரிலுள்ள இளம் பெண்களுக்கெல்லாம் அவளிடம் உயிர். அவர்களுடைய ஆசைக்குத் தக்கபடி, அழகிலும் புத்தியிலும் அவள் ஈடு இணையற்று இருந்தாள்; ஒருத்தி தாழம்பூ கொண்டு வந்திருந்தாள். இன்னொருத்தி மல்லிகைப்பூ; மற்றவள் மருக்கொழுந்து; இப்படி ஒவ்வொருத்தியும் ஒவ்வொரு பூவாகக் கொண்டுவந்து, புதுப்பெண்ணைச் சிங்காரித்து விட்டார்கள். சாயங்காலம் எல்லாரும் தண்ணீர்க் குடமெடுத்து, புதுப்பெண்ணை முன்னால்விட்டு, வேடிக்கையும் விளையாட்டுமாகக் கிணற்றுக்குப் போனார்கள். ஊர்ப் பெரியதனக்காரர் தங்கமணி கவுண்டர் தோட்டத்தில்தான் நல்ல தண்ணீர். மற்றெல்லா இடங்களிலும் உப்புத் தண்ணீர்தான். தங்கமணி கவுண்டர் தம் கிணற்றில் நல்ல தண்ணீர் கிடைப்பதில் உள்ள பெருமையைவிடப் பட்டினத்துப் பள்ளிக்கூடத்தில் படிக்கும் பெரியசாமியை எண்ணி அதிகப் பெருமைப் பட்டுக் கொண்டிருந்தார்.

பெரியசாமியும் பட்டணத்திலிருந்து வந்து நாலைந்து நாட்கள் ஆயின. அன்றைக்குத்தான் தோட்டத்துப்பக்கம் புறப்பட்டான். ஊர் எல்லாம் சுற்றிவிட்டு வீட்டிற்குத் திரும்புகையில் புதுப்பெண் ஒய்யாரமாகக் குடத்துடன் நடந்துபோவதைப் பார்த்தான். பார்த்ததும் அவனுக்கு இது கனவுதானா என்ற சந்தேகம் வந்துவிட்டது. 'என்னடா இது? இந்த அஞ்சாறு வருஷமாகப் பட்டினத்துக் கடற்கரையிலும், காபி ஓட்டலிலும், டிராம் வண்டியிலும் காணாத ஓர் அற்புத அழகி இங்கிருக்கிறாளே! இது நம்ம ஊர்தானா?' என்ற சந்தேகம் வந்துவிட்டது.

இப்படி யோசித்துக்கொண்டே வந்து, பிள்ளையார் கோயில் வில்வமரத்துப் படிக்கட்டில் உட்கார்ந்து விட்டான். அன்றைக்குப் புதுப்பெண்ணைப் பார்த்ததோடு நிறுத்திக்கொண்டான். அடுத்தநாள் பேச்சுக் கொடுத்துப் பார்ப்பதற்கு வேண்டிய வேலையைச் செய்துவிட்

டான். ஊர்ப் பண்ணுடி மகன் அவன். ஆசைப்பட்டதை நிறைவேற்ற சமயம் கிடைத்தது.

"பார்த்தா ராசாத்தியாட்ட வாரயே?" என்று ஆரம்பித்தான்.

வெள்ளை உள்ளம் படைத்த அந்தப் பெண், "என்ன அண்ணு! தெரியிலையா?" என்று எதார்த்தமாகக் கேட்டாள்.

சீக்கிரத்திலே பெரியசாமி (புத்தியில்) சின்னச்சாமி என்பதைத் தெரிந்துகொண்டாள்.

சடக்கென்று அங்கிருந்து போய்விட்டாள். காற்றுப் போலச் செய்தி ஊரெங்கும் பரவிவிட்டது.

வீரப்பன் ஊர் வழக்கம்போல, 'ஏதோ தெரியாத்தனமாக நடந்துகொண்டதற்குக் குத்தம் வைத்தால் சரியாப் போச்சு' என்று நாலுபேரைக் கொண்டு நியாயமாகச் சொல்லிப் பார்த்தான்.

பண்ணுடி உறுமினர்.

"போடா, போ. இவனெல்லாம் குத்தம் வாங்கறத்துக்கு வந்திட்டானும். அவ்வளவுக்கு ஆயிப் போச்சா? நாளையும் பின்னியும் நீ இந்த ஊரிலே குடியிருந்திரு, பாத்திடலாம்" என்று எகத்தாளமாகப் பேசிவிட்டு எழுந்து போய்விட்டார். பக்கத்திலிருந்த நியாயக்காரரும், "நமக்கெதுக்குப் பெரிய எடத்து வம்பு" என்று தட்டிக்கழித்து அவர் அவர் பாட்டில் போய்விட்டார்கள். ஒரு பெரியவர் மாத்திரம், "அக்கிரமம், ஆரைக் காப்பாத்தி யிட்டது? கோபம் குடியைக் கெடுக்குமப்பா" என்று சொன்னர். ஆனல் அந்தப் பேச்சைக் கேட்க அங்கே அப்போது யாருமில்லை.

மறுநாள் வண்ணன் நாவிதன் 'கட்டுமானம்' பண்ணியாகிவிட்டது. 'கட்டுமானம்' பண்ணிவிட்டால், மறுபடி அந்த வீட்டுப் பக்கமே போகக்கூடாது என்பது அவர்களுக்குத் தெரியும். இருந்தாலும் மாரி மெதுவாகப்போய்,

"தலைமறைவா வரப்போக இருக்கறனுங்க. பண்ணடி கட்டுமானம் பண்ணினு, நேரா வாரதுக்கு ஆகுமங்களா? இருந்தாலும் இண்ணைக்கில்லாட்டி நாளைக்கு நீங்க கூடிக் குவீங்க. நீர் அடிச்சா நீர் வெலகியா போகுமுங்க" என்று வீராசாமிக் கவுண்டரிடம் கூறிவிட்டுத் தலையில் துண்டைப் போட்டுக்கொண்டு போய்விட்டான். மாரி சொல்லச் சொல்ல வீரப்பனுக்குச் சிரிப்பு வந்தது. "உம், பாக்கலாம்" என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டான்.

சென்ற இரண்டு நாளாக வீரப்பன் வீட்டிலிருந்து நல்ல தண்ணீருக்குப் பண்ணாடி தோட்டத்திற்கு யாரும் போவதில்லை. வண்ணான் நாவிதர்களை நிறுத்தினதோடு, பண்டாரத்தையும் இலை போட வேண்டாமெனப் பண்ணாடி சொல்லிவிட்டதால், வீரப்பன் வீட்டிற்கு இலை வருவதும் நின்றுவிட்டது.

ஆனால், இதையெல்லாம் சமாளித்துக்கொள்ள முடியாதவனா வீரப்பன்? மாமனூர் ஊரிலிருந்து அடுத்த நாளே, வண்ணானும் நாவிதனும் வந்து வாசலைக் கட்டிக்காத்துக் கொண்டிருந்தார்கள். தோட்டத்திலிருந்து அடுக்கடுக்காக வாழை இலை வந்துவிட்டது.

ஆனால், வீரப்பன் மனம் குமுறிக்கொண்டிருந்ததற்கு மற்றொரு முக்கிய காரணமும் இருந்தது. தோட்டத்திற்குப் போகும் தடத்தை அடைக்கப்போவதாகச்செய்தி எட்டியது. பண்ணாடி தோட்டமும், வீரப்பன் தோட்டமும் பக்கம் பக்கம். பண்ணாடி தன் தோட்டத்து வரப்பில் வேலி போட்டுவிட்டால், ஒரு மைல் சுற்றித்தான் வீரப்பன் தோட்டத்திற்குப் பண்டம் பாடி போய்ச் சேர வேண்டும். இத்தனைநாளும் பண்ணாடி தோட்டத்து வழியாகவே வீரப்பன் தன் தோட்டத்திற்குப் போய்க் கொண்டிருந்தான். மழைநாளில் ரொம்பக் கஷ்டம். அதோடு அந்த வழியாகப்போனால் ஊரிலுள்ளவர்களுக்

குத் தெரிந்துவிடும். அவர்களுக்கெல்லாம் இளக்கார மாயும் இருக்கும். 'இப்படியா செய்கிருன்?' என்று தன்னைத் தானே கேட்டுக்கொண்டான் வீரப்பன்.

"இந்தக் காரியக்காரன் இதைவிட என்னடா பண்ணிப் போடுவான்? ஒரே அடியில் உருட்டிப்போட்டு, கை காலை முறிச்சா என்னடா பாவம் வந்து சேரும்? போட்டாத்தான் பத்து வருசம் போடருன். செயிலுக்குத் தான் போனுப் போவுது. இங்கே புள்ளை குட்டி சோத் துக்குச் சாத்துக்கு இல்லீன்னு அளுகப் போகுது? நீ பாத்துக்கடா பண்ணயத்தை" என்று தன் மூத்த மக னிடம் வீரப்பன் ஆவேசமாகச் சொன்னுன்.

நாச்சக்காள் கண்கள் கண்ணீரைச் சிந்தின. மூத்த மகன் முரட்டு ஆள். "அதுக்கென்னுங்க ஐயா, ஆகட் டுங்க. நீங்க சித்தெ உக்காருங்க. பண்டம் பாடியைக் குறுக்காட்டறப்ப நான் பாத்துக்கறேன். இதெல்லாம் வெறுங் குடுகு. இந்த மெட்டு மெட்டி நம்மளை அசைக் கறதுக்கு ஆகுமுங்களா?" என்முன்.

அப்போது, 'தண்ணி போட' கோணற் பனைகள் முழுவதையும் தன் ஒருவனுக்கே தனியாக எடுத்திருக்கும் பண்ணையத்தாள் சடையன் ஓடோடியும் வந்தான்.

"அங்கொண்ணும் உண்ணி, உட்டு வைக்கறதுக்கு இல்லீங்க, அண்ணு. நெருப்புக்காடா முச்சூட்டையும் வெச்சுக் கொளுத்திப் போடறதானுங்க. தலைக்கு மேலே வந்திட்டுது. சாண்போனு என்னுங்க, மொளம்போனு என்னுங்க, அண்ணு" என்று பேசிக்கொண்டே வந்தான். பேச்சை நிறுத்திவிட்டு, தந்தையும் மகனும் சடையனையே பார்த்துக்கொண் டிருந்தார்கள்.

"கொள்ளுப் போரு அடிச்சுப் போட்டிருக்கானுங்க. சோளத்தட்டும் மலையாட்டக் கெடக்குதுங்க. ஒரு தீக் குச்சி தானுங்க. இண்ணைக்கு கொண்டம் மொளக்கிச் சொக்கப்பானை தாண்ட வேண்டியதானுங்க, அண்ணு.

காத்திகை மாசத்துக் காத்திலே எவன் வெச்சான்னு கண்டானுங்க. எந்தப் பயனே சூந்தை வீசிப் போட்டான்னு போருனுங்க. அப்பறம் ஊரிலே எத்தனை முண்டை தண்டை தலையிலே கை வச்சிருக்கானுங்க. நம் மனேயே சொல்றதுக்கு அவனென்ன சோசியமுங்க ளாண்ணு படிச்சிருக்கிருன்?" என்று சொல்லிவிட்டுச் சிரித்தான் சடையன்.

வீரப்பனும் ஒரு வெறியில், "வைடா, சாமி!" என்று சொல்லிவிட்டான். மகனும், மனைவியும் பேச வாய் திறக்குமுன் சடையன் காற்ருய்ப் பறந்துவிட்டான்.

இருள்; இருள். எங்கே பார்த்தாலும் ஒரே கருமை தான். வீட்டுத்திண்ணையிலே 'விருமத்தி' பிடித்தவன்போல உட்கார்ந்திருந்தான் வீரப்பன். நாச்சக்காள் உள்ளே தாலாட்டிக் கொண்டிருந்தாள். மூத்த மகனைக் காணும்.

பண்ணுடி தோட்டத்தில் அந்த வருஷம் விளைவு சற்று அதிகம். களத்தில் மலைபோல அடுக்கியிருந்தது கொள்ளுப் போர். அதற்குப் பக்கத்தில் இன்னெரு கருமலைபோல் குவிந்திருந்தது சோளப் போர்.

பக்கத்திலே இருந்த சங்கம் புதருக்குள்ளிருந்து ஓர் உருவம் மெதுவாக எட்டிப் பார்த்தது. எங்கும் சப்த மில்லை. வறண்ட பனை ஓலைகளின் "சரசர" சத்தந்தான் காற்று ஓசையோடு கலந்து கேட்டுக்கொண்டிருந்தது. அந்த உருவம் கையிலிருந்த எண்ணெய்ச் சிமினியை ஒரு துணிப் பந்தில் கொட்டியது. பிறகு ஒரு கோலில் நன்ருய் இறுக்கிக் கட்டி, தீப்பெட்டியைக் கொளுத்துவதற்குத் தயாராக எடுத்துக்கொண்டு மெதுவாக நடந்து வந்தது. இன்னும் சற்றுத் தூரத்திலே போருக்கு எதிர்ப்புறத்திலே கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்த மற்ருேர் உருவம் வேக மாக முன்னேக்கி வந்தது. முதலில் வந்தவன் நெருப்பை மூட்டிவிட்டான். ஆயிற்று போரில் வைப்பதற்கு இன்னும் ஒரு நிமிஷந்தான்.

"சடையா" என்ற குரலைக் கேட்டதும் அப்படியே அசந்துபோய்விட்டான். ஒரு கணம்தான். உடனே அவன் கையில் பட்டாக்கத்தி மின்னியது. "அட, சண்டாளா, நான்தான்" என்றதும், கண்டுகொண்டான் சடையன்.

"என் அப்புனு வந்தே" என்ருன் சடையன். அவன் கையில் கொளுந்துவிட்டு எரிந்துகொண்டிருந்தது தீப் பந்து.

"பேச நேரமில்லை."

ஆம். உண்மையிலே பேசத்தான் நேரமில்லை. இதற்குள் பண்ணுடியும் வேலி ஓரம் வருவது தெரிந்தது. வீரப்பன் குரலும் கேட்டமாதிரி இருந்தது. எல்லாம் ஒரு நொடியில் நிகழ்ந்து விட்டன. என்ன? சடையன் கையிலிருந்த தீப்பந்தை வெடுக்கெனப் பற்றித் தன் களத்துப் போரில் வைத்துவிட்டான் வீரப்பன். மறு கணம் வானளாவப் புகையும், நெருப்பும் எழுந்தன. அவர்கள் இருவரும் எப்படி மறைந்தார்களோ, தெரியாது!

பண்ணுடி பதைபதைத்துப் போனுர். ஊரே அவ்விடம் கூடிவிட்டது. தலையில் கைவைத்து, மூளும் நெருப்பையே பார்த்துக்கொண் டிருந்தார்.

"அடே, தண்ணி கொண்டாங்கப்பா. நம்மகெணத்துக்குப் போங்க. உம். சட்னு கொண்டாங்க" என்று கூச்சல் போட்டுக் கொண்டிருந்தார் பண்ணுடி.

"உன் கிணற்றுத் தண்ணி வேண்டாம்" என்று சொல்ல வாய் வந்தது. ஆனுல் வீரப்பன் மௌனமாகி விட்டான்.

பண்ணுடி எல்லாம் மறந்துவிட்டார். வீரப்பனும் மறந்தபடிதான் நின்று கொண்டிருந்தான். ஆனுலும் 'தன் போர்கள் போனுலும் போகட்டும், பண்ணுடி களத்துப் போர் நாசமாகாமல் தப்பியதே!' என்பதை மட்டும் அவன் மறக்கவில்லை.

# நந்தா விளக்கு

யாரோ இராமாயணப் பிரசங்கம் செய்கிருராம். நாளுக்கு நாள் கூட்டம் அதிகரித்து வருகிறதாம். சென்ற பத்துப் பதினைந்து நாளாகப் பக்கத்து ஊரில் பிரசங்கம் சிறப்பாக நடைபெற்று வருகிறதாம்.

இந்தத் தகவல் எனக்குக் கிடைத்ததும் போய்த்தான் பார்க்கலாமே, இல்லை, கேட்கலாமே என்ற ஆவல் உண்டாயிற்று. ஆனல் பிரசங்கங்களுக்குப் போவதென்ருலே எனக்குப் பிடிக்காத வேலை. ஒரே இடத்தில் இரண்டு மூன்று மணி நேரம் உட்கார்ந்து கொண்டிருப்பதாவது! சும்மா உட்கார்ந்து கொண்டிருந்தால் போதுமா? ஏதை யாவது கேட்டுக்கொண்டும் இருக்கவேண்டும் அல்லவா?

இருந்தபோதிலும், இராமாயணப் பிரசங்கியாரைப் பற்றியும், அவருடைய பிரசங்க விமரிசையையும் பலர் சொல்லக் கேள்விப்பட்ட பிறகு சும்மாவாவது போய்ப் பார்த்துவிட்டு வரவேண்டுமென்ற ஆசை என்னை உந்தித் தள்ளியது. அன்றைய மாலைப்பொழுதும் அதற்கேற்ப தூபம் போட்டது. "எங்காவது வெளியே தோட்டங்காட்டுப் பக்கமோ மைதானத்துப் புறங்களுக்கோ கோவில் குளத்தோரமோ போய் வெறும் பகற்கனவில் ஆழ்ந்திருப்பதைவிட 'இராம கதை'யைக் கேட்பதில் தப்பில்லையே என்று எண்ணிக்கொண்டே பிரசங்கத்திற்குப் புறப்பட்டேன்.

பிரசங்கம் முடிந்து திரும்பி வருகையில் நிலாக் கிளம்பிக் கொண்டிருந்தது. ஊரடி அம்மன் கோவிலுக்கு வந்து சேரவும், சுகமாக ஒளி வெள்ளம் நாலுபுறமும் பாய்ந்து ஓட ஆரம்பித்தது. வழக்கம்போல் அம்மன்

கோவிலுக்கு எதிரேயிருந்த அரச மரத்துக்குக் கீழுள்ள மணல் திட்டில் உட்கார்ந்தேன்.

அப்போதுதான் அம்மன் கோவில் பூஜையை முடித்துக்கொண்டு ராம பண்டாரம் வீட்டிற்குப்போய்க் கொண்டிருந்தான். 'கணக், கணக்' என்று கையிலுள்ள பெரிய மணி ஒலித்துக் கொண்டிருந்தது. வெயில் காலமாதலால், ஈசுவரன் கோவில் அய்யரும் அப்போதுதான் மாலைப் பூஜையை முடித்துக்கொண்டு, ஈசுவரன் கோவில் கதவுகளை இழுத்துப் பூட்டிக் கொண்டிருந்தார். கதவு மூடும் ஒலி, நிலவின் வெள்ளம், மணியின் நாதம், குளத்து நீரின் மெல்லிய அசைவு, அரச இலைகளின் படபடப்பு, அங்கிருந்த ஆலம் விழுதுகளின் நெளிவு, கிராமத்து இயற்கையான அமைதி இவைகளெல்லாம் சேர்ந்து ஒரு இனிய கனவை உள்ளத்தில் நிறைத்துக் கொண்டிருந்தது. பிரசங்கியார் உள்ளமுருகப் பாடிய,

" நந்தா விளக்கின்
நடுங்குகின்ற நங்கைமார் "

என்ற இரண்டு அடிகளும் நினைவுக் கோவையில் சுளித்து வட்டமிட்டுக் கொண்டே இருந்தது.

இராமனைப் பிரிந்த அயோத்தி வாசிகளின் மனநிலைச் சித்திரம்தான் அன்றையப் பிரசங்கம். ஆனால், பிரசங்கியார் என்ன சொன்னார், பக்தர்களும் ரசிக சிகாமணிகளும் அதை எப்படி எப்படியெல்லாம் அனுபவித்தார்கள் என்பதெல்லாம் ஒன்றும் எனக்கு ஞாபகத்திற்கு வரவில்லை. 'நந்தா விளக்கின்" என்ற அடியை மாத்திரம் என்னை யறியாமல் என் வாய் முணுமுணுத்துக் கொண்டிருந்தது.

எதிரிலுள்ள கோவிலுக்கு உள்ளேயிருந்து விளக்கின் பிரகாசம் கதவு இடுக்கு வழியாக நன்றாகத் தெரிந்தது.

அந்த மங்கா விளக்கு மனத்திரையிலே பலவிதக் கோலங்களை வரைய ஆரம்பித்தது. அய்யர் கதவுகளை நன்ருகச் சாத்தியபிறகு, மணி, விபூதித்தட்டு படிச்செம்பு முதலியவைகளைப் பையன் வசம் வீட்டிற்குக் கொடுத்து விட்டு, நான் உட்கார்ந்திருக்கும் இடத்திற்கு வந்து சேர்ந்தார். அரச இலைபோல எதையோ தேடி ஊஞ்சலாடிக் கொண்டிருந்த என் மனக் கதவை மெதுவாகத் தட்டுவதுபோலிருந்தது. இடைவிடாது, பல்லாயிரக் கணக்கான வருஷங்களாகக் கோவிலிலே ஒளியின் அமுதத்தைப் பரப்பிக் கொண்டிருக்கும் நந்தா விளக்கு, எங்கள் உள்ளத்தை எப்படியோ கொள்ளை கொண்டு விட்டது. தாமரைத் தண்டிலே திரி செய்து, நெய் விளக்குகள் எப்போதும் நிறைந்திருக்கும் அதிசயத்தை வர்ணித்துக் கொண்டு வருகையில், பழைய காலத்து மன்னர்களின் மாட மாளிகைகள் ஞாபகத்திற்கு வந்தன. என்னுடைய உற்சாகத்தையும் ஆனந்தத்தையும் கண்டு 'நந்தா விளக்கின்' ஆரம்பக் கதை ஒன்றை அய்யர் ஆரம்பித்தார்.

## (1)

நம்முடைய ஊர் மேற்கே உயர்ந்தும் கிழக்கே தாழ்ந்தும் இருப்பதைக் கவனித்தீர்களா? ஒரு காலத்தில் பத்துப் பதினைந்து ஆயிரம் வருஷத்திற்கு முன்பு என்று வைத்துக் கொள்ளுங்கள். ஊர் ஒரே சமமாக இருந்தது. 'சமம் என்ருல் எல்லா விஷயத்திலும் சமம்' என்பதைக் குறிப்பிட்டே ஆகவேண்டும். கிழக்கேயுள்ள பள்ளம் அப்போது கிடையாது. எப்போதோ வந்த வெள்ளத்தின் கொடுமை, கீழ்ப்புறமிருந்த வீடுகளைப் பாழாக்கிவிட்டது. வீடுகள் போனதும் அங்கே பள்ளம் மிஞ்சிவிட்டது. அதே மாதிரிதான் வாழ்க்கையிலும் சில கோரப் புயல்கள் வீசின. அதன் காரணமாக 'மேடு பள்ளங்கள்' எற்

பட்டுவிட்டது. இன்னொரு வெள்ளம் வந்தால், கிழக்கே யுள்ள பள்ளம் மேடு ஆகலாம். அல்லது இந்த மேடு பள்ளமாகி இரண்டும் ஒரே 'சமம்' ஆகிவிடலாம். ஆனால் பலதரப்பட்ட வாழ்க்கையின் 'மேடு பள்ளங்கள்' சமம் ஆக முடியுமா? குழம்பிக் கலங்கிக் கிடக்கும் இந்த நிலைமை மாற ஏதாவது வெள்ளம் வருமா? சாமான்ய வெள்ளத்தாலே அது சாத்தியப்படுமா?"

கோவில் அய்யர் என் முகத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார். அய்யர் இவ்வளவு ஆவேசமாகப் பேசுவார் என்று நான் எதிர்பார்க்கவேயில்லை. அன்றைய இயற்கையின் சௌந்தர்யம் அவர் இதயத்தைத் தீண்டி ஏதாவது 'கனல் பொறி'யை ஏற்றி விட்டதா? யார் கண்டார்கள்? எப்படியும் இருக்கலாம்.

"சரி. அந்தக் கதை இருக்கட்டும். நாம் ஆரம்பித்த கதை வேறு அல்லவா" என்று சிரித்துக்கொண்டே அய்யர் தொடங்கினார்.

"இந்தக் கோவிலுக்கு உள்ளே கல்லில் செதுக்கி யிருக்கும் எழுத்தைக் கவனித்தீர்களா? கவனித்திருக்க லாம். ஆனால் படித்திருக்க முடியுமா? எப்படி முடியும்? எழுத்து விளங்காது. விளங்கினாலும் படிக்க முடியாது. படித்தாலும் புரியாது. ஆனால் புரியாமல் இருக்கட்டும் என்பதற்காக யாராவது கல்லில் செதுக்கி வைத்திருப் பார்களா என்ன? வரவர எழுத்துக்கள் கவனிப்பாரற்று இருந்தும் தேய்ந்தும் குறைந்து வந்துவிட்டன. ஆனால் நமக்கு வேண்டியது அதிலுள்ள ஒரு பெயர்மட்டுந்தான் 'சந்திர முதலியார்' என்று அந்த நடுச்சுவரிலே பதிந் திருப்பதை நாளைக்கும் நீங்கள் காணலாம். கொஞ்சம் மஞ்சளை அறைத்துக் கல்லில் தடவிப் பார்த்தால் 'சந்திர முதலியார்' என்பது பளிச்சென்று தெரியும். யார் இந்த முதலியார்? அவருக்கும், கல்லுக்கும் என்ன சம்பந்தம்? ஒருவேளை கோவிலைக் கட்டிய கொத்தரோ? அழியாமல்

தன் பெயரை கல்லில் செதுக்கி விட்டாரோ என்று யோசிக்கத் தோன்றலாம்.

ஆனால் முதலியார் தம் பெயர் வெளியே கொஞ்சங் கூடத் தெரியக்கூடாது என்று அடக்க ஒடுக்கமாக இருந்தார். எந்த நல்ல காரியத்துக்கும் ஊரில் அவர் பெயர் தான் அடிபட்டுக்கொண் டிருந்தது. இப்படி அடக்கமாக இருந்த அவர் பெயர் அம்பலத்திற்கு வந்தது ஒரு பரிதாபக் கதை! அதைத்தான் சொல்லிக்கொண்டு வருகிறேன்.

சந்திர முதலியாருக்குக் கலியாண மாகிறபோது வயசு முப்பதுக்குமே லிருக்கும். அவருடைய கலியாணம் ஒவ்வொரு வருஷமும் ஒத்திப் போடப்பட்டுக்கொண்டே இருந்தது. முதலியாருடைய தகப்பனர் பெரிய பணக்காரர். செல்வாக்குள்ளவர். தமக்குத் தகுந்த இடமாகப் பார்த்துக்கொண்டே வந்தார். வருஷங்கள் அடுக்கடுக்காக கழிந்துவிட்டதே கண்ட பலன். தக்க இடமாக ஒன்றும் கிடைக்கவில்லை. கடைசியாக ஓரிடத்தில் நிச்சயம் செய்தார்கள். பெண்ணின் அழகும் குணமும் தான் அதற்கு முக்கிய காரணங்கள். புதுப்பெண் ஊருக்கு வந்தாள். கிராமத்துப் பெண்களெல்லாம் புது மங்கையை அன்போடு வரவேற்ருர்கள். அந்த அழகிக்கு இந்த உலகம் ஒரு ஆனந்தப் பூங்காவாகத் தோற்றமளித்தது.

சந்திர முதலியார் பெருத்த பாக்கியசாலி என்று எண்ணி அகமகிழ்ந்தார். இப்பேர்ப்பட்ட தம்பதிகளை இதற்குமுன் கண்டதில்லை என்று எல்லோரும் வாயார வாழ்த்தினர்கள். சந்திர முதலியார் தந்தை, பேரக் குழந்தைகளைக் கண்ணில் பார்த்த பிறகுதான் இந்த உலகிலிருந்து விடை பெற்றுக்கொள்வது என்ற ஆசைகொண்டிருந்தார். அவர் ஆசையும் நிறைவேறியது. கண்ணை மூடியபோது அவருக்குக் கொஞ்சமும் இந்த உலகத்துக் கவலைகள் இருக்கவில்லை.

பத்து வருஷங்கள் வாழ்வின் ஏற்றத் தாழ்வுகளில் ஏறி இறங்கியபிறகு முதலியாருக்கு இந்த உலகம் எப்படிக் காட்சி அளித்தது தெரியுமா? முதலில் ஆனந்தப் பூங்காவாக இருந்ததே மாயம்தானே என்ற சந்தேகத்தைக் கிளறி விட்டுவிட்டது. நாளுக்குநாள் அவர் சந்தேகம் பலப்பட்டு வந்தது. இதற்கு தக்க ஒரு காரணமிருந்தது.

ஊரெல்லாம் தம் மனைவியை அழகி, அழகி என்று போற்றி வந்தார்களே, அந்தப் போற்றுதலுக்குத் தகுந்த மாதிரி அல்லவா குழந்தை பிறக்கும் என்று நம்பி இருந்தார். பெற்றோருக்கு மாளாத் துயரத்தை விளைவிக்கும் 'சந்திரா'வை அவர்கள் என்ன செய்வார்கள்? சந்திரா தான் மூத்த பெண். அங்கங்கள் கட்டை குட்டையாக இருந்தன. வளர்ச்சி பெறவில்லை. ஆனல், இளையவள் சாந்தா அதற்கு நேர்மார். 'தளதள' வென்று அவள் வளர்ந்திருந்தாள். மூத்தவள் நிழலில் வளர்ந்த கொடி போல 'சோகை' பிடித்திருந்தாள். இளையவள் காற்றும் வெயிலும் நன்ருகப்பட்ட இடத்தில் செழித்த பூங்கொம்பு போலச் சுந்தரமாக விளங்கினள்.

முன்பெல்லாம் 'விதி' என்ருல் சந்திர முதலியார் சிரிப்பாகச் சிரிப்பார். "தலை எழுத்து" என்று யாராவது சொல்லிக் கையைக் கட்டி உட்கார்ந்துகொண்டிருந்தால் அவருக்குப் பிரமாதமான கோபம் வந்துவிடும். ஆனல் இப்போது முதலியார், "இது விதியின் செயல், என் தலையெழுத்து மாத்திரம் அல்ல. மனைவி தலையிலும் இப்படித்தான் எழுதி யிருக்கிறது" என்று தம்மைத்தாமே நொந்துகொண்டார். இதில் இன்னொரு பரிதாபம் என்னவென்ருல், மூத்தவளுக்கு கலியாண பருவம் வந்து, அதுவும் தாண்டிவிட்டது. இருபது இருபத்து ஒன்று என வருஷங்கள் வளர்ந்துகொண்டே போயின. சின்னவள் இரண்டு வயசுதான் சின்னவள். ஆனல் மூத்தவள் இருக்க

சின்னவளுக்குக் கலியாணம் பண்ணலாமா? ஆனந்தத்தோடும், அன்போடும் வரவேற்ற அதே கிராமம், 'அழகுக்கு ஏற்ற அழகு!' என்று தாயையும் சேர்ந்து முணுமுணுக்கத் தொடங்கியது. 'என்ன பண்ணுவது' எனத் தோன்ருமல் தாய் தேம்பினுள். தாய் உள்ளத்தின் தவிப்பை விவரிப்பது அசாத்தியம்.

ஜோடிக் குருவிகளைப்போல ஒன்ருக வளர்ந்த அக்காளும் தங்கையும் தனித்து இருக்கும்போது பெரியவள், "இவர்களுக்குத்தான் ஒன்றும் தெரிவதில்லையே. எனக்குக் கலியாணம் இல்லாமல் போனுல் என்ன? உனக்கு சீக்கிரமாக செய்யப்படாதோ?" என்று சொல்வாள். "இல்லை, அக்கா, இப்போது என்ன? உனக்கும் ஆகி விடும். நீ என்ன அப்படி அழகில்லாமலா இருக்கிருய்?" என்று சொல்வாள். தங்கையின் தேறுதல் மொழிகள் அக்காளுக்குத் தெரியாதா என்ன? மார்போடு அணைத்துக் கட்டிக்கொண்டே, "இல்லைக் கண்ணே, அது நடக்காது, ஒருநாளும் ஆகாது, ஆனுலும் என்ன? நீ சந்தோஷமாக இருந்தால் போதும்" என்று கண்ணீர் வடிப்பாள்.

மூத்த பெண் சந்திரா தனக்கு இந்த ஜென்மத்திலே இனிக் கலியாணம் ஆவப்போவதில்லை என்று பரிபூரணமாக நம்பினுள். இது ஏதோ தெய்வக் குற்றம் என்று அவள் உள்ளூர எண்ணிக்கொண்டு, தன் மனசை ரொம்பவும் சாந்தப்படுத்திக்கொண்டாள். தனக்கு மணமாகாதிருப்பதற்காக தன்னைவிடப் பெற்ருேருக்கு அதிகக் கவலையாக இருக்கிறதே என்பதுதான் அவள் துக்கம்.

ஆனுல், பெற்ருேரும் சகோதரியும் வேறு விதமாக முடிவு செய்திருந்தார்கள். யாராவது வருவான். வராமலா போய்விடுவான். உலகிலே எத்தனையோ அதிசயங்கள் நிகழ்கின்றன. கண்ணில்லாக் கபோதிகளுக்கும் கலியாணமாவதில்லையா? அங்க ஹீனர்களுக்கும் மணம் ஆகியே

கிருகிறது. பிறகு அவர்கள் வாழ்விலே சந்தோஷம் நிலவுவதில்லையா? குழந்தை குட்டிகள் தங்கம்போலப் பிறப்பதையும் கண்டுதானே இருக்கிறோம்? எவ்வளவோ விகாரமுடையவர்களுக்கெல்லாம் அமோகமாகத் திருமணம் நடக்கும்போது சந்திராவுக்கு என்ன வந்துவிட்டது? அப்படி என்ன பார்க்க வோசமாகவா இருக்கிருள்? தலைக்குப் பூவைத்து, நகைபோட்டு, நல்ல புடவை உடுத்தி அவள் அங்குமிங்கும் நடமாடுகையில் மற்றப் பெண்களுக்கும் அவளுக்கும் அதிகமாகவா வித்தியாசம் தெரிகிறது?

ஏதோ கண்களும், உடம்பும், ஒரு 'மாதிரியாக' இருந்தால், என்ன? அடே யப்பா உலகிலுள்ள பெண்களெல்லாம் நேராகத் தெய்வலோகத்திலிருந்து வந்துவிட்டவர்கள் தாகுக்கும்? அரம்பை மேனகைகளையே கலியாணம் பண்ணிக்கொள்வது என்று ஆடவர்கள் முடிவு பண்ணி விட்டால், சபாஷ்! இந்த 'மன்மதர்கள்' மற்றவர்களைப் பழிக்கவும் ஆரம்பித்து விடுகிருர்களே! .

இதுவும், இன்னும் பலவும் எண்ணி எண்ணி அவர்கள் மனசைத் தேற்றிக்கொண்டிருந்தார்கள். இந்தச் சமயத்தில்தான் முதலியாருடைய மாமா மகன் வந்து சேர்ந்தான். பையன் நல்ல அழகானவன். சந்திர முதலியாருக்கு அது சங்கடமாக இருந்தது. அவனுக்கு நிறைய பூமியும் இருந்தது. பாழாய்ப்போன சொத்து இல்லாவிட்டாலும் கொடுத்து உதவி விடலாமே! ஆனல் குணம் இல்லாவிட்டால்! அதுதானே முக்கியத் தேவையாக இருக்கிறது இப்போது. எப்படியாவது தன் 'மருமக'னைத் திருப்திப்படுத்தி, மூத்த பெண்ணை கட்டிக்கொடுத்து விடுவது என்று முடிவு பண்ணினர்.

இந்த அழகிய வாலிபனுக்கு இயற்கைக் காட்சிகளிலே ஆனந்தம் அதிகம். மாலை, காலை வேளைகளில் தோட்டத்தில் உலவி வரும்போது, பனித் துளிகளின்

பரவசத்தையும், இளங்கதிர்களின் ஜாலா விநோதங்களை யும் கண்டு சொக்கிப்போய் நின்று மகிழ்வான். முதலியா ரும் வேடிக்கை விநோதப் பேச்சுக்களோடு தம் குமா ரத்திகளுடன் கூடவே உலவி வருவார். அவனுடைய கண்கள் எதையோ தேடித் திரிகின்றனவே? எங்கே? அதை ஏன் சொல்லவேண்டும்? இளையவள் சாந்தாவைச் சுற்றியே அவன் பார்வை வட்டமிட்டுக்கொண்டிருக்கும். பெரியவள் நிற்கும் திக்கு நோக்கி ஒருதரம்கூட திரும்ப மாட்டான். இதைக் கவனிக்கையில் சாந்தாவும் சஞ்சலம் கொள்ளுவாள். தளிர்போன்ற அவளுடைய தங்க நிற மேனியிலும் தவிப்பின் சாயை இலேசாகப் படரும்.

முதலியார் இரண்டு மூன்று மாசம் காத்திருந்து பார்த்துவிட்டுத் தாமே பேச்சை ஆரம்பித்தார். "என்ன, மாணிக்கம், கலியாணம் பண்ணுகிற வயசும் வந்துவிட் டது. பெண்ணுக்கும் அதிகத்தூரம் போகவேண்டிய தில்லை! உனக்கே தெரியாதா? சரி, உன் சம்மதம் எப் படி? முகூர்த்தம் எப்போது வைத்துக்கொள்ளலாம்?" என்று கேட்டார்.

மாணிக்கம் சிரித்துக்கொண்டே, "அதற்கென்ன அவசரம்? ஆகட்டும் பெரியவளுக்குக் கலியாணம்! அடுத்த முகூர்த்தத்திலேயே எங்களுடையதை வைத்துக் கொள்ளலாம்" என்றான்.

"எங்களுடையதை" என்றால் யார் யார் என்பதை விவரிக்கவேண்டியதில்லை அல்லவா? சாந்தாவுக்கும் முகம் சுருங்கியது. அவள் முகச் சுருக்கமோ, அல்லது முதலி யார் மனச்சுருக்கமோ, பிறகு மாணிக்கம் சுருக்கமாகவே அங்கிருந்து கிளம்பிவிட்டான்.

சொந்த மருமகனே இப்படி என்றால் மற்றவர்களைப் பற்றிச் சொல்லவேண்டுமா? ஊரில் இந்தப் பேச்சுப் பரவ அதிகநேரம் பிடிக்கவில்லை. "இருப்பதைச் சொன் னால் கோபமா?" என்று சனங்கள் மேலும் மேலும் அந்

தப் பேச்சுக்கு ஊக்கம் கொடுத்துப் பேசினார்கள். ஆனால் அது எத்தகைய வருத்தத்தைப் பெண்ணைப் பெற்றவளுக்கு அளித்தது என்பதை ஈசனே அறிவான்!

சந்திர முதலியாருக்கு பாட்டுப் பரதநாட்டியம் என்றால் உயிர். ஆனால், கொஞ்சநாளாக அவர் எந்த விசேஷத்திலும் அவர் கலந்து கொள்வதில்லை. இதற்கு முக்கிய காரணம் எந்தக் 'கூட்டத்'திலும் அவரைப்பற்றியே பேச்சு அடிபடுவதாக நினைப்புத்தான். அந்த நினைப்புப் பொய்யோ மெய்யோ? உண்ணும்போதும் உறங்கும் போதும் குடும்பக் கவலை அதாவது பெண்ணின் கலியாண விஷயம் அவரை வதைத்துக்கொண்டே இருந்தது. நாட்டியம் அன்று கோவிலில் நடைபெற்றபோதும் அந்தச் சிந்தனையில்தான் மூழ்கி இருந்தார். நாட்டியம் முடிந்து கூட்டம் கலைந்தபிறகு, "என்ன அண்ணா, மற்றவர்கள் சொல்வதில் எனக்கு நம்பிக்கை இல்லை. நீங்கள் சொல்லுங்கள். எப்படி இருந்தது நாட்டியம்?" என்று மோகனாங்கி கேட்டாள். எப்போதுமே மோகனம் மிக மோகனமாக நாட்டியம் ஆடுவாள். அந்தக் காலத்திலே நாட்டியத்தில் மோகனத்திற்கு இணை மோகனமேதான்.

## (2)

அய்யர் இந்த இடத்தில் சற்று நிறுத்தினார். என் பதிலுக்காக காத்திருக்கிறாராக்கும் என்று நினைத்தேன். ஆனால் மேலே தொடங்கினார்.

"தெய்வத்திடம் அன்புகொண்ட பெண்கள் அந்தக் கலையில் ஈடுபட்டார்கள். கடவுளைக் காதலித்தவர்களை மனிதர்கள் மிக மதித்தார்கள். மரியாதையாக நடந்து கொண்டார்கள். தெய்வங்களுக்கு அடியார்கள் என்று அந்தப் பெண்களும் பெருமிதம் கொண்டார்கள். யாரைக்

கண்டும் அவர்கள் தலை வணங்கவில்லை. தலை வணங்கும் படியும் நடந்து கொள்ளவில்லை. என்ன புரிகிறதா? அவர்கள் உள்ளங்கள் புனிதமாக இருந்தது. அந்தப் பண்பின் காரணமாக மற்றவர்களையும் மலரச் செய்தார்கள். அந்த நடன ராணிகளின் கதை மற்றவர்களைக் கொள்ளை கொண்டது.

இப்படியாக நாட்டியமும், நடன மங்கைகளும் மிக உன்னத நிலையிலே இருந்த அந்தக் காலத்திலே, அதன் முழுச் சிறப்பையும் சந்திர முதலியார் உணர்ந்திருந்தார். ஆகையாலே, மனோஹரி தன் உள்ளத்தைத் திறந்து முதலியாரிடம் கேட்டதும். "தெய்வமே இன்று உவகை கொண்டிருக்கும்" என்று சந்திர முதலியார் சொன்னர்.

மாலையில் கோவில் விளக்கேற்ற, குத்து விளக்கைத் துடைத்துக் கொண்டிருந்த மோகனத்தின் மனசில் அது தேனமிர்தமாகப் பாய்ந்தது. 'தெய்வம்' என்றவுடன் பாழும் தெய்வம் தனக்கு ஒரு வழி காட்டலாகாதா என்று முதலியார் வருந்தினர். 'தெய்வக் குற்றம், ஏதாவது தான் செய்து விட்டோமா' என்று எண்ணி வருந்தவும் வருந்தினர்.

மோகனத்திற்குக் குழந்தை குட்டி கிடையாது. அவளுக்கு வெகு நாளாகவே மூத்தபெண் 'சந்திரா'விடம் வாஞ்சை உண்டு. "அண்ண, நான் சந்திராவை வளர்ப்புப் பெண்ணக எடுத்துக் கொள்ளுகிறேன். என் குறையும் தீர்ந்துவிடும். எனக்குப்பின் கோவிலிலே விளக்கேற்ற ஒரு 'குல விளக்கும்' கிடைத்துவிடும்." என்ருள்.

முதலியாருக்கு அவள் சொன்னது 'சரி' எனப் பட்டது. மோகனத்திற்கு மட்டிலடங்காத மகிழ்ச்சி உண்டாகி விட்டது. "அண்ண, அப்பேர்ப்பட்ட அற்புத மான சேவைக்கு நம்முடைய சந்திராதான் சரியான பெண்! ஆகா! கோவில் விளங்கும். அங்கே விளக்கை ஏற்றுவது என்ருல் அதன் அர்த்தம் என்ன? ஒளியை

எங்கும், மற்றவர் வாழ்விலெங்கும் எரிய விடுவது என்பதுதான் நேரான அர்த்தம். இன்றைக்கு ஒருநாள் மட்டுமா சுடர் எரிகிறது? மனித குலம் உள்ள மட்டும். வாழ்க்கை விளக்கு, நந்தா விளக்கு எரிந்து கொண்டு தான் இருக்கும். இருக்க வேண்டும்."

சந்திர முதலியாருக்கு எல்லாக் குறையுமே தீர்ந்த மாதிரி இருந்தது. பாமர மக்களை, அறியாமையில் உழன்று தவித்துக் கரை காணமல் தத்தளிக்கும் இந்த அஞ்ஞானிகளை மணப்பதிலிருந்து நீங்கி தம் மகள் ஜோதிப் பிழப்பையே காதலித்து மணந்து கரையேறி விட்டதாக அப்போதே ஒரு ஆனந்தக் கனவு கண்டார். ஆண்டவனுக்கு அடிமையான ஆண்டாள், புன்னகை தவழக் காட்சி தந்தாள். பெண் குலத்தின் தெய் வங்கள் இவர்கள் தாம் எனக் களிப்புக் கடலில் ஆழ்ந்தார்.

## (3)

சந்திர முதலியாரின் மனைவியும் ஆனந்தத் தென்ற லிலே உலவிக் கொண்டிருந்தார். இந்த உலுத்துப்போன சமுகம், முன்னைய முணுமுணுப்பை நீக்கி விட்டு இப் போது பக்திக் கண்களோடு சந்திரா, நந்தா விளக்கை ஏற்றும் காட்சியிலே மெய்ம்மறந்து நின்றது.

இதற்குப் பிறகு சிறியவள் சாந்தாவுக்கு திருமணம் நடைபெறுவதில் துளியும் சிரமம் ஏற்படவே இல்லை.

கண்ணைத் திறந்தேன். சந்திர முதலியாரும், அய்ய ரும், மனோஹரியும் எங்கே? வெண் நுரைகள் எங்கே பார்த்தாலும் பொங்கிப் படிந்திருந்தது. அடடா! நிலவு வெள்ளமும், மணியின் நாதமும், கோவிலும், நந்தா விளக் கும் சேர்ந்து, ஒரு இன்பக் கோவையை அல்லவா இதயத் தில் நிறைத்துவிட்டது என்று அதிசயித்துக்கொண்டே வீட்டை நோக்கிப் புறப்பட்டேன்.

# பாறையருகே

எங்கும் இருள் பரவ ஆரம்பித்தது. சூரியனுடைய கடைசிக் கிரணங்கள் நொய்யல் நதியின் நீரினின்றும் மறைந்தன. பெண்கள் நீரைக் குடங்களில் நிறைத்துக் கொண்டு கிராமத்திற்கு விரைவாக நடந்து சென்றனர். அவர்கள் கைவளையல்களின் இனிய ஒலியும், குடத்து ஜலம் துள்ளி விழும் ஓசையும் மெதுவாகக் காற்றுடன் கலந்து விட்டது. சந்தோஷமாகப் பேசிக் கொண்டே தோப்பின் வழியாகச் சென்றனர் பெண்கள். நதிக்கும், ஊருக்கும் இடையேயுள்ளது தோப்பு ஒன்றே. தோப்பினுள் நிறைய விருக்ஷங்கள், புஷ்பக் கொடிகள், பல கனிதரும் செடிகள்; இன்னும் மூங்கிலும், நாணலும் ஒரே அடர்த்தியாக கவிழ்ந்திருந்தது.

அங்கே காவல் காக்க ஒருவன் இருந்தான். வயோதிகன். அந்தக் கிழவனே வெகு காலமாக அத்தோப்பில் வசித்து வருகிறான். செடி, கொடிகளுக்கு நதியிலிருந்து ஜலம் கொண்டுவந்து விடுவதும், புஷ்பங்களைப் பிறர் பறித்துப் போகாமல் பார்த்துக்கொள்வதுமே அவனது வேலை.

தன்னுடைய சிறிது குடிசையினுள், சுருட்டைப் புகைத்துக்கொண்டே கிழவன் உட்கார்ந்திருந்தான். சற்று தூரத்தில் சருகுகள் அசையும் ஓசை கேட்டது. காலடிச் சப்தத்தால் ஏற்பட்ட அரவம் என்பதை உணர்ந்து கொண்ட கிழவன் மெதுவாக எட்டிப் பார்த்தான். நன்றாய் இருட்டி இருந்ததால், விளக்கை எடுத்துக்கொண்டு வெளியே வந்தான். ஜில்லென்று மெதுவாக காற்று வீசிக்கொண்டு சென்றது. இருளில் ஒன்றுமே தெரியவில்லை. அருகில் யாரோ வருகிறார்களென்று தான் தெரிந்தது. நிச்சயமாக இன்னாரென்று புலனாகவில்லை.

"யார்? கந்தனா?" என்றான் தோட்டக்காரன்.

கந்தன் அருகிலுள்ள கிராமவாசி. தினந்தோறும் தோப்பிற்கு வருவான். இரவு நெடுநேரம் வரை பேசிக் கொண்டிருந்து விட்டுப் போவான்.

"ஐயா, நான் ஒரு நாடோடி" என்று ஒரு குரல் கேட்டது. கிழவன் குடிசையினுள் புகுந்து விளக்கேற்றினான். விருந்தாளியான நாடோடியை உள்ளே வரவேற்றான். வயோதிகன் புது மனிதரை வெளிச்சத்தில் கண்டான். அந்த சாதுவினுடைய நீண்டு வளர்ந்த தாடியும், ரோமத்தால் மறைக்கப்பட்ட முகமும், ஆழ்ந்த பிரகாசம் பொருந்திய கண்களும் பார்ப்பவரை வசப்படுத்துவனவாய் இருந்தன. தோட்டக்காரன் அவரை புதுமை கலந்த மதிப்போடு பார்த்துச் சொன்னான்; "சுவாமி, தாங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்? நிரம்பவும் களைத்திருக்கிறீர்கள்போ லிருக்கிறது. முதலில் கொஞ்சம் பால் சாப்பிடுங்கள்" என ஓர் கிண்ணத்தில் பாலைக்கொண்டு வந்து வைத்தான். அந்தச் சாது தன்னுடைய விழிகளால் கூர்ந்து நோக்கி, தலையை மெதுவாக அசைத்துப் பாலை எடுத்துக் கையில் வைத்துக்கொண்டான். தன்முன் நிற்கும் கிழவனையும், ஜில்லென்று குடிசையினுள் நுழையும் குளிர்காற்றையும் ஏககாலத்தில் நோக்கினான்! 'சடசட' வென்று தூரத்தில் எங்கோ மூங்கில் ஒன்றையொன்று மோதிக்கொண்டது.

நாடோடி சாவதானமாகப் பாலைக் குடித்தான். அவனது மகிழ்ச்சியைத் தெரிவிப்பவன்போல் தோட்டக்காரனைக் கருணையோடு பார்த்தான்.

"சுவாமி! தங்களுக்கு எந்த ஊர்?"

நாடோடி "இதே ஊர்தான்" என்று சொன்னான்.

கிழவன் திடுக்கிட்டுப் போனான். அவனால் நம்ப முடியவில்லை. 'இந்த ஊரா?' ஆச்சர்யத்தால் மேலே பேச முடியாமல் நின்றான். "எனக்கு எல்லோரையும்

தெரியுமே இந்த ஊரில். பால்யத்திலேயே வெளியே போய்விட்டீர்களா? இப்பொழுது உறவினர் யாராவது இருக்கிறார்களா?" என்று கேட்டான்.

"ஆம் இருக்கிறார்கள். அண்ணன், தம்பி எல்லோருமே தாயாருக்கு அப்போதே வயது நிறைந்திருந்தது. இப்பொழுது இறந்துவிட்டிருப்பாள்!"

"ஐயா, சாதுவே. நீர் ஏன் போனீர்? மறுபடியும் சொந்த பூமிக்கே வந்துவிட்டீரே, இதுவே சந்தோஷம்" என்றான் கிழவன்.

"சே! நானா மறுபடியும் வந்துவிட்டேன்? இந்த ஊரிலா இருக்கப் போகிறேன்? எவ்வளவோ காலமாகிறதே இதைவிட்டு. என் மனதிலிருந்து வெகு காலத்திற்கு முன்பே மறைந்துவிட்டது இதனுடைய சாயை. என் நெஞ்சில் மறதியாகத் தோன்றக்கூட இல்லை இந்த ஊர். நான் எதை மறந்திருக்க முயற்சித்தேனோ—எந்த பூமியை என் சிந்தனையிலிருந்து அகற்றிவிட எண்ணிப் போனேனோ அதை என் கண்ணால் கண்டவுடன் சென்று போன நிகழ்ச்சிகள் உருக்கொண்டு முன் வருகின்றன..."

நாடோடி கொஞ்சநேரம் பேசாமலிருந்தான். அவனுடைய கண்கள் குடிசையின் கீழ்பாகத்தைப் பார்த்திருந்தன. கிழவன் ஆவல் நிறைந்த மனத்தை அடக்கிக் கொண்டு, பேசாமலிருந்தான்.

நாடோடி மீண்டும் பேசலானான்; "அப்பா, என்னுடைய கதையை ஆவலுடன் கேட்க விரும்புகிறீர்களா?"

தன்னைப் 'அப்பா' என்றழைத்ததில், வயோதிகனுக்குண்டான ஆனந்தத்தைச் சொல்லி முடியாது; "எனக்கும் ஒரு மகன் இருந்தால், எப்படிக் கொஞ்சி விளையாடுவான். குளத்தங்கரையிலோ, ஆற்றோரத்திலோ, மாந்தோப்பிலோ விளையாடிக்கொண்டிருப்பான். நான் கூப்பிட்டால், எப்படி ஓடிவருவான்" கிழவனது மனம் கலைந்து

திரிந்து ஒரு முடிவுக்கு வந்தது. நாடோடிமேல் பன்மடங்கு பிரியம் ஏற்பட்டது.

அந்த சாது கிழவனை இட்டுக்கொண்டு, அருகிலிருந்த நீரோடையின் சமீபம் சென்றான். இருவரும் மணலின் மீது உட்கார்ந்தனர். தோட்டக்காரனுக்கு என்றுமில்லாத உற்சாகம். அவனுக்கு கதை கேட்பதென்றாலே பிரியம். அதிலும், ஒரு மகானின் ஜீவிய சரித்திரத்தைக் கேட்கும் பாக்யம் கிடைத்ததில் எல்லையற்ற ஆனந்தம்!

சாது கதையைத் தொடங்கினான் :—

"நான் இந்த ஊரிலே பிறந்து வளர்ந்தேன். என் தகப்பனார் சிறு வயதிலே இறந்து போனார். என் சகோதரர் இருவரும் இன்னும் உயிருடனிருக்கின்றனர். அந்த நாட்களில் நான் எவ்வளவு 'சுறுசுறு'ப்போடும் உற்சாகத்தோடும் காரியங்களைச் செய்து வந்தேன். ஆஹா! எவ்வளவு தடவை இந்தத் தோப்பிற்கு வந்திருக்கிறேன். இதே வாய்க்காலில் எவ்வளவோ நாட்கள் ஓடியாடி விளையாடியிருக்கிறேன். வைகறையில் மலரவிருந்த புஷ்பங்களை இரவிலேயே பறித்துக்கொண்டு ஓடியிருக்கிறேன்.

"எனக்கு வயது வந்ததும், விவாகமும் நிச்சயமாயிற்று. விவாக தினத்தன்று மாலை இங்கு வந்தேன். இதே தோப்பிற்குத் தான். என்னுடன் யாருமில்லை. நான் தனியாகவேதான் வந்திருந்தேன். புது மணக்கோலத்தோடு நீண்ட நேரம் உலாவிக்கொண்டிருந்தேன். எங்கள் வீட்டிற்குத் தேவையான அளவு, இளம் பெண்களுக்காக வேண்டியமட்டும் பூக்களைப் பறித்துக்கொண்டேன். அப்பொழுதெல்லாம் மலர் பறிப்பதை யாரும் தடுப்பாரில்லை. காவல் கட்டு எல்லாம் அதற்குப் பின்புதான் ஏற்பட்டது.

"அஸ்தமன சமயம். வீட்டிற்குப் போகலாமெனப் புறப்பட்டேன். ஆனல், ஏனோ என் மனம் இந்த இடத்

தைவிட்டு பிரிய இசையவில்லை. சற்று, இருந்து போனல் போகிறதென்று இங்கே உட்கார்ந்தேன்,'' என்று சற்று தூரத்தில் உள்ள பாறையைச் சுட்டிக் காட்டினன்.

தோட்டக்காரன் அந்தப் பாறையைப் பார்த்தான். அன்று காலை ஒரு சிறுவன் புஷ்பத்தைப் பறித்துக்கொண்டு ஓடும்போது துரத்தினன். அந்த துஷ்டப் பையன் எறிந்து விட்டு ஓடிப்போன. இரண்டு மூன்று பூக்கள் உலர்ந்து கிடந்தன.

கிழவன், நன்ருகப் போர்த்துக்கொண்டு சாதுவின் அருகில் நகர்ந்து உட்கார்ந்தான். மங்கின நிலா ஒளியில், ஒருவருடைய முகம், மற்றவருக்குத் தெளிவாகத் தெரிய வில்லை. தூரத்துக் காட்டுக் கப்பாலுள்ள மலைச்சரிவில், வழி தவறிய ஓர் ஆட்டின் கதறல் அந்தக் கற்பாறைகளில் எதிரொலித்தது. தீனமான குரலில் திகிலடைந்த பட்சி யொன்று, சிறகடித்துக் கத்திக்கொண்டே மரக்கிளையில் சென்று மறைந்தது. ஆனல் இவையெல்லாம் அவர்கள் புலன்களில் மோதவில்லை.

நாடோடி சொன்னன் :—

"நான் போகலாமென எழுந்தேன். "ஐயா, நில்லுங் கள்'' என்ற சப்தம் கேட்டுத் திரும்பினேன். தோப்பி லிருந்து என்னை நோக்கி ஒரு பெண் வந்தாள்.

"அவள் அருகில் வந்ததும், ஏதாவது பேசுவாள் என்று எதிர்பார்த்தேன். ஆனல் அவள் ஒன்றும் சொல்லவில்லை. நானும் பேசவில்லை. கடைசியில் அவளே தான் கேட்டாள், 'உங்களுக்குக் கலியாணமா?' என்று.

"எனக்கு இக்கேள்வி பெரும் ஆச்சர்யத்தை உண்டு பண்ணியது.

"ஆமாம், என்று சொன்னேன், அவள் அதற்கு மேல் என்ன சொல்லுவாளோ வென்று ஆவலோடு நோக்கினேன். மௌனமாக, அசைவற்று என்முன் நின்ருள்.

"அப்பொழுது நன்ருக இருட்டவில்லை யென்ருலும், அவள் முகத்தைப் பார்க்க எனக்கு விருப்பம் இல்லை.

"நீங்கள் கலியாணம் செய்துகொள்ளப் போகிறீர் களே, இதில் உங்களுக்கு சம்மதம் தானே?" என்ருள்.

'எனக்கு இதில் எந்தவிதமான ஆக்ஷேபணையுமில்லை. இருந்தாலும் சொல்லத் துணிவு இல்லை. அந்தப் பெண்ணை எனக்கு நன்ருகத் தெரியும். அவர்கள் வீட்டு மனிதர்கள் ஒவ்வொருவரையும் பற்றித் தெரியும். வயது வந்த பெண், இவ்விதமாக, என்னை ஏன் கேட்கிருள் என்று தெரிய வில்லை, பின்பு தெரிந்துகொண்டேன். தெரிந்தும் என்ன? "உக்கிரமான உஷ்ணத்தால் வாடிப்போகும் மலரைக் கையில் எடுக்கவில்லை."

"நான் மௌனமா யிருப்பதைக்கண்டு அவள், 'நான் இதுவரையில் எண்ணி யிருந்ததெல்லாம் வியர்த்தமாய்ப் போய்விட்டது. உங்கள் காலின்கீழ் இருந்து, தொண்டு செய்வதே எல்லாப் பதவிகளிலும் சிறந்ததென நான் கருதி யிருந்தேன். அது இவ்விதம் பாழ்பட்டுப் போகு மென நினைக்கவில்லை. ஆண்டவன் உங்களைக் காப்பாற்றட் டும்' என்ருள்.

"இந்த உருக்கமான வார்த்தைகளைச் சொல்லும் போது அவளது கண்களினின்றும் கண்ணீர் பெருகி ஓடியது.

"எனக்கு என்ன செய்வதென்று தோன்றவில்லை. அவள் ஒரு வார்த்தை பேச இடம் கொடுத்திருந்தால் என் வாழ்வின் வழியே வேறு பாதையில் சென்றிருக்கும். என் லக்ஷியங்களைச் சிதறவடித்து, என் கொள்கைகளை உதறித் தள்ளி நான் ஏன் அலைந்து திரிகிறேன்? அதை என்ன வென்று சொல்வேன்! பார்த்துக்கொண் டிருக்கையி லேயே, என் எதிரில் ஓடும் நீரில் குதித்து விட்டாள்! நொய் யல் தன்னேடு அணைத்துக்கொண்டது. பிரவாகமாக ஓடும் ஜலம் அவளை அடித்துக்கொண்டு போய்விட்டது..."

நாடோடியின் கண்கள் கலங்கி யிருந்தது. கிழவன் மெதுவாக தலையைத் தூக்கினன்.

மேலே சொன்னன் :—

"நான், அதன் பிறகு, அந்த இடத்தில் ஒரு கணமும் நிற்கவில்லை. கால்கள் சென்றபடி நடந்தேன். எங்கு போகிறேன் என்று தெரியாது. மனம் போனபடி சிந்தனையின்றி நடந்து திரிந்தேன். எங்கும் சாந்தி ஏற்படவில்லை. அமைதியான வாழ்க்கைக்கு ஸ்திரமான அஸ்திவாரம் நிச்சயமாய் வேண்டும். சொல்லி என்ன பயன்? நான் இந்தப் பிராந்தியத்திற்கு வருவது உண்டு. இந்நேரமானல் என்னுடைய வருகைக்காக ஏங்கித் தவித்துக்கொண்டிருக்கும், 'ஆத்மா' ஒன்று இங்கே சுற்றுகிறதாவென்று பார்ப்பது வழக்கம். என் வருகைக்காக அவள் காத்துக்கொண்டிருக்க மாட்டாளா? பெரியவரே! இனி யொருதடவை அவளைக் காணும் பாக்கியம் கிடைக்காதா?......"

நாடோடியின் வாழ்க்கை வரலாறு தோட்டக்காரனுக்கு, துக்கத்தைத் தந்தது. அவள் இறந்துபோயிருப்பாள். வீணுக அலைந்து திரிகிருன். கிழவன் ஏதோ சொல்ல வாயெடுத்தான். அதற்குள், நாடோடி, "நேரமாகிறது. நான் போகிறேன். அதோ வைகறைப் பாட்டை பட்சிகள் பாடுகின்றன. பொழுது சீக்கிரம் புலரும்போலிருக்கிறது. என் இன்பத்தை எங்காவது சென்று பார்க்கிறேன்" என்று எழுந்து நடந்தான். நாடோடியின் தோற்றம் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்தது. அவனது உருவம் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்துவிட்டது. அவனது கதை மட்டும் கிழவனது நெஞ்சை நோகவைத்தது.

அவ்வயோதிகன், இரவு வேளைகளில் அப்பாறையின் மேலமர்ந்து ஓடும் நீரைப் பார்த்துக்கொண்டிருக்கிருன். என்ன பார்க்கிருனே?

---

காமராசர் பல்கலைக்கழகம் ... அவ்வை ... நூலகம்.

கையத(து) அவன் கடலுள்ச

சங்கமால்; பூண்பதுவுட

செய்யசங்(கு) ஈன்ற

செழு

★

ஆபரணங்களை அணிந்து மனம்

மகிழ்வார்கள். அணிகள்

அவர்களுக்கு அத்தனை ஆவல்!

★

அன்புக்கும் ஆசைக்கும்,

மட்டுமா பொன் அணிகள் எடுத்து

டாக விளங்குகின் ? P. A. R.

மாளிகை ஒரு தங்கக் காவியமே தான்

பூர்ண திருப்தி உங்களுக்கு அங்கு,

ரணமாக உண்டு!


மார்பி லணிவதற்கே—நல்ல
வைர மணிக ளுண்டு
பேர் பெற்றுவாழ்வதற்கே—பசும்
பொன்னணி யாவுமுண்டு
P.A. ராஜ செட்டியார் &
பிரதர்
"ராஜா"

"பிறகு சொல்கிறேன்"

"இப்போதே சொல்லுங்கள். முழுவதும் கேட்கா விட்டால் எனக்குத் திருப்தி ஏற்படாது."

"இது உங்கள் திருப்தியை மட்டும் பொறுத்ததல்ல."

"பின்னே, யாருக்கு அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது? பார்த்தால் எல்லோரும் ஒரே பரவச நிலையில்தானே இருக்கிறார்கள்.

"ஆமாம்; அவர்களுக்கு இதிலுள்ள மர்மம் தெரியாது."

அரசனுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. "மர்மமா?" என்று கேட்டுவிட்டு யோசனை செய்யத் தொடங்கினார்.

"இப்போது யோசிப்பதற்கு நேரமில்லை. இந்தப் பெண்ணை எழுந்துபோகச் சொல்லட்டுமா?" என்றார் மந்திரி.

"அரசனுக்குக் கொஞ்சம் ஆத்திரம் உண்டாயிற்று. மந்திரி, உங்கள் போக்கு எனக்குப் புரியவில்லை. அரசை ஆள்கிற மந்திரி என்ற தோரணையில் இப்போது பேசாதீர்கள். கவியை அனுபவிக்கிற நிலையில் இருந்து சிந்தித்துப் பாருங்கள்" என்றார்.

இதைக்கேட்டு மந்திரி கொஞ்சமும் மாறுதல் அடையவில்லை.

"என்னை என்ன வேண்டுமானாலும் சொல்லுங்கள். ஆனால் கவியை மட்டும் இனிக் கேட்காதீர்கள். இது எனது பணிவான வேண்டுகோள்"

"கண்டிப்பாகக் காரணத்தைக் கூறவேண்டும்."

"அவள் அறம் பாடுகிறாள்" என்றார் பரிதாபகரமான குரலில் மந்திரி.

"அறம் பாடுகிறாள்" என்று கேட்டவுடன் அங்கிருந்த அனைவருடைய முகமும் சட்டென மாறிப்போய் விட்டது. அடுத்த கணமே என்னவோ ஒரு கொடிய மிருகத்தைப் பார்ப்பதைப்போல அனைவரும் ரஞ்சிதத்